முரசொலி

ஆசிரியர்: மு.கருணாநிதி

–வார இதழ்–

முரசு 4 | 28—3—58 வெள்ளி | ஒலி 46



வாயைத் திறப்பதில்லை; திறந்தாலோ வாடை சகிப்பதில்லை!

★ கற்பனை உரையாடல் ★

இவரும் அவரும்!

[அண்ணா — ஆச்சாரியார் சந்திப்புக்கு ஆயிரமாயிரம் கற்பனை உரையாடல்களை எழுப்பிய பெரியாரை, சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் — இந்தியை உடனடியாக ஆட்சி மொழியாக்கி ஆங்கிலத்தை அடியோடு மூட்டை கட்டி அனுப்ப விரும்பும் திரு லோகியா அவர்கள் சந்தித்துப் பேசினர். அதன் விளைவாக எழுந்ததே இந்தக் கற்பனை உரையாடல்.]

லோகியா: பெரியார் ஜீ!...... ஆபகீ தபீயத் கைசா கை?...

பெரியார்: இது என்னடா இது?......ஒன்றுமே புரியவில்லையே!...

மொழி பெயர்ப்பாளர்: தங்களின் உடல் நலம் எப்படி இருக்கிறதெனக் கேட்கிறார்!

பெரியார்: வரவேண்டும்! வரவேண்டும்!...உடம்பெல்லாம் தேவலாம்!

[பிறகு இருவரும் சாதாரண ஆங்கிலத்தில் பேசிக்கொள்கிறார்கள்.]

லோகியா: என்ன இருந்தாலும் அநியாயம்! அநியாயம்! ...தங்களை இந்த வயதில் இப்படிச் சிறையில் அடைப்பது மிக மிக அநியாயம்! ஜாதி ஒழிய வேண்டுமென பாடுபட்டதற்கா இத்தகைய தண்டனை?...எனக்கும் இந்த ஜாதிகளைக் கண்டால் பிடிக்காது!...தாங்கள் வெளியே வந்ததும் கூறுங்கள்; இருவரும் சேர்ந்து ஒரு போராட்டம் ஆரம்பிக்கலாம்!...

பெரியார்: அது சரி...நீங்களும் காமராசர் ஆட்சியை அநியாயமென்று கூறுகிறீர்களே!... தப்பு! தப்பு! அவரைப் போல இந்த உலகத்திலே உண்டா? பச்சைத் தமிழர் ஆட்சிக்கு வந்ததினாலேதான் தமிழர்களுக்கு உத்தியோகங்கள் கிடைத்தன! பார்ப்பனர்கள் ஆதிக்கம் குறைந்தது!...நீங்கள் எது சொன்னாலும் காமராசரை மட்டும் எனக்ெதிரே குறை கூறாதீர்கள்!...

லோகியா: அதிசயமாக இருக்கிறதே!...சிறையிலே அடைத்தாலும் நீங்கள் காமராசரைப் பாராட்டுவது மிகமிக அதிசயம்தான்!

பெரியார்: சிறையிலே போடுவது அவர் கடமை!...கடமையைச் சரியாகச் செய்வதா குற்றம்?...

லோகியா: தடியாலே அடிப்பதும் துப்பாக்கியாலே சுடுவதும்கூட குற்றமில்லையா?... இந்தியன் எக்ஸ்பிரசிலே போட்டிருந்தது சரிதான்! காமராசர் உங்களுக்குச் சலுகை வழங்குவது உண்மைதான் போலும்! சிறையிலே போடுவதுபோல் போட்டு, உங்களுக்கு இப்பொழுது முதல் தரமான வைத்திய சிகிச்சைகள் அளிக்கிறார்! அரசியல் அல்லல்களிலிருந்து ஓய்வு கொடுத்து உங்கள் உடம்பைத் தேற்றி அனுப்புவதற்காகவேதான் சிறையிலே போட்டிருக்கிறார் போலும்!

பெரியார்: நீங்களும் இந்தக் கண்ணீர்த்துளிகள் மாதிரி ஆரம்பித்து விட்டீர்களா!

லோகியா: அவர்கள் என்ன செய்வார்கள்?......உங்களுக்கு கிடைப்பதுபோல் பொதுக் கூட்டத்தில் பேச அவர்களுக்கு அனுமதி கிடைக்கிறதா?......உங்களுக்குக் கிடைப்பதுபோல் முதல்தர மருத்துவ விடுதி வாழ்க்கைதான் அவர்களுக்குக் கிடைக்கிறதா?...அவர்களைப் பிடித்துக் கொலை, கொள்ளை நடத்திய கைதிகளைப்போல் மட்டரகமான சிறையிலேயல்லவா அடைத்தார்கள்?......

பெரியார்: அவர்களைப் பற்றி என்னிடம் சொல்லாதீர்கள்! அவர்களுக்கென்ன?...... ராஜாஜியோட சேரணும்...... இந்த காமராசர் ஆட்சியைக் கவிழ்க்கணும்.....இதுதான் அவர்கள் கவலை!...... இந்த நாட்டைப்பற்றி யார் கவலைப் படுகிறார்கள்? பின்னே இந்த நாடு எப்படி உருப்படும்...! இல்லை, கேட்கிறேன்!...இந்த நாட்டு நலத்தைப்பற்றி அந்த க. து. க்களுக்கு அக்கறையுண்டான்னு கேட்கிறேன்! எலெக்சன்லே நின்னு அசெம்பிளிக்குப் போனுங்களே ...... என்ன லாபம்?

லோகியா: அவங்க பேச்செல்லாம் பரவாயில்லீங்களே!... சர்க்கார்கூட பயந்து நடக்கிறாங்க! அவர்கள் போனதிலேயிருந்து சென்னை அசெம்பிளி இந்தியா முழுவதையும் கவர்ந்திருக்கிறது!...

பெரியார்: வெங்காயம்! ஆமா, பேசத்தான் தெரியும்! வேறே என்ன செய்யத் தெரியும்? சபாநாயகர் மணியடித்தால் வாயைப் பொத்திகிட்டு கீழே உட்காரத்தான் தெரியும்! மந்திரிகளுக்கு வாய்ப்பூட்டு போடப்போவதா கூறினார்களே... இவர்கள் வாய்க்குத்தான் வாய்ப்பூட்டுப் போட்டுக்கொண்டாங்க!...

லோகியா: அது சரி! தங்கள் "சாதி ஒழிப்பு" வேலை எது வரையில் உள்ளது?...அடியேனையும் நீங்கள் அந்த இயக்கத்தில் சேர்த்துக்கொள்ளக் கூடாதா?...

பெரியார்: இந்த நாட்டிலே... "சாதி ஒழியனும்னு யார் சொல்லுறு?... நா...ன்...தான்" "சாதி ஒழிக! சாதி ஒழிக!" என்று தொண்டை காய்ந்து போகும்படிக் கத்திக்கொண்டிருப்பவனும் நான்தான்!... இங்கே யாரு என் பேச்சே கேட்கிறா?...இந்தக் கண்ணீர் துளிகள்கூட என் பேச்சைக் கேட்கிறதில்லை! பார்ப்பானோட சேர்ந்து குலாவுறதும், இராஜாஜியோடு சேர்ந்து சூழ்ச்சிகள் செய்றதும்தான் அவர்கள் வேலை!

லோகியா: அப்படி ஒன்றும் "சூழ்ச்சி" செய்வதாகத் தெரியவில்லையே!...... ஆனால் அவர்கள் மிக மிக குறுகிய எண்ணமுள்ளவர்கள்!... பாருங்களேன்; இந்தி கூடாதென்கிறார்கள்!... இந்தியை சீக்கிரமே நாட்டு மொழியாக்கி, இந்தியா முழுவதும் பரப்பவில்லையே என நான் பாடு பட்டுக்கொண்டு வருகிறேன்! கடைக்குக் கடை போய் ஆங்கில எழுத்துக்களை அழித்து நான் புரட்சி செய்துகொண்டுவருகிறேன்!

சென்ற 16-3-58 ஞாயிறு மாலை 5-மணிக்கு, சுப்பிரமணியபுரத்தில் திராவிட முன்னேற்றக்கழகக் கிளையின் சார்பில் சிறப்புக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அப்போது தஞ்சை மாவட்ட மாநாட்டு நிதிக்காக செயலாளர் இராசன் அவர்கள், மு. க. விடம் ரூ. 200 கொடுத்தார்.

இவர்கள் என்னடான்னா "இந்தி ஆட்சி மொழியாகக் கூடாது! உலக மொழி ஆங்கிலமே இந்தியாவின் பொது மொழியாக இருக்கட்டுமே!" எனக் கூக்குரலிடுகின்றனர்! ஆங்கிலமா நம் தேசிய மொழியாவது?... நம் நாட்டு மொழியிருக்க உலக மொழி நம் பொது மொழியாவதா?... எவ்வளவு குறுகிய மனப்பான்மை? திரு ம. பொ. சி. —சிலம்பின் செல்வர்கூட இந்தியை ஆதரிக்கும்பொழுது இவர்களுக்கு என்னவாம்? ......அவர்கள் போகட்டும்!... சிறைத் தண்டனை காலம் முடிந்தவுடன் ஒரு "திடுதிடு" போராட்டம் ஆரம்பித்து இந்தச் சாதிகளைச் சட சட வென அழித்து ஒழிக்கவேண்டும்! என்ன சொல்கிறீர்?... ஆனால் இந்தப் பிரிவினை பற்றியெல்லாம் பேசக்கூடாது!...

பெரியார்: பிரிவினையெல்லாம் பின்னால் எழுந்த பிரச்சினை!... சாதி ஒழிப்புதான் முதன் முதலில் நான் ஆரம்பித்த புரட்சி! அதிலே ஏற்பட்ட மோதல்கள் காரணமாக எழுந்தது தான் மற்ற பிரச்சினைகள்!... சாதி ஒழியனும்! பார்ப்பான்—சூத்திரன் வேற்றுமை நீங்கனும்!...இந்த நாட்டிலே பாப்பான் இருக்கக்கூடாது! ...பார்ப்பன ஜாதின்னு ஒன்னு இருக்கவேகூடாது!... ஆமாம்!...

லோகியா: இந்தப் பிரிவினைக் கொள்கையை மட்டும் விட்டு விட்டுப் பாடுபட்டால் சாதிகளை இருக்குமிடம் தெரியாமல் ஓட்டலாம்!...

பெரியார்: பிரிவினையைப் பற்றித்தான் பேசவில்லை யென்கிறேனே! முதலில் திராவிடநாடு திராவிடருக்கே என்றேனே! பிறகு இந்த கேரளம், ஆந்திரம் எல்லாம் ஒத்துவராது போலிருந்தது! சிறிது நாட்களாகத் தமிழ்நாடு தமிழருக்கே எனக்கூறிவருகிறேன்! அதெல்லாம் கிடக்கட்டும்; முதல்லே இந்த சாதிகளை ஒழுச்சுக் கட்டணும்!

லோகியா: (மனதிற்குள்)...... இந்த மனுசனுக்கு கொள்கை மாறிக் கொண்டே இருக்கும் போலிருக்கிறது!......இவரை இழுத்துப் போட்டால் அடுத்த தேர்தலிலே நம்மை ஆதரித்தாலும் ஆதரிப்பார்!...... "தமிழனுச்சே யெனக் காமராசை ஆதரிச்சா ...... தமிழனுக்குத்துரோகியா மாறிவிட்டார்!... ஏதோ தமிழனுச்சே ...தமிழர்களுக்கு உத்தியோகம் கொடுப்பாரேன்னு பார்த்தா இப்படி மாறுவாரின்னு நான் நினைக்கலே!...... எனவே இந்த நாட்டுக்கு இன்றைய நிலையிலே சோஷலிஸ்ட் கட்சிதான் சிறந்தது! ...எனவே அவர்களை ஆதரியுங்கள்!" என்று ஓர் அறிக்கை விட்டாலும் விடுவார்! எனவே இவர் பிடியை விடக்கூடாது!...

பெரியார்: என்னங்க பலமா யோசனையிலே ஆழ்ந்து விட்டீர்களே!....பயப்படாதீங்க! இந்த சாதிகள்—வெங்காயம் எல்லாவற்றையும் ஒழித்துக் கட்டிடுவோம்!...

லோகியா: பயப்படுவதா? எதற்கு? நீங்களிருக்க பயமேன்?......ஒன்னு சாதிகள் ஒழியனும்! அல்லது நம் கொள்கை ஒழியனும்!...நான் வருகிறேன்! வணக்கம்!

—"இன்பபுரியான்"

வெள்ளி ௨௮-௩-௫௮ சென்னை

இந்தி வெறி!

வடநாட்டிலே இந்தி வெறியர்களுக்குத் தலைமை தாங்கி நடத்திக் கொடுக்கப் புதிது புதிதானவர்கள் அவ்வப்போது தோன்றிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களுள் குறிப்பிடத்தக்கவராக இப்போது டாக்டர் லோகியா மாறியிருக்கிறார்.

1. டெல்லி சர்க்கார் உடனடியாக இந்தியை ஆட்சிமொழியாக்க வேண்டும்.

2. மத்திய சர்க்காருக்கும் மாநிலங்களுக்குமிடையே கடிதப் போக்குவரத்து இந்தியிலேயே நடைபெற வேண்டும்.

3. பல்கலைக் கழகங்களில் பி. ஏ. வகுப்புவரை தாய்மொழி போதனா மொழியாகவும் அதற்குமேல் இந்தி போதனா மொழியாகவும் வேண்டும்.

4. உயர்நீதி மன்றங்கள், தலைமை உயர்நீதி மன்றம்—இங்கெல்லாம் இந்தியிலேயே அலுவல்கள் நடைபெற வேண்டும்.

5. பாராளுமன்றத்தில் இந்தியிலேயே பேச வேண்டும்.

—என்பன போன்ற திட்டங்களால்தான் இந்திய உபகண்டத்திலிருந்து ஆங்கிலத்தை ஒழித்துக் கட்ட முடியும் என்று கூறிக்கொண்டு இந்தி வெறியர்களுக்குத் தலைமை தாங்கும் நிரந்தர இட்லராகியிருக்கிறார், டாக்டர் லோகியா! அதற்காக அவர் ஏப்ரல் 6–ம் தேதி முதல் 13–ந்தேதி வரை 'ஆங்கில ஒழிப்பு வாரம்' கொண்டாடுவதற்கும் ஆவன செய்திருக்கிறார்.

ஆனால் விந்தியத்திற்கு வடக்கே இந்தி வெறியர்களின் எண்ணிக்கைதான் பெருகி வருகிறது-என்று யாரும் நினைப்பதற்கு இடமில்லாமல் இந்தி எதிர்ப்பாளர்களின் தொகையும் அதிகரித்து வருவது உண்மையிலேயே ஆனந்தம் தரக்கூடிய செய்தியாகும்.

அதிலும் எந்த மாநிலங்களையும்விட மொழிப் பற்றிற்கும் தாய்நாட்டுப் பற்றிற்கும் பெயர் பெற்று விளங்கும் வங்கம் விந்தியம் தாண்டிய இந்தி எதிர்ப்பாளர்களின் முன்னணியில் நிற்பது உண்மையிலேயே இந்தி இட்லர்களுக்குப் பேரிடியாகத்தான் இருக்கும்.

தமிழகத்தில் மட்டும்தான் இந்திக்கு எதிர்ப்பு இருக்கிறது; அந்த எதிர்ப்பும் கணக்கில் சேர்த்துக்கொள்ள முடியாத சிறுபான்மையோரிடமிருந்துதான் — என்று திரித்துக் கூறியவர்கள் திகைத்துப் போகும் விதத்திலே மேற்கு வங்கப் பிரதமர் டாக்டர் பி. சி. ராய் வீரமும் விவேகமும் பொங்கி வழிய சிங்கநாதம் புரிந்திருக்கிறார் :

"இந்தியாவின் ஒற்றுமைக்காக ஒரே மொழி வேண்டும் என்ற பிரமை அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்களுக்கு இருந்தது

"ஆனால், ஒரு நாட்டின் ஒற்றுமை, பல மொழிகள் இருப்பதினால் பாதிக்கப்படுவதில்லை.

"தேசிய மொழிகளாக ரஷ்யாவிலும், கனடாவிலும் பல மொழிகள் இருப்பதைக் காண்கிறோம்.

"சுவிட்சர்லாந்தில் ஒரு சத விகித மக்களே பேசுகிற ரோமன்ஸ் மொழிக்கு தேசிய மொழி என்ற அந்தஸ்து தந்திருக்கின்றனர்.

"எனவே இந்தியாவில் ஒரே மொழிதான் தேசிய மொழியாக இருக்க வேண்டுமென்பதல்ல. மொழி பிரச்சினையில் மறு பரிசீலனை தேவை என்று கூற விரும்புகிறேன். இந்த மறு பரிசீலனை நடைபெறும் வரையில் எந்த மொழிப் பிரதேசத்தின்மீதும் மற்றொரு மொழியைத் திணிப்பது கூடாது.

"ஆரிய, திராவிட, மங்கோலிய மொழிகளின் அடிப்படையில் உதித்த கலாசாரத்தையும், பாரம்பரியத்தையும் கொண்ட பல்வேறு வகையான மக்கள் இந்தியாவில் வாழுகின்றனர்.

"அப்படிப்பட்ட ஒரு நாட்டில் ஒரே மொழிதான் தேசிய மொழியாக வேண்டும் என்பது மிகக் கஷ்டமான பிரச்சினையாகும். இந்தியா போன்ற ஒரு நாட்டில், ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய மொழிகளை வைத்துக் கொள்வது சாத்தியமே!

"இந்தியை யூனியன் சர்க்காரின் ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்வதானாலும், அது இன்னும் போதுமான அளவு வளர வேண்டும். அதுவரை, ஆங்கிலமே ஆட்சி மொழியாக நீடிப்பதற்கு மக்கள் சபை, சட்ட மூலமாக வழி செய்ய வேண்டும். இதற்காக எவ்வித காலவரம்பும் விதிக்கக் கூடாது."

—இதைவிட ஒருபடி மேற்சென்று இந்தியாவில் இட்லரிசத்தை அனுமதித்து வளரவிட்டுக் கொண்டிருக்கும் பண்டிதருக்கே பாடம் போதிக்கும் விதத்தில் பேச்சு மழை பொழிந்திருக்கிறார் பி. சி. கோஷ்.

பி. சி. கோஷ் ஒரு சாதாரணக் கதர்க் குல்லாய் அல்ல.

பிரிவினைக்குப் பிறகு வங்கத்திலே இரத்தக் களரி ஏற்பட்டதல்லவா; அப்போது அவர் அந்த மாநிலத்தின் முதலமைச்சராயிருந்து திறம்படக் காரியமாற்றியவர்; இப்போது மனம் வெந்து பி. சோ. கட்சியில் இருப்பவர்!

அனல் தெறிக்கும் அவரது பேச்சிலே உண்மைத் தெளிவுகளிநடம் புரிவதைக் காண்கிறோம் :

"இந்தியாவில் ஒரே மொழி தேசிய மொழியாக்கப்படாவிட்டால் 'ஒற்றுமை'க்கு ஊறு நேரிடும் என்பது வெறும் பொய்யான கூச்சலாகும். மாறாக, இந்தியை வலுக்கட்டாயமாகத் திணித்தால்தான், இந்தியாவின் ஒற்றுமைக்கு ஊறு நேரிடும். அப்படித் திணித்தால், இந்தியாவின் ஒற்றுமையைக் குலைத்த பெரியவர் என்றே நேருவின் பெயர் வரலாற்றில் குறிக்கப்படும்.

"இந்தி பேசும் மக்களின் ஆணவம்தான், இந்தப் பிரச்சினையில் இந்தி பேசாத மக்கள் அனைவரையும் ஒன்று சேர்த்திருக்கிறது என்றும் கூற விரும்புகிறேன்.

"இந்தி மொழி வளர்ச்சி பெறும்வரை, இந்தி பேசும் மக்கள் பொறுமையுடனிருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். இதற்கிடையில், இந்தியாவின் ஆட்சி மொழியாக ஆங்கிலம் நீடிப்பதற்கு எவ்வித காலவரம்பும் இருக்கக் கூடாது."

இந்தி வெறியர்களைப் பார்த்து அந்த வடநாட்டுப் பெரியவர் மேலும் கேட்கிறார் :

"மற்ற மொழிகள் பேசுவோர்மீது இந்தியைத் திணிப்பது அறிவுடையார்கள மீது அறிவில் தாழ்ந்தவர்கள் ஆதிக்கத்தைத் திணிப்பதாகுமே தவிர வேறல்ல. கடந்த நூறு ஆண்டுகளில் இந்தி மொழி பேசும் பகுதிகளில் தாதாபாய் நௌரோஜி, மகாத்மா காந்தி, ரவீந்திரநாத தாகூர், ஜகதீச சந்திர போஸ்—போன்ற ஒரு மேதையாவது உதித்ததுண்டா?

—இப்படிப் பண்டிதரும் டாக்டர் லோகியாவும் பதில் சொல்ல முடியாத கேள்விகளைக் கேட்டிருக்கிறார் பி. சி. கோஷ்!

—மேற்கு வங்கத்தின் பிரதமரும், மாஜிப் பிரதமரும் இப்படி வீரவுரை யாற்றியது வெளி மேடையில் அல்ல; சட்ட மன்றத்துள்ளாகவே இந்தித் திணிப்பைப் பலமாகக் கண்டித்துத் தீர்மானமும் போட்டிருக்கிறார்கள்!

இந்தியால் பிராந்திய மொழி கெடும் என்கிற மொழிப் பற்று கதர்க் குல்லாய் அணிந்த தடித்த தோலர்களிடையேயும் உணர்ச்சி அலைகளை எழுப்பிவிட்டிருக்கிறது.

வங்கப் பிரதமர் பி. சி. ராய் பேசியதைப் போலவே சென்னை சட்டசபையில் காமராசர் தீர்மானம் நிறைவேற்றியிருக்க வேண்டும். ஆனால் நிறைவேற்றவில்லை, அவர்! ஏன்?

மரக்கட்டைகளிடையே மனித உணர்ச்சியை நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்?

★★★

நீர்வளம் பெருக்கி நிலவளம் காண்பீர்! கல்லணை கண்டு கங்கை அழைப்பீர்!

★ மு. கருணாநிதி ★

[26—3—58 அன்று, சென்னை சட்ட மன்றத்தில், நீர்ப்பாசன மானியத்தின்மீது கொண்டுவரப்பட்ட வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து மு. கருணாநிதி ஆற்றிய உரை]

சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே! நீர்ப்பாசன மானியத்தின்மீது கொண்டுவரப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளை—தோழர் நல்லசிவம் அவர்களும், ஷண்முகம் அவர்களும் கொண்டு வந்துள்ள வெட்டுப் பிரேரணைகளை—ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தென்னகத்தில் நீர் வளம் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டால்தான் நல்ல செழிப்பும், பசுமையும் இருக்க முடியும் என்கின்ற கருத்தினை அமைச்சர் அவர்களுக்கு நான் கூறித் தெரிய வேண்டுமென்ற அவசியம் இல்லை.

பழைய காலத்தில் நம்முடைய தமிழ் மன்னர்கள் நீர் வளத்தைப் பெருக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு பெரிய பெரிய திட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள் என்றும், அவைகளுக் கெல்லாம் சிகரம் வைத்ததுபோல கரிகால் பெருவளத்தான் கட்டிய கல்லணை இன்றைய தினம் காட்சி தருகின்றதென்பதையும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

வசதிகளும், வாய்ப்புகளும் குறைந்திருந்த அந்தக்காலத்தில்—விஞ்ஞானப் பெருக்கம் இல்லாத அந்தக் காலத்தில் அத்தகைய ஒரு கல்லணையைக் கட்டி அந்தப் பகுதியை செழிப்பாகவும், சீராகவும் ஆக்கிய அந்தப் பெருமையினையும் — அதைவிட அதிகமான வசதியும், வாய்ப்பும், விஞ்ஞானப் பெருக்கும் மிகுந்துள்ள இந்த நேரத்தில் நாம் செய்கின்ற நீர்வளத் திட்டங்களையும் எண்ணிப் பார்க்கும்போது—அதையும் இதையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது—மிக மிகக் குறைந்த அளவில்தான் நம்முடைய வேலைகள் நடைபெற்றிருக்கின்றன என்று கூற விரும்புகிறேன்.

இவைகளுக் கெல்லாம் காரணம் என்ன என்று கூறும்போது வரவு செலவு அறிக்கையில் நிதியமைச்சர் அவர்கள் உரையிலும்—இந்த நீர்ப்பாசன மானியத்தைக் கோரியிருக்கின்ற அமைச்சர் திரு கக்கன் அவர்கள் தந்திருக்கிற அறிக்கையிலும் குறிப்பிடப்படுகிற ஒரே ஒரு காரணம் இயற்கையின் இடையூறுகள் நமக்குப் பெரும் முட்டுக்கட்டையாக இருக்கின்றன என்பதுதான். இயற்கை வசதிகள் இல்லாத காரணத்தால் நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட முடியவில்லை என்கிறார்கள். அதே நேரத்தில் நீர்ப்பாசன வசதியைப் பெருக்குவதற்கான வழி துறைகள் — அதற்கேற்ற இயற்கை வசதிகள் நம் மாநிலத்தில் எங்கெங்கே கிடக்கின்றன என்பதையும், அவற்றை எப்படிப் பயன் படுத்திக் கொள்ளலாம் என்பதையும்பற்றி பல முறை இந்தப் பேரவையில் பல அங்கத்தினர்களால் எடுத்துச் சொல்லப்பட்டு வந்தும்கூட அவைகவனிக்கப்படவில்லை என்பதை ஞாபகப் படுத்துகிறேன்.

சேலம் மாவட்டத்தில் சேர்வராயன் மலையிலுள்ள வட பகுதியில் வாணியாற்றில் அணை கட்டப்படுமானால், அரூர் தாலூக்கா முழுவதும் பாசன வசதி பெறும என்பதாக அந்தப் பகுதி மக்கள் பலப்பல மனுக்கள் எழுதி அனுப்பியிருக்கிறார்கள். அந்தத திட்டத்திற்கு சர்வே செய்யப்பட்டு, ஒரு லட்சத்திற்குமேல் செலவு ஆகியிருந்தும, அந்தத் திட்டம் கைவிடப்பட்டதா இல்லையா என்ற சந்தேகக் குறியோடு நின்றிருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

புதுக்கோட்டைப் பகுதியில் அக்கினியாறு, கோரையாறு, வெள்ளாறு, குண்டாறு—போன்ற காட்டாறுகள் ஓடுகின்றன. அப்படி ஓடுகின்ற காட்டாறுகளை அந்தப் பகுதியிலுள்ள நிலங்களுக்குப் பாசன வசதி கொடுக்கும் வகையில் தடுத்துத் தேக்க சில திட்டங்கள் சொல்லப்பட்டன. அக்கினியாற்றுக்கு அணை கட்டினால் அந்தப் பகுதி நல்ல செழிப்பும், பசுமையும் அடையும் என்று அந்த வட்டாரத்து மக்கள் என்னைக் காணுகின்ற போதெல்லாம் சொல்கிறார்கள். அந்த வட்டாரத்திலுள்ள மந்திரி அவர்களைச் சந்தித்தும்

[தொடர்ச்சி பக்கம்—9]

பூசாரியின் அவலம்!

"நிதியமைச்சர் சுப்பிரமணியம் "இந்தி எதிர்ப்பு" என்னும் சுட்ட செங்கல்லை வெளிக் காட்டப் பயந்து, "இந்தி ஆதரவு" எனும் சோறு இருப்பதாக பக்தர்கள் ஏமாறட்டு மென்று "அண்ணா ஆதரவு" என்ற ஈரத் துணி போட்டு மூடி, வடநாட்டுத் தேவதைக்குப் படைத்தார்" என்ற கருத்தினை சட்ட மன்றத்தில் பேராசிரியர் க. அன்பழகன் குறிப்பிட்டார்.

பொழுது விடிந்தால் ரம்பாவுக்குத் திருமணம்!

இமே, வீடு அல்லோலகல்லோலப் பட்டுக் கொண்டிருக்கத்து; சிநேகிதிகள் ஏதேதோ பேசி வம்பளந்து கொண்டிருந்தார்கள். ஒரே சிரிப்பொலி...கும்மாளம்! ரம்பா படுக்கையில் சாய்ந்தபடியே, எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள்.

இப்பொழுது அவள் வெறும் ரம்பா! நாளை காலையில் திருமதி ரம்பா வஸந்தன் ஆகிவிடுவாள். இனி அவளுடைய சுக துக்கங்களில் இன்னொருவரும், இன்னொருவருடைய சுக துக்கங்களில் அவளும் பங்கு பெற வேண்டிய நிலை பிறந்துவிட்டது. நாளை காலை அன்புக் கயிற்றால் அவள் உரிமைகள் பிணிக்கப்பட்டுவிடும்...

வஸந்தன்— அந்த வசீகரன் அவளுடைய வாழ்க்கையில் இரண்டறக் கலந்துவிடுவான். வஸந்தனை அவள் வெகு சமீபத்தில்தான் பார்த்தாள்; அவனை அவளுக்கு டைரக்டர் நிவாஸ் அறிமுகம் செய்து வைத்த நேரத்தில், அவன் அடைந்த சங்கோஜம்...பெண் போல நாணினான். அவளை ஏறிட்டுப் பார்க்கவும் கூச்சப்பட்டான். சரளமாகப் பேசி அவள்தான் அவனுடைய கூச்சத்தைப் போக்க முயன்றாள். அவள் பேசப் பேச அவனும் துணிவு பெற்றான்; நிமிர்ந்து நேராகப் பார்த்துப் பேச ஆரம்பித்தான். அவனுடைய தீட்சண்யமான பார்வையில் தன்னம்பிக்கை ஒளிவிட்டுக் கொண்டிருந்தது. கனவு நிரம்பித் ததும்பும் அந்தக் கண்களுக்குச் சொந்தக்காரன் காவிய உணர்ச்சி மிக்க கதைகளைப் படைப்பதில் ஆச்சரியமில்லை என்று ரம்பா முடிவு செய்தாள்.

முதல் சந்திப்பிலேயே உள்ளம் முற்றுகையிடப்பட்டு விட்டதை ரம்பா உணர்ந்தாள். இனந் தெரியாத ஓர் உணர்வு அடிக்கடி இதயத்தில் தோன்றி இன்ப வேதனை மூட்டிக் கொண்டிருந்தது.

வஸந்தன் எத்தனையோ அமர இலக்கியங்களைப் படைத்துவிட்டு ஊர், பேர் தெரியாமல் வாழ்ந்தான். அவனுடைய எழுத்துக்கள் டைரக்டர் நிவாஸ் கண்ணில் மட்டும் படாமல் இருந்திருந்தால்...?

"எத்தனையோ நன் மணிகள் கவனிப்பாரின்றி கடலினடியில் மூழ்கிக் கிடக்கின்றன— எண்ணற்ற வண்ண மலர்கள் அனுபவிப்பார் எவருமின்றி வாசனையை வாரிவீசி, பாலை நிலத்தில் கருகி மடிகின்றன" என்ற ஆங்கிலக் கவிஞன் தாமஸ் கிரேயின் வாசகம் எப்படிப்பட்ட அனுபவ உண்மை!

ஆற்றல் மட்டும் ஒரு மனிதனை உயர்த்தி விடாது! ஆற்றலைப் பிறர் உணரவைக்கும் சந்தர்ப்பமும் மனிதனுக்குத் தேவை.

அவளுடைய வாழ்க்கைக்கும் வஸந்தனுடைய வாழ்க்கைக்கும், அதன் போக்கிலே ஒரு ஒற்றுமை இருப்பதை ரம்பா உணர்ந்தாள். ஏழ்மையில் பிறந்து — ஆனால் எழிலுடன் பிறந்து — படாதபாடு பட்டுக் கல்வி பயின்று—கலை பயின்று—நடிப்புக் கலையில் ஆர்வம் கொண்டு நடிகையாக அவள் பட்ட தொல்லைகள்...

சிரித்துக் கேலி செய்த முதலாளிகளும், அவளுடைய லட்சியம் கேட்டுக் கோபமுற்று சீறி விழுந்த டைரக்டர்களும்......! வேதனை இதயத்தைத் துளைக்க வீடு நோக்கி ஓடி வருவாள்; வந்தவுடன் ஓடிந்து மூளியாகி நின்ற நிலைக் கண்ணாடியில் உருவத்தைப் பார்ப்பாள். அழகின் வாளிப்போடு நிலைக்கண்ணாடியில் காட்சி யளித்த பிம்பம், அவளைப் பரிதாபத்தோடு பார்க்கும்; உலகம் என்ன குருடாகி விட்டதா என்று மனம் கேட்கும். இருட்டாகிவிட்ட விழிகளுக்கும் ஒளியூட்டும் ஆற்றல் முயற்சிக்கு உண்டு என்று அறிவு பதில் சொல்லும்......

டைரக்டர் நிவாஸ், சினிமாத் தொழிலில் ஓர் அபூர்வ மனிதர். மறைந்து கிடக்கும் ஆற்றலைத் துருவிக் கண்டு பிடித்து செயல்பட வைக்கும் அரிய திறன் அவருக்கு எப்படியோ இருந்தது. இல்லாவிட்டால், கடற்கரையில் காற்று வாங்கிக் கொண்டிருந்த அவளை, தானே வலிய அழைத்து, "சினிமாவில் நடிக்க நீ ஆசைப்படுகிறாயா?" என்று கேட்பாரா? மெருகு குலையாத காரிலிருந்து மடிப்புக் கலையாத உடையுடன் இறங்கிய ஒரு மனிதர் திடீரென்று தன்னை இப்படிக் கேட்டவுடன் அவள் பிரமித்துத்தான் போய் விட்டாள். பேச நா எழாமல் 'சரி' என்று தலையாட்டினாள்.

வாழ்க்கையில் முதல் முறையாக பிளஷர் காரில் ஏறி உட்கார்ந்தாள். ஸ்டுடியோவை நோக்கி விரைந்து சென்ற கார் லட்சிய பூமி நோக்கி அவளை அழைத்துச் செல்வது போல் இருந்தது.

வெற்றிப் பாதையில் முதல் அடியை எடுத்து வைப்பது தான் கஷ்டம். அது முடிந்து விட்டால், பிறகு......

துணைப் பாத்திரமாக ஆரம்பித்து, இன்று அவள் ஒரு பிரபல நட்சத்திரமாகிவிட்டாள். ஓலைக் குடிசையிலே ஆரம்பித்த வாழ்க்கை அவளை உப்பரிகை வாசியாக்கிவிட்டது.

வறுமைத் தொட்டிலில் இலக்கியக் கனவுகளோடு வளர்ந்த வஸந்தனைக் கண்டுபிடித்து சினிமாத் துறையில் ஈடுபடுத்தியவரும் நிவாஸ்தான். வஸந்தனின் வருகையால் சினிமா உலகம் இலக்கிய அந்தஸ்தை அடைந்தது. கருத்தின் மையமாக வைத்துக் கதை புனையப் பட்டது.

'பாலைவனத்து ரோஜா!' —ஏழ்மையில் பிறந்த பெண்ணொருத்தி நாடு புகழும் நடிகையானதைச் சித்தரிக்கும் கதை. வஸந்தனின் முதல்தரப் படைப்பு அது என்பது டைரக்டர் நிவாஸின் அபிப்பிராயம். அதில் வரும் கதாநாயகியான நடிகையும் எழுத்தாளன் ஒருவனைக் காதலிக்கிறாள். கதை அவலச் சுவையோடு முடிகிறது. தன் வாழ்க்கையையே படம் பிடிப்பதாக உள்ள கதையில் ஜீவன் மிளிர நடித்தாள் ரம்பா! காதல் கைகூடாமல் அவள் கண்ணீரும் கம்பலையுமாக நின்ற பொழுது, வஸந்தனின் கண்களிலும் நீர் துளிர்த்திருந்ததை அவள் கவனித்தாள். தான் அருமையாக நடிப்பதற்குச் சந்தர்ப்பமளித்த கதை என்ற அளவில் அவள் பெருமகிழ்ச்சி அடைந்தாலும் கதையில் இழையோடி நிற்கும் அவலம் தனது வருங்கால வாழ்க்கையின் சூசக அறிவிப்பாக அமைந்துவிடுமோ என்று அவளுடைய உள்ளத்தில் ஏற்பட்ட பயம், அவளையறியாமலேயே அவள் வஸந்தன் மீது கொண்டுவிட்ட காதலை ஊர்ஜிதப்படுத்தியது.

நாட்கள் செல்லச் செல்ல வஸந்தன் ரம்பாவினிடத்தில் அதிகப்படியான அக்கறை காட்டத் தலைப்பட்டான். மாலையின் மனோகரத்தையும், கடலின் காற்றையும், காவியங்களின் சுவையையும் இருவரும் சேர்ந்தே அனுபவிக்கத் தலைப்பட்டனர். இந்த நிலையை வாழ்நாள் முழுதும் தொடர முடிவு செய்துவிட்டனர் என்பதை அவர்களின் திருமண அழைப்பு அறிவித்தது!

○ ○ ○

கடந்த காலத்தின் நினைவுகளிலிருந்து ரம்பா விடுபட்டாள். தூக்க மயக்கத்தில் கொட்டாவி விட்டாள். விளக்கை அணைத்தாள்......இமைகள் மூடின!

"......ரம்பா......ரம்பா......!"

"யாரது......?"

"நான்தான் ரம்பா......"

"நீங்களா? ஏன் இப்பொழுது இங்கு வந்தீர்கள்?........."

"என்ன அசட்டுத்தனமான கேள்வி இது..."

"நல்ல அவசரக்காரர் .... போய்விடுங்கள் இங்கிருந்து... என் சிநேகிதிகள் இங்கு வந்தாலும் வருவார்கள்..."

"நான்தான் அவர்கள் வர வழியில்லாமல் கதவைத் தாளிட்டு விட்டேனே!"

"ஐயோ விடுங்கள் கையை..."

"விடமாட்டோம்.....விடமாட்டோம்...விடமாட்டோம்..."

கனவிலிருந்து ரம்பா விடுபட்டாள். சிநேகிதிகள் அவள் உளறிக் கொண்டிருந்ததை சொல்லிச் சொல்லிச் சிரித்தார்கள்.

ரம்பா கடிகாரத்தைப் பார்த்தாள். மணி ஐந்தாகி இருந்தது.

இன்னும் சில மணி நேரத்தில் அவள் வஸந்தனின் மனைவி!

அவள் எழுந்து குளித்துவிட்டு அலங்காரம் செய்து கொண்டாள். பந்தலெங்கும் நடிக நடிகையரும், பிரமுகர்களும், உத்தியோகஸ்தர்களும் குழுமியிருந்தனர். ரம்பாவின் கண்களும் வஸந்தனின் கண்களும் அவ்வளவு பேரிலும் ஒரே ஒருவரை ஆவலுடன் தேடின. அவர்கள் தேடிய டைரக்டர் நிவாஸ் மட்டும் கூட்டத்தில் இல்லை.

○ ○ ○

ரம்பாவும் வஸந்தனும் தம்பதிகளாகிக் கொண்டிருந்த சமயத்தில், எங்கோ ஓர் அறையில் வாழ்க்கையின் கனவுகள் சிதைந்துபோய் டைரக்டர் நிவாஸ் ஏங்கிக் கொண்டிருந்தார். மனித உள்ளத்தின் ஆழத்தில் தோன்றித் துயர் கொடுக்கும் சலனம், எழுத்தாளனின் கற்பனையையும் நடிகரின் மனவுணர்வையும் தாண்டி இயங்கும் வலிமை பெற்றது என்பதை வஸந்தனும் ரம்பாவும் உணர வாய்ப்பில்லாமல் போனதில் வியப்பென்ன? ✽

சிறுகதை

முரசொலி
சந்தா விபரம்

உள் நாடு

ஆண்டு சந்தா	8—00
ஆறு மாதம்	4—50

வெளி நாடு

ஆண்டு சந்தா	9—00
ஆறு மாதம்	5—00

[சந்தாத்தொகையை மணியார்டர் மூலமோ, கிராஸ் செய்த இந்தியன் போஸ்டல் ஆர்டர் மூலமோ அனுப்பலாம். இலங்கை, மலேயா போன்ற இடத்திலிருந்து கிராஸ் செய்த பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவேண்டும்.

சந்தாகாரர்கள் கடிதம் எழுதும்போது தவறாது சந்தா எண்ணைக் குறிப்பிட வேண்டும்.]

சென்ற இதழில்...

“துரோகப் புயலில் சிக்கி, மரணத்தைத்தேடிவிட்ட மைனாவின் சவம் பிரேத பரிசோதனை செய்யப்பட்டதாம்; அப்போது முந்தானையில் அகப்பட்ட முடிச்சொன்றில், தன் தற்கொலைக்கு பாவி சிங்காரம்தான் காரணம் என்ற கடிதம் கிடைத்ததாம்”— இச்ச் செய்தியைப் பொன்மணியிடம் தெரிவிக்கிறான் சுருளிமலை...

அதே சமயம் சிங்காரத்தைத் தேடி ஓடிவந்த போலீசாரையும் வேறு திசையில் விரட்டுகிறான்...

பொன்மணி சிங்காரத்தின் கண்ணீரைத் துடைக்கிறாள். அதைக்கண்ட கற்பூரம் மகிழ்கிறாள். தன் அண்ணனுக்கும் பொன்மணிக்கும் எப்படியாவது தொடர்பு ஏற்பட்டு, இருவரும் மணம் புரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறாள். அப்போது தான், பொன்மணியின்மேல் மையல் கொண்டுள்ள கரகமாடி கண்ணனின் பார்வையைத் தன்பக்கம் திருப்பலாம் என்ற எண்ணம் அவளுடையது...

ஏனெனில் கண்ணன் பொன்மணியிடம் காதல் பிச்சை கேட்ட காட்சியை அவளே யாருமறியாமல் கண்டிருக்கிறாள். பக்கத்து ஊரிலே சட்டிப் பானை விற்றுவிட்டு திரும்பும்போது, மழைக்கு கோயில மண்டபத்தில் ஒதுங்கிய பொன்மணியிடம் வெட்கத்தைவிட்டு அவன் மன்றாடியிருக்கிறான்! “கல்யாணமென்றால் பெற்றோரிடம் வந்து பேசுங்கள்!” என்று கோபமாகச் சொல்லியிருக்கிறாள் பொன்மணி...

இந்தக் காட்சியை வேறிடமிருந்து கவனித்துவிட்ட கற்பூரத்தின் உள்ளத்திலே பெரும் போராட்டம் எழுகிறது. கண்ணன், பொன்மணியின்மேல் கொண்டுள்ள ஆசை நிறைவேறக்கூடாது என்று முடிவு செய்கிறாள்...

காரணம், கண்ணனின் அழகிலே அவள் தன் மனதைப் பறிகொடுத்திருந்தாள்...

9

கண்ணனுக்குத் தன்மீது காதலும் மோகமும் கரைபுரண்ட வெள்ளமெனத் தோன்றிட வேண்டுமானால் இடையே பொன்மணி தடையாக நிற்கக்கூடாது. அவளைப் பற்றிக் கண்ணன் நினைக்காத அளவுக்கு அவள் வேறொருவனுக்குச் சொந்தமாகி விடவேண்டும். அப்படிப்பட்ட கண்ணைக் கவரும் கட்டழகி, தன் சகோதரனுக்குத்தான் மனைவியாகி விடட்டுமே யென்று கற்பூரம் கொண்ட எண்ணத்திலும் தவறில்லை. கண்ணன்மீது அவள் வைத்திருக்கும் ஆசை அளவிலடங்காது. அவனது கம்பீரத் தோற்றத்திற்குத் தன்னையே காணிக்கையாக்கத் தவமிருந்த கற்பூரத்திற்கு ஒரு புதிய நம்பிக்கையும் உதயமாயிற்று.

அண்ணனுக்குப் பிடித்துள்ள பேயை விரட்ட ஊரார் சிலர் சொன்ன யோசனை, அவளது உள்ளத்தைக் குடையலாயிற்று. கரகமாடிக் கண்ணனை அழைத்து வந்து பேயோட்டினால் சிங்காரம் சுகம் பெறுவான் என்று எழுப்பப்பட்ட யோசனை தான் அது.

‘கண்ணன் குடும்பத்திற்கும் தன் குடும்பத்திற்கும் எவ்வளவு காலமாகப் பகை—போய் அழைத்தால் அவன் பேயோட்டுவதற்கு வருவானா?’ — என்ற கேள்விகளும் தொடர்ந்து கிளம்பின. அவன் அப்படி வராமலிருக்க வேண்டுமென்பதையே அவள் விரும்பினாள். காரணம்; பொன்மணியும் அவனும் வீட்டிலேயே சந்தித்து விடக்கூடாதே என்பதுதான்! ஆனால் அண்ணனுக்குப் பேய் பிடித்திருப்பதாகச் சொல்லப்படும் சாக்கில் கண்ணனை ஒருமுறை பார்த்துப் பேசுவதற்குத் தனக்கு சந்தர்ப்பம் ஏற்படுமே யென்று ஆழ்ந்து சிந்தித்து முடிவு கண்டாள். அவள் முடிவு சரியானது என்ற தெளிவும் திருப்தியும் பெற்றாள்.

கண்ணனுக்குப் பேயுமில்லை; மண்ணாங்கட்டியுமில்லை. பேயோட்ட அழைத்தாலும் கண்ணன் வரப்போவதில்லை. ஆகவே, தான் போய் கண்ணனைத் தாராளமாக அழைக்கலாம். அந்தப் பெயரில் அவனோடு பேசுவதற்கு இடம் ஏற்படும்.

கற்பூரத்தின் தீர்மானம் உடனடியாக அமுலாக்கவும்பட்டது. பூஞ்சோலை வீட்டிலிருந்து கிளம்பியவள், நேராக கண்ணன் வீடுநோக்கி நடந்தாள். தன் தந்தையார் காலத்திலேயே இரண்டு வீடுகளுக்கும் பேச்சு வார்த்தை இல்லை. இப்போதோ அணை போடமுடியாத அன்பு வெள்ளம்,பரம்பரைப்பகையை அறவே மறந்திடச் செய்தது.

வீட்டுத் திண்ணையிலே மாரியம்மன் தாலாட்டுப் படித்துக்கொண்டு உட்கார்ந்திருந்த கண்ணனுக்குக் கற்பூரம் தன் வீடு நோக்கி வருவது ஆச்சரியமாக இருந்தது. தன் வீட்டுக்கு வரமாட்டாள் என்ற தைரியமும் பிறந்தது. அவளை ஏன் கவனிப்பானேன் என்ற அலட்சியத்தோடு புத்தகத்தைப் பார்ப்பது போல பாசாங்கு செய்து ஓரக்கண்ணை தெருப் பக்கம் வீசினான்.

கற்பூரம், தங்கு தடையின்றி கண்ணன் வீட்டு வாயிற்படியை மிதித்து, திண்ணைப் பக்கம் வந்தாள். அதற்குமேல் கண்ணனால் சும்மாயிருக்க முடியவில்லை. அவளைப் பரபரப்புடன் வெறிக்கப் பார்த்தான். உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது அவனுக்கு. மீண்டும் தலையைத் திருப்பிக்கொண்டு புத்தகத்திற்குள் விழிகளை நுழைத்துக் கொள்ளப் பெருமுயற்சி செய்தான். ஆனால் முடியவில்லை. கற்பூரமே பேச ஆரம்பித்து விட்டாள்:

“வந்தவுங்களை வான்னு கூப்பிடக் கூடாதா? என்னு கேட்கக்கூடாதா?”

கண்ணனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. கற்பூரமா அப்படிப் பேசுகிறாள்? நம்பமுடியவில்லை அவனால். மௌனமாயிருந்தான்.

“பெரிய ஆபத்து! எங்க அண்ணனுக்குப் பேய்ச் சேட்டை ரொம்ப முத்திப் போயிட்டுது...”

“இது என்ன வம்பெழவு! யாருக்குப் பேய் பிடிச்சா எனக்கென்ன?”

“ஆயிரம் விரோதமிருந்தாலும் ஆபத்திலே உதவக் கூடாதா? ஆபத்துக்குப் பாவம் இல்லேன்னுசொல்வாங்களே!”

“நல்லாயிருக்கு நியாயம்—வெட்கம், மானம் இருக்கவேண்டாமா உங்களுக்கு? என்னைக் கூப்பிடுவதற்கு எந்த முகத்தோடு வந்தாய்?”

“இதோ, இந்த முகத்தோடு தான்! ஏன்; இந்த முகம் பிடிக்கலியா உங்களுக்கு?”

கற்பூரம், பேச்சின் போக்கை தனக்குச் சாதகமாக இழுத்துக் கொள்ள முயன்றாள். பேச்சின் உட்கருத்தைப் புரிந்துகொள்ளும் அக்கறை எடுத்துக் கொள்ளாமலே கண்ணன் விடையளித்தான்.

விற்பனையாகின்றன!

* அழகு தமிழ்ப் பூக்காடு!
* அரசியல் விளக்க ஏடு!
* உரிமை முரசு கொட்டும் உன்னத நாடகம்!

மு. கருணாநிதியின்

உதய சூரியன்

விலை ரூ. 1—50

* உணர்ச்சி மிக்க காவியம்!
* உன்னதமான ஓவியம்!
* தென்னக மேடைக்கோர் புதிய படைப்பு!

பி சி. கணேசன் எழுதிய

எழுத்தாளன் காதலி (நாடகம்)

விலை ரூ. 1—25

முத்துவேல் பதிப்பகம்,
77, மதுரை சாலை, திருச்சி-8.

[தனிப் பிரதி வேண்டுவோர், புத்தக விலையுடன் 25 புதுக் காசு சேர்த்து அனுப்புக.]

"யாரோ ஒரு அப்பாவிப் பெண்ணைக் கொன்னு தூக்கு மாட்டினான்; சண்டாளன்—அதறகுப் பலனை அனுபவிக்கிறான். போலீஸ் ஸ்டேஷனில் இடக்கிற பயலுக்கு பேயோட்டுறத்துக்கு நீ என்னைக் கூப்பிட வந்துட்டே......தூ! வெட்கமில்லை...?"

"போலீஸ் ஸ்டேஷன்லியா? ...இல்லை.....இல்லை ..அண்ணன் பூஞ்சோலையம்மா வீட்டிலே தான் இருக்கார். இதை யாருகிட்டயும் சொல்லிடாதிங்க! உங்களுகிட்ட மாத்திரம்தான் இந்த ரகசியத்தைச் சொல்லியிருக்கேன். ஏன்னு; உங்கமேல எனக்கு நிறைய நம்பிக்கை!"

சிங்காரம் பூஞ்சோலையம்மாள் வீட்டிலேயிருக்கிறான் என்ற செய்தி காதில் விழுந்ததும் கண்ணனுக்குப் பொன்மணியின் நினைவுதான் பறந்து வந்தது. இப்போது அவனுக்கு சிங்காரத்திற்கு பேயோட்டுவதற்கு சம்மதம் தரலாம் என்ற எண்ணம் தோன்றிவிட்டது. அப்போதுதானே அந்த வீட்டில் இருக்கும் பொன்மணியைக் கண் குளிரக் காணலாம்—முடிந்தால் பேசலாம்—நெருங்கலாம்—ஏன்; திருமணத்தையே முடித்தும்விடலாம் — மளமளவென்று மனமாளிகையைக் கட்டிவிட்டான்.

கற்பூரத்தைப் பார்த்து, "ம்!...என்ன செய்வது? தீமை செஞ்சவுங்களுக்கும் நன்மையே செய்யின்னு பெரியவங்க சொல்வாங்க! சரி, சரி.....வந்து பேயோட்டுறேன்!" என்று கூறினான்.

கற்பூரத்திற்கு பூரிப்பு ஏற்படவில்லை. ஆனாலும் சந்தோஷப்படுவதுபோல் காட்டிக்கொண்டாள். அவன் வரமாட்டான் — வராமலிருப்பதே நல்லது என நினைத்திருந்த அவளுக்கு கண்ணனின் தீர்மானம் கலக்கத்தை உண்டுபண்ணியது—என் செய்வது; இனிமேல் "வராதே!" என்று தடுக்க முடியுமா? சமாளித்துக் கொண்டாள் கற்பூரம். நன்றி தெரிவிக்கும் பாணியில் தன் இருதயத்தைத் திறந்து காட்டி நாணம் குழைத்து கண்ணனிடம் பேசினாள்.

"நான் நம்பவே இல்லை நீங்க சம்மதம் தருவீங்கண்ணு! ஆகா..."சம்மதம்" என்ற ஒரு வார்த்தைக்காக நான் எவ்வளவு தவி தவித்தேன் தெரியுமா?"

அவளது வார்த்தைகளைக் காதில் வாங்க அவனுக்கு நிதானமில்லை. தன் விருப்பத்துக்குரியவளை வீட்டிலேயே சென்று பார்க்கக்கூடிய வாய்ப்பு வலுவிலே வந்திருக்கிறது. அதைத் தவறவிடாமல் உடனே செல்ல வேண்டும் என்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தான். வீட்டுக்குள்ளே ஓடி, உடை மாற்றிக் கொண்டான். உடுக்கு எடுத்துக் கொண்டான். பொன்மணியின் வீடு நோக்கிப் புறப்பட்டு விட்டான்.

கற்பூரத்தோடு வரும் கண்ணனை சுருளிமலை வரவேற்று உள்ளே அழைத்துக் கொண்டு சென்றான். கண்ணன் வீட்டுக்குள்ளே தன் விழிகளை அலையவிட்டு பொன்மணியைத் தேடினான். அவள் எங்கேயோ மறைந்து கொண்டாள். அதில் கற்பூரத்திற்கு ஒரு திருப்தி!

சிங்காரம் படுத்திருக்கும் இடத்திற்குக் கண்ணன் வந்ததுதான் தாமதம்; எங்கிருந்து அந்தப் புதிய பலம் பெற்றானோ தெரியவில்லை; சிங்காரம் தூள் தூளாகக் கைக் கட்டுகளை அறுத் தெறிந்துவிட்டு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான். ஆனால் கால் கட்டு அவனை மேலே விடவில்லை.

"அடே துரோகி! இங்கே எங்க வந்தே? பேய் ஓட்டுவதற்கா? எனக்குப் பிடிச்சபேயை உன்னால் ஓட்ட முடியுமா? நீ என்ன பெரிய மந்திரவாதியா? மாயாஜாலக்காரனா? மடையன்... முட்டாள்...நிற்காதே! ஓடிப்போ! ஓடிப்போ!!" என்று கத்த ஆரம்பித்தான் சிங்காரம்.

"நிலையைத் தந்திரமாகத் தனக்குச் சாதகமாக்கிக்கொள்ளத் துணிந்த கண்ணன், "ஏ அப்பா! இது பெரிய பிசாசு தான்! எல்லோருமா சேர்ந்து முதல்ல இதைக் கட்டிப்போடுவோம் — பிறகு என்னுடைய வேலையை ஆரம்பிக்கிறேன்!" என்று கூறவே, சிங்காரம் பதைபதைப்போடு தன் காலிலுள்ள கட்டுக்களை அவிழ்க்கத் தொடங்கினான்.

ஆனால் அதற்குள், கண்ணன் அவனைப்பிடித்துக் கட்டிலோடு சேர்த்து இறுகக் கட்டிவிட்டான். சிங்காரத்தின்மீதுள்ள ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ள இதுதான் தருணமென்று பெரிய பிரம்பொன்றை கையிலே எடுத்து சிங்காரத்தின் உடல் முழுமையும் காயப்படுத்தினான். 'விர், விர்' என்று பிரம்பு அடிகளின் ஒலி முழங்கியது. சிங்காரம் துவண்டு போனான்.

கற்பூரத்தால் அதைத் தாங்கிக்கொள்ளமுடியவில்லை. அவள் கட்டிய கற்பனைக் கோட்டையால் தன் அண்ணன் படும் வேதனையை நினைத்துக் கண்ணீர் விட்டாள்.

"நிறுத்துங்க! அடிக்காதிங்க! அவர் இனிமேல் தாங்கமாட்டார்!" என்று கற்பூரம் ஓடிப்போய் கண்ணனின் கையைப் பிடித்துக்கொண்ட பிறகே பிரம்படிகள் நின்றன.

அதன் பிறகு, கண்ணன் பூஜையை ஆரம்பித்தான். பூஜை முடிவதற்குள் எப்படியாவது பொன்மணியைப் பார்த்துவிட வேண்டுமென்று துடித்தான்; முடியவில்லை. முடியாததுமட்டுமல்ல; அவனுக்கு சிங்காரத்தின்மீதும் சந்தேகம் முளைத்துவிட்டது. சிங்காரம் அங்கேயே இருந்தால் ஒருவேளை பொன்மணியை அவன் மயக்கிவிடுவானோ என்ற பயம் வேறு ஏற்பட்டது அவனுக்கு.

பூஜை முடிந்ததும் மறுநாள் வந்து பூஜை வைப்பதாகச் சொல்லி, கண்ணன் விடை பெற்றுக்கொண்டான். ஆனால் அவன் நேராகச் சென்ற இடம் வீடல்ல; 'அவுட் போஸ்ட்' போலீஸ் ஸ்டேஷனுக்கு வேகமாகச் சென்றான். அங்குள்ள அதிகாரியிடம், சிங்காரம் பூஞ்சோலை வீட்டிலிருக்கிற தகவலைத் தந்த பிறகே அவனுக்குத் தூக்கம் வந்தது.

"ஆறுகள் இல்லையாம்; அணைகளும் இல்லையாம்!"

"பிரிட்டிஷ் ஆட்சியில் சென்னை மாநிலம் இந்தியத் துணைக் கண்டத்தில் பஞ்சாப் மாநிலத்திற்கு அடுத்தபடியாக நீர்ப்பாசன வசதிபெற்றிருந்தது—என அமைச்சரவை தயாரித்து வெளியிட்டிருக்கும் நீர்ப்பாசன அறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆக, வெள்ளையர் ஆட்சியில்கூட அரசாங்கம் நிலைமையை உணர்ந்து மக்களுக்கு நன்மை செய்துள்ளது என்பதும், இன்றைய ஆட்சியாளர் தக்க முறையில் செயலாற்ற இயலாத முறையில் இருக்கிறார்கள் என்பதும் தெரிய வருகிறது. இதற்குக் காரணம் என்ன?

"நான் வடக்கு—தெற்கு என்று பேசக்கூடாது என்று ஆசைப்பட்டேன்; ஆனால், காங்கிரஸ்காரர்கள்-அதிலும் இராஜா முத்தையா செட்டியார் போன்றவர்கள்கூட 'வடக்கு—தெற்கு' என்று குறிப்பிட்டுவிட்டார்கள்.

"நம் நாடு, நம் மாநிலம், நம் அரசாங்கம்—என்று நாங்கள் கூறும் அடிப்படையில் இல்லாவிட்டாலும், மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம்—என்ற உணர்ச்சி உங்களைக் குடையச் செய்கிறது.

"1958-ம் ஆண்டில் ரூ. 21 லட்சம் மானியமாகவும், ரூ. 11 லட்சம் கடனாகவும் மத்திய அரசாங்கத்திடம் கேட்கப்பட்டிருக்கிறது என்றும், 'அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது' என்றும் கூறப்பட்டிருககிறது.

"இந்தத் தொகை நிச்சயமாகக் கிடைக்கும் என்று தெரிந்திருந்தால், மக்களுக்கு வாக்குறுதி அளித்திருக்கமுடியும். இதேபோல சென்ற ஆண்டில் ரூ 6 லட்சம் மான்யமாகவும், ரூ. 1 லட்சம் கடனாகவும் கேட்கப்பட்டுள்ளது என்று கூறிப், முன்போலவே எதிர்பார்க்கப்படுகிறது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது: இப்படி பக்கத்துக்குப் பக்கம் 'அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது' என்ற நிலை இருப்பதினால்தான் இராஜா சர். போன்ற காங்கிரஸ்காரர்கள்கூட, 'வடக்கு—தெற்கு என்று குறிப்பிட்டு, 'மத்திய அரசாங்கத்திடம் அதட்டிக் கேட்டுப் பணம் வாங்க வேண்டும்' என்று பேசினார்கள். மத்திய அரசாங்கத்தின் நீர்ப்பாசனக் கொள்கை குறை காண்பதற்கில்லை என்று கூறினார்கள்.

"நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் — இந்தியத் துணைக் கண்டத்தின் ஒரு பகுதியாக நாம் இருந்தும் பெரிய பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் கோடிக் கணக்கான ரூபாய் செலவில் வடக்கே அமைப்பதில் நாம் வாரிக் கொடுத்த பணம் வீணாக்கப்பட்டிருக்கிறது. பக்ரா-நங்கல் அணை, இராகுத் அணை, தாமோதர் அணை போன்றவைகள் பல கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டும், அவைகள் மக்களுக்குப் பயன்பட இயலாத நிலையிலிருப்பதைக் கண்டுதான் இன்று மத்திய அரசாங்கப் பொறுப்பில் இருப்பவர் மனம் நொந்து பேசுகிறார்கள்.

"அந்தத் திட்டங்கள் உருவாக்கப்பட்டபோது, இந்த அரசாங்கம் 'சிறு நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு அதிகத் தொகை ஒதுக்கவேண்டும்' என்று ஏன் வற்புறுத்திக் கேட்கவில்லை?

"இப்படி நீங்கள் காலம் கடந்து 'எதிர்பார்க்கிறோம்' என்பதைத்தான், நாங்கள் 'வடக்கு—தெற்கு' என்கிறோம்.

"இரண்டாவது திட்டத்தில் திட்டக் குழுவினர், விளைச்சல் 100-க்கு 42 விகிதம் உயரும் என்று எதிர்நோக்கினார்கள். பிறகு மாநில அரசாங்கப் பிரதிநிதிகள் கூடிப் பேசியபோது, 42 விகிதம் உயர்வு எதிர்பார்க்க முடியாது என்று கூறி, இந்த மாநிலத்தில் 28 விகிதம்தான் உற்பத்தி உயரும் என்று வாக்குறுதியளித்துவந்தனர்.

"பெரிய ஆறுகள் தமிழ் நாட்டில் இல்லை; நீர்ப்பாசனத்தை அணைகள் கட்ட அவசியமில்லை— என்று கூறிக்கொண்டு நீங்கள் எப்படி இதனை நிறைவேற்றப் போகிறீர்கள்?

"விவசாயத்திற்கு அதிகத் தண்ணீர் தேவையில்லை; குறைந்த தண்ணீரில் கணிசமாகப் பயிர்செய்யமுடியும்—என்று நிதி அமைச்சர் முன்பு கூறியுள்ளார். அது நிபுணர்களின் கருத்தானால், அதுபற்றி மக்களிடம் பேசுங்கள்; அதை மக்களிடையே பரபபுங்கள்.

"விவசாயத்திற்குத் தண்ணீர் தரமாட்டீர்கள்; ஆனால், உற்பத்தியைப் பெருக்கச் சொல்லுவீர்!

"விலைவாசிகளைக் குறைக்க மாட்டீர்கள்; ஆனால், உற்பத்தி பெருகிவிட்டது என்று கூறுவீர்!

"இனியாவது, குறைகள் இல்லாதமுறையில் திட்டங்களை நன்றாகத் தீட்டி, மக்களுககுத் தொண்டாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

—சட்ட மன்றத்தில் அறிஞர் அண்ணா

நாட்டு முதுகெலும்பின் கேட்டினைக் களைவோம்!

அறிஞர் அண்ணா

[24—3—58 அன்று, சென்னை சட்ட மன்றத்தில், அரிசன நல இலாக்கா மானிய வெட்டுப் பிரேரணையை ஆதரித்துப் பேசிய உரையின் சுருக்கம்]

அரிசன நலனுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகையை அனுமதிப்பதற்கு முன்னர் அந்தத் துறை இயங்கும் முறையை ஆராய்ந்து சில யோசனைகளைக் கூறவேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் கொண்டு வந்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து, நான் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

"ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசும்போது, 'சிலர் குறை கூறுவதின் காரணமாக அமைச்சர் உற்சாகத்தைக் குறைத்துக் கொள்ளக் கூடாது' என்றார்கள். அப்படி அமைச்சர்களைப் புகழ்வதால் பிரச்சினை தீர்ந்துவிடும் என்றால், 'கக்கன் வாழ்க; அவர் பொறுப்பேற்றிருக்கும் இலாக்கா வளர்க' என்று சுலபமாகக் கூறிவிடலாம்; ஆனால் அப்படிச் செய்வது, அமைச்சரை வேண்டுமானால் திருப்திப்படுத்தப் பயன்படுமே தவிர, அரிசன மக்களுக்குக் கடமையைச் செய்வதாகாது.

"அரிசனங்களுக்காக எந்தக் கட்சி உண்மையில் பாடுபடுகிறதென்று ஆராயத் தேவையில்லை. பலர் அதைப்பற்றி விவாதித்து 'நாங்கள்தான் அரிசனங்களுக்குப் பாடுபடுபவர்கள்' என்று கூறுவதில் ஈடுபட்டார்கள். என்னைக் கேட்டால், இன்று நாட்டில் எந்தக் கட்சியும் அரிசனங்களைப் புறக்கணித்து வாழ முடியாது! எல்லாக் கட்சிகளும் அக்கறை காட்டி வருவதால்தான், 'நாங்கள் அதிகம் செய்தோம்' என்று கூறுவதில் பெருமைப்படுகிறார்கள்.

"சட்டசபையில் எதிர்க் கட்சியினரின் பேச்சைப் பற்றி உறுப்பினர் ஒருவர் குறிப்பிடுகையில் — யாவரும் கவனிக்க மாட்டார்கள் என்ற எண்ணத்தினால் என்று கருதுகிறேன் — 'நன்றி' காட்ட வேண்டும் என்றார்.

"யாருக்கு யார் நன்றி காட்டுவது? ஒரு சமுதாயத்தை — நாட்டின் முதுகெலும்பு என்று கருதப்படும் ஒரு சமுதாயத்தைத் தலைமுறை தலைமுறையாக அடிமைப்படுத்திக் கொடுமைப்படுத்திய முன்னால் செய்த தவறுக்குக் கழுவாய் தேடும் முறையில்தான் இன்று பரிகாரம் தேடப்படுகிறது. நன்றிக்காக அல்ல! இந்த நாட்டின் அரிசனங்களை அமெரிக்காவில் உள்ள நீக்ரோக்களுக்கு ஒப்பிடுகிறார்கள்; ஆனால், இரண்டும் ஒன்றல்ல! 100 ஆண்டுகளுக்கு முன்னர் அடிமைகளாக வாழ்ந்த நீக்ரோக்கள், இன்று அமெரிக்காவில் எல்லா உரிமைகளையும் பெற்று முன்னேறி வருகிறார்கள். அந்த நாட்டில் விலைக்கு வாங்கப்பட்ட நீக்ரோக்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தை, இந்த நாட்டிலுள்ள அரிசன மக்கள் அடையவில்லை. 25 ஆண்டுகளுக்கு ஒரு முறை பெயரில் மாற்றம் காணப்படுவதைத் தவிர, வேறு என்ன முன்னேற்றத்தைக் காணமுடிகிறது? ஆகவே, இப்படி ஒப்புவமையில் ஈடுபடுவது, பிரச்னையிலிருந்து தப்புவதற்குப் பயன்படுமே தவிர, நல்ல பரிகாரமாக அமையாது.

"அரிசனங்களின் மார்க்கம் இந்து மார்க்கம் என்று கூறி இந்து மதத்தின் ஒரு பகுதியினராகிய அவர்களை மற்றப் பகுதியினர் ஒதுக்கியே வாழ்ந்து வந்தார்கள். அதற்குக் கழுவாய் தேடும் முறையில், நாமும் இதற்கு முன்னர் ஆட்சியிலிருந்த நீதிக் கட்சியினர் உள்பட எல்லோரும் பாடுபட்டு வந்திருக்கிறோம்; நன்றியை தெரிவிக்க அல்ல!

"அரிசனங்களுக்குப் பாடுபடுவதற்கு வேறு எந்தக் கட்சியும் இல்லை — என்று காங்கிரஸ்காரர்கள் மார்தட்டிக்கொள்ளக் கூடாது. அரிசனங்களுக்குப் பரிபூரணமாக காங்கிரஸ் எல்லாவற்றையும் செய்துவிட்டதா?

கிணறுகள் வெட்டப்படவில்லை; இடுகாடு (சுடுகாடு)களில் சாதி ஒழியவில்லை; கட்டப்பட்ட வீடுகள் சரியாக இல்லை; கல்விச் சலுகைகள் பயனளிக்கவில்லை — என்று ஆளும் கட்சியினரே கூறினார்கள். இதில் எந்தக் கட்சிக்கும் கருத்து மாறுபாடு இல்லை; ஆனால், எல்லோருடைய ஒத்துழைப்பையும் பெற என்ன செய்தீர்கள்?

தீண்டாமை ஒழிப்புக்காக அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததாகக் கூறப்பட்டுள்ளது. மாவட்டத்தில் 3 துணை சேவகர்கள் வீதம் அமைந்திருப்பது உண்மையானால், அவர்கள் இந்த ஆண்டில் என்ன செய்தார்கள்? அதற்கான தகவல்கள் எங்கே? அவர்கள் சாதித்ததை ஏன் அறிவிக்கவில்லை? தீண்டாமையை ஒழிப்பதற்காக நான் ஒரு விளம்பரம்தான் பார்த்திருக்கிறேன்; அந்தச் சுவரொட்டியில் 'தொட்டால் தீட்டு என்பது சட்டப்படி தண்டனைக்குரியது' என்பதைச் சித்தரித்து,

[தொடர்ச்சி பக்கம்—10]

பெருவெளிப் பயணம்!

பிரதம மந்திரி தான் நிதி மந்திரி என்கின்ற முறையில் சென்ற வாரம் பட்ஜெட் விவாதத்திற்குப் பதிலளித்தார்.

நீர்வளம் பெருக்கி...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

கூறியிருக்கிறார்கள். 1950-ம் ஆண்டு என்று எனக்கு நினைவு—கனம் பக்தவத்சலம் அவர்கள் அக்கினியாறு திட்டத்தைப் பார்வையிட்டு, வழிமுறைகளை எடுத்துக் கூறி, தண்ணீர் கணக்கு இவைகளையெல்லாம் போட்டு, திட்டத்தை உருவாக்க நல்ல முயற்சி எடுப்பதாகக் கூறியிருக்கிறார். ஆனாலும் இன்றைக்கு அந்த முயற்சியும் கைவிடப்பட்டுவிட்டதா இல்லையா என்ற சந்தேகக் குறியோடு நின்றிருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

நெல்லை மாவட்டத்திலிருந்து வந்திருக்கிற மதிப்பிற்குரிய நண்பர்கள் பேசியிருக்கிறார்கள். கீரியாறு, வேம்பாறு, பம்பையாறு முதலிய நல்ல பல திட்டங்களை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டங்களை நிறைவேற்ற அரசினரின் முயற்சியை எதிர்பார்த்துத் தவங்கிடக்கின்றனர் என்று கூற விரும்புகிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்தில் கோமுக நதித் திட்டம் இன்னமும் நிறைவேற்றப்படாமலிருக்கிறது. வடவாறு சீர்திருத்தம் செய்யப்படவில்லை. பணமலை ஏரித் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. அதோடு தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள நந்தன் கால்வாய்த் திட்டம் [நந்தன் பெயர் பெற்ற அந்த மாவட்டத்திலே, நந்தன் பரம்பரைப் புகழை நிலைநாட்ட—அந்தப் பரம்பரையில் இருந்தே வந்துள்ள அமைச்சர் அவர்கள்] இன்னும் நிறைவேற்றப்படாமலிருப்பதைக் கவனித்து உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி நம் மாநிலத்தில் இயற்கை வசதிகள் அதிகமாக இருந்தும் அவைகளைப் பயன்படுத்திக்கொள்ளும் முயற்சியில் ஈடுபடாமல், இயற்கை வசதி இல்லை என்று ஒரு வார்த்தையில் கூறி வருகிறார்களே என்று வியப்படைகிறேன். அப்படிச் சொல்லி வருவதன் காரணமாக நிறைவேற்றப்பட வேண்டிய பல திட்டங்களை நிறைவேற்றாமல் விட்டு விடுகிறார்கள் என்று கூற விரும்புகிறேன்.

வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் செய்யாறு அணைக்கட்டு, சதுப்பேரி, களம்பூர் ஏரி, வடவேடு ஏரி, கமண்டலநாக நதி திட்டங்கள் போன்ற பல திட்டங்கள் எடுத்துக் கூறப்பட்டும் கவனிக்கப்படவில்லை. குறிப்பாகவும், சிறப்பாகவும் என்னுடைய தொகுதியான குளித்தலைப் பகுதியில் குடகனாறு திட்டத்தைப்பற்றி நான் மிக மிக விளக்கமாக பலமுறை எடுத்துக் கூறியிருக்கிறேன். அந்தக் குடகனாறு திட்டத்தின்படி திண்டுக்கல் வட்டம் வேடசெந்தூருக்கு அருகேயுள்ள கல்வார்பட்டியில் ஒரு நீர்த்தேக்கம் கட்டி கிழ்ப் பக்கமாக சுமார் 20 மைல நீள வாய்க்கால் வெட்டினால் என்னுடைய குளித்தலைத் தொகுதியில் 10 ஆயிரம் ஏக்கருக்குமேல் பாசன வசதியைப் பெறும் என்று கூறியிருக்கிறேன். வருகிற ஏப்ரல் மாதம் 5-ந் தேதிகூட சர்வ கட்சித் தோழர்களைக்கொண்ட விவசாயிகள் மகாநாட்டைக் கூட்டுவதாக இருக்கிறது. குடகனாறு திட்டத்தைப்பற்றி சென்ற ஆண்டு மந்திரி கக்கன் அவர்கள் சொல்லும்போது—சென்ற ஆண்டு ஜூலை மாதம், 12-ந் தேதி என்று நினைவு—அமராவதி திட்டத்திற்குத் தண்ணீர் விடப்பட்டதும் அது கவனிக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அமராவதி திட்டத்துக்கு தண்ணீர் விட்டாகிவிட்டது. ஆகவே இதையும் கவனிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் காவேரி பிரிவில் தூர்ந்து போயிருக்கிற வாய்க்கால்களை சென்ற பத்து ஆண்டு காலமாக—சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்தே மராமத்து செய்யவில்லை. அந்தக் காவேரி கால்வாய்கள் வெட்டப்படுமானால் இன்னும் அந்தப் பிரதேசத்தின் வளம் அதிகமாகப் பெருக வழியேற்படும் என்று கூற விரும்புகிறேன்.

இவைகளையன்னியில் கிருஷ்ணா, கோதாவரி திட்டங்களுக்கு நம் சர்க்கார் செய்கிற முயற்சிகளைப் பாராட்டுகிறேன். இன்றைக்கு ஆந்திராவில் அந்நதிகளின் 10 சதவீதம் தண்ணீர்தான் உபயோகிக்கப்படுகிறது. அவர்களே அணை கட்டிக் கொண்டாலும் 40 சதவீதம்தான் அவர்களுக்குப்பயன்படும் என்றும், மிச்சம் இருக்கிற 60 சதவீதம் வீணாகப் போகாமல் தமிழக மாவட்டங்களுக்குப் பயன்படும் வகையில் செய்யலாம் என்றும் குறிப்பிட விரும்புகிறேன். அந்த வேலையை விரைவில் செய்ய திட்டமிட வேண்டும். அது அமைச்சர் அவை "விரைவில்" என்று சொல்கிற வார்த்தைக்குக் கொள்கிற புதிய பொருள்போல் இல்லாமல் "சீக்கிரமாக" நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோலவே, சென்ற ஆண்டு பாலாறு திட்டத்தைப் பற்றி எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள், எந்த வகையிலே பாலாற்றில் இருக்கிற தண்ணீரை "சப் ஸாயில் வாட்டர்" மூலம் எந்த அளவு நிறைவேற்ற முடியும் என்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதுவும் இதுவரையில் கவனிக்கப்படவில்லை. அதிலும் அமைச்சர் அவர்கள் தங்கள் கவனத்தைச் செலுத்துமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். பெரிய திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை என்று கூறும்போது 176 கோடி ரூபாய் செலவில் பக்ரா நங்கல் அணைக்கட்டுத் திட்டமும், 100 கோடி ரூபாய் செலவில் ஹிராகுட் திட்டமும், 140 கோடி ரூபாய் செலவில் தாமோதர் பள்ளத் தாக்குத் திட்டமும், இதுபோன்று பல பலத் திட்டங்களும் வடக்கே நிறைவேற்றப்படும் அதே நேரத்தில் இங்கு பெரிய திட்டங்களுக்கு வழியிலலை; பெரிய திட்டங்களுக்கு இயற்கை வசதியில்லை என்று கூறும்போது நான் இங்கு ஒன்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதாவது, சில ஆண்டுகளுக்கு முன்னர் ஸர் ஸி. பி. ராமசாமி அய்யர் அவர்கள், கங்கைத் தண்ணீர் குமரி வரை கொண்டு வரப்படுமானால் தென்னாடு வளம் பெறும் என்று ஒரு பெரிய திட்டத்தை வெளியிட்டிருக்கிறார்கள். நீங்கள்தான் தென்னாடு பிரிய வேண்டுமென்று கேட்கிறீர்களே, அந்த தண்ணீரை அவர்கள் கொடுப்பார்களா என்று கக்கன் அவர்கள் விடை பகரக் கூடும். தென்னாடு பிரிய வேண்டுமென்று நாங்கள் கூறும்போது நட்புறவு முறைகளோடு தான் ஒரு நாடு இன்னொரு நாட்டில் இருந்து விடுதலை பெற வேண்டுமென்று கூறுகிறோமே தவிர, நதி வளங்கள் போன்ற பல வளங்களைப் பகிர்ந்து கொள்ளக்கூடாது என்று நாங்கள் கூறவில்லை. கங்கையில் வீணாகப் போகும் தண்ணீரை தென்னகத்திற்குக் கொண்டு வரும் முயற்சியை ஸர். ஸி. பி. ராமசாமியின் "டிரான்ஸ் காண்டினேன்ட்டல் கனால்" திட்டத்தை வெகு விரைவிலே செய்து முடிப்பதற்கும், அதற்காகிற செலவை மத்திய அரசாங்கத்திலிருந்து கேட்பதற்கும் இந்த அமைச்சரவை துணிவு பெற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். கடைசியாக, வடக்கிலுள்ள ராஜ்யங்களில் கட்டப்படுகிற அணைத் திட்டங்களுக்கு மத்திய அரசாங்கம் பண உதவி செய்கிறது. ஆனால் இங்கு நம் அமைச்சர் அவர்களால் காலையில் தரப்பட்ட இந்த அறிக்கையில், இங்கு கட்டப்படுகிற திட்டங்களுக்கும், இங்கு செய்யப்படுகிற பாசன வேலைகளுக்கும் மக்களிடமிருந்துதான் நாங்கள் பெரிதும் எதிர்பார்க்கிறோம் என்ற வாசகம் காணப்படுகிறது. இத்தகைய நிலைமை வடக்கில் உள்ள ராஜ்யங்களில் இருக்கிறதா இல்லையா என்று தெரியவில்லை. ஏனென்றால் நான் அடிக்கடி வடக்கே போகாதவன். ஆகவே, மக்களிடமிருந்து வாங்கித்தான் நாம் இக் காரியங்களைச் செய்ய வேண்டுமா என்று கேட்டுக் கொள்வதோடு, இந்த நீர்ப்பாசனத் திட்ட மானியத்தின் மீது கொண்டு வரப்பட்ட இந்த வெட்டுப் பிரேரணையை நான் ஆதரிக்கிற இந்த நேரத்தில், இந்த அணைக்கட்டுகளையெல்லாம் இங்கு நீங்கள் கட்ட வேண்டுமென்றும், இல்லாவிடில் நாங்களாவது வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையே கட்டிக் கொள்கிற அணையையாவது அனுமதிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

வாக்காளர்களுக்கு நன்றி

அன்புடையீர்,

திருச்சி நகரசபை 13-வது வார்டு பொதுத் தொகுதிக்குத் தங்களின் மேலான வாக்குகளைத் தந்து என்னை பிரதிநிதியாக மீண்டும் தேர்ந்தெடுத்தமைக்கு என் உளம் நிறைந்த நன்றியையும், வணக்கத்தையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களன்புள்ள,

கே. தங்கலட்சுமி

கர்நாடக
தி. மு. கழக 2-வது மாநாடு

1958 ஏப்ரல் 26, 27-ம் நாட்களில்
பெங்களூர் சிட்டி, சுபாஷ் நகர்,
கோலார் தங்கவயல் சின்னராசன் திடலில்
கலைவாணர் என். எஸ். கே. அரங்கில்
நடைபெறும்.

★

தலைவர்: டாக்டர் **சத்தியவாணிமுத்து** எம். எல். ஏ.

திறப்பாளர்: நடிகமணி **டி. வி. நாராயணசாமி**

★

அறிஞர் அண்ணா

போதுச் செயலாளர் **நெடுஞ்செழியன்**

மற்றும் கழக முன்னணி வீரர்கள் கலந்துகொள்வர்.

★

இசைமுரசு **நாகூர் அனிபா**
குழுவினரின் கலைநிகழ்ச்சி உண்டு.

—வரவேற்புக் குழு

கரூர் தாலுக்கா விவசாயிகள் 5-வது மாநாடு

வெள்ளியணை (குளித்தலைத் தொகுதி)

★

5-4-58 சனி காலை நடைபெறும்.

தலைவர்: மு. கருணாநிதி

திறப்பாளர்: என். ரத்தினம்

(முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்)

சொற்பொழிவாளர்கள்:

திரு. குழந்தைவேல் எம். சி.
" அன்பில் தருமலிங்கம்
" என். ராமானுஜம் பி. ஏ,
(கரூர் நகர மன்றத் தலைவர்)
" உழவன் சி. பழனிக் குமாரன்
" பி. கோவிந்தசாமி ரெட்டியார்
" வி. ராமநாதன்
" செல்லப்பக் கவுண்டர்

—ஆர். ரத்தினம்,
சி. சீரங்கக் கவுண்டர்
[செயலாளர்கள்]

நாட்டு முதுகெலும்பு....

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

அதனை அதிகத் தொகை செலவிட்டு அச்சடித்தார்கள்; ஆனல் அவை விளம்பரமாகிக்கப் படவில்லை.

பொதுமக்களில் சிலர் ஆத்திரப்பட்டார்கள் என்று அதற்குக் காரணம் கூறினார்கள். அதைச் சோதனை செய்வதற்காக, நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூலம் அதே விளம்பரத்தை 5,000 தாள்கள் அச்சடித்து, எல்லாக் கிராமங்களுக்கும் அனுப்பினேம்; நான் சொன்னல் ஆச்சரியப்படுவீர்கள்—அந்தப் 'போஸ்டர்'கள் சிலவற்றைப் பார்ப்பனர்கள், தங்கள் வீடுகளிலேயே கட்டித் தொங்கவிட்டார்கள்!

"ஹரிஜன மக்களின் நிலையை ஆராய்ந்து குழு ஒன்று அறிக்கை வெளியிட்டிருக்கிறது — 'எடுத்துக்கொண்ட முயற்சி பயனளிக்கவில்லை' என்று அந்தக் குழு முடிவு கூறியிருக்கிறது.

"ஹரிஜனப் பிரச்சினையில் இரண்டு பகுதிகள் அடங்கியுள்ளன; ஒன்று—அவர்களை வறுமையிலிருந்து நீக்குவது; மற்றொன்று, அவர்களை சமுதாயக் கொடுமையிலிருந்து நீக்குவது. இரண்டுக்கும் தொடர்பு காணபபட்டாலும், அவை வேறு வேறு; இரண்டுக்கும் மாறுபாடு உண்டு. என்னுடைய பழைய அனுபவத்தைக் கூறி விளக்க விரும்புகிறேன். 10 ஆண்டுகளுக்கு முன்னர் காஞ்சீபுரம் ஊராட்சி மன்றத்திற்கு ஆணையாளராக ஒரு அரிசன் நியமிக்கப்பட்டார். அவர் வீடுகளின் வரியை உயர்த்த சாதி இந்துக்கள் வாழும் தெருவில் சென்றபோது அவரை அனுமதிக்கவில்லை. 'நான் ஆணையாளர்' என்றார் அவர்; 'அதுவும், நீங்கள் எந்த சாதியைச் சேர்ந்தவர் என்பதும் தெரியும்' என்றனர், சாதி இந்துக்கள்!

"10 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற சம்பவத்திற்கும் இப்போதுள்ள நிலைமைக்கும் என்ன சம்மந்தம் என்று கேட்பீர்கள். அரிசனங்கள் பணம் படைத்திருந்தாலும், நன்கு படித்திருந்தாலும், பதவியை வகித்தாலும் தீண்டாமைப் பிரச்சினை போகாது என்பதை வலியுறுத்தி விளக்கவே இதைக் கூறுகிறேன்.

"சாதிகளை ஒழிக்கவும், தீண்டாமையை அகற்றவும் எங்கள் கட்சியைத் துணைக்குத் தைரியமாக அழைக்கலம்; ஏனெனில், 'சாதிகள் ஒழிக்கப்பட வேண்டும்' என்று தொடர்ந்து வலியுறுத்தி, உங்களுக்கு முன்பிருந்தே நாங்கள் பேசி வந்திருக்கிறோம்.

"எங்களைப் பார்த்து 'கிணறு வெட்டினீர்களா?' என்றால்—இல்லை! 'மாடுகள் வாங்கித் தந்தீரா?' என்றால்—இல்லை! 'விதை கொடுத்தீரா?' என்றால்—இல்லை! ஏன் என்றால், நாங்கள் 'கஜானா' பக்கத்தில் இருந்ததில்லை.

"நாங்கள் சாதி ஒழிப்புக்காகப் பாடுபட்டு வந்திருக்கிறோம் என்பதை மட்டும் கூறிக்கொள்கிறேன். கக்கன் அமைச்சர் பதவிக்கு வருமுன் இதே பதவியில் எம். சி. இராஜா இருந்தார் என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

"சாதிகள் ஒழிய தீவிரவாதிகளை ஒன்று திரட்டுங்கள். எல்லாக் கட்சிகளின் ஆதரவையும் பெறுங்கள். கட்சியினுடைய கட்டுப்பாட்டிற்கு உட்பட்டே சாதியை ஒழிக்க எல்லோரும் ஒன்றுசேரலாம். அரிசனங்கள் பிரச்சினைக்கு நல்ல பரிகாரம் தேடவாரீர்! குதிரைக்குத் தழும்பு ஏற்படாதவாறு வேகத்தை அதிகரிக்கச் சாட்டையால் தட்டுவதுபோல, இந்த மானியத்தின்மீது கொண்டுவரப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரிக்கிறேன்.

●●●

பிறைவானம்...

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

இப்போது—அவர்களே பாதிக்கப்படுகிற பயங்கரமான நிலை பிறந்துவிட்டதே!

கசபிளான்காவின் தந்தை அதற்குள் கப்பலிலே உள்ள பணியாளர்களிடம் கலந்து பேசினர்.

அதற்குள் அந்தக் கப்பல் நெருங்கிக்கொண்டிருந்தது. அதிலே இப்போது மனித உருவங்களும் நன்கு தென்பட்டன. நெஞ்சிலே கொடிய எண்ணம் சுமந்து—கையிலே கொலைக் கருவிகள் ஏந்தியிருந்த அக்கும்பல் கசபிளான்கா பிரயாணம் செய்துகொண்டிருந்த கப்பலை நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்தது.

கசபிளான்காவின் தந்தையும் மற்றவர்களும் எதிரிகளைத் தாக்குவதற்கு—தங்கள் கப்பலில் இருக்கின்ற பொருள்களைக் காப்பதற்குத் தயாராகிக் கொண்டிருந்தார்கள்.

ஆயுதம் தாங்கிய கொள்ளைக்காரக் கப்பல் அவர்களை நெருங்கிவிட்டது. அப்போதுதான் கசபிளான்காவின் நினைவு வந்தது அவன் தந்தைக்கு.

"மகனே! இங்கு வா!" என்றார்; தந்தை சொல் தட்டாத அந்தத் தம்பி அப்பாவிடம் சென்றான்.

"என் பின்னலேயே வா!" என்றார்; 'ஏன்' என்று கேட்டறியா சிறுவன் பேசாமல் பின்தொடர்ந்தான்.

"கீழே இறங்கு!" என்றார்; வாய்மூடி மௌனியாக இறங்கினன், கப்பலின் கீழ் தளத்துக்கு.

"இங்கே நில்!" என்றார்; சுட்டிக்காட்டிய இடத்தில் தப்பாது நின்றான்.

"நீ இந்த பாதுகாப்பான இடத்திலேயே நிற்கவேண்டும்! இதை விட்டு ஓர் அங்குலமும் அசையக்கூடாது!.....தெரிகிறதா? 'மகனே வா!' என்று நான் அழைக்கும்போதுதான் நகரவேண்டும்!" என்றார் அப்பா. தலையசைத்தான் கசபிளான்கா. அப்பா அவசர அவசரமாக மேலே போய்விட்டார். மகனைப் பக்குவமான இடத்தில் பத்திரப்படுத்திவிட்டேன்; பகைவர்களை விரட்டிவிடுவேன்; பின் 'மகனே, வா!' என்று அழைப்பேன்; வந்துவிடுவான்—என்ற எண்ணம் அவர் நெஞ்சிலே குடிகொண்டிருந்தது. எல்லாம் நினைப்பதுபோல் நடந்துவிடுமா என்ன?

தந்தை மேலே சென்றார். தகாத செயல் புரிய வந்துவிட்ட கடற்கொள்ளைக்காரர்களோடு போர் துவங்கிவிட்டது! கத்திகள் மோதிக்கொண்டன. கனமான பொருள்கள் வீசி எறியப்பட்டன. அந்த நள்ளிரவில், 'மினுக், மினுக்' கென்று எரிந்துகொண்டிருந்த விளக்கொளியிலே அங்கே ஒரு போர்க்களமே உருவாகிவிட்டது!

இவை ஒன்றும் கப்பலுக்கடியில் பாதுகாப்பான இடத்தில் நின்றுகொண்டிருந்த கசபிளான்காவிற்குத் தெரியாது. அவன் காத்துக்கொண்டிருந்தான்.

எதற்காக?

"மகனே, வா!" என்ற தந்தையின் அழைப்புக்காக! அது கிடைக்கின்றவரையில் அவன் நகரமாட்டானே!

போர் பயங்கரக் கட்டத்தை அடைந்துவிட்டது! பலம் பொருந்திய கொள்ளைக்காரர்கள்... பொருளை இழக்கத் துணியாத கப்பல்காரர்கள்......இருவருக்குமிடையே கோர யுத்தம்... பலரை பலிவாங்கிவிட்டது......இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது! "ஐயோ, ஐயோ!" என்று அலறிக்கொண்டு கடலிலே விழுந்து செத்தார்கள் பலர்!

"மகனே, வா!"—இந்த அப்பாவின் அழைப்புக்காக கப்பல் கீழ் தளத்தில் நின்றுகொண்டிருந்தான் கசபிளான்கா.

அவன் ஆடவில்லை; அசையவில்லை; ஆனல் அந்தக் குரலும் கிடைக்கவில்லை! அவன் நின்றுகொண்டேயிருந்தான்.

யுத்தம் இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்டது. வெற்றி யாருக்கென்று கேட்கிறீர்களா? கொள்ளையடித்தலையே தொழிலாகக் கொண்டுவிட்ட அந்தக் கொடியவர்களுக்குத்தான்! கசபிளான்காவின் கப்பலில் வந்திருந்தவர்களில் அநேகர் சாவுக்குப் பலியானர்கள்! பலர் கையில் கிடைத்த கட்டைகளோடு கடலில் குதித்து உயிர் பிழைத்தார்கள்!

இத்தனைக்கும் கசபிளான்கா மட்டும் அதே இடத்தை விட்டுக் கடுகளவும் அசையவில்லை. ஆனல் சிறிது நேரத்தில் அவன் கப்பலில் தீ பிடித்து எரிகின்ற காட்சியைக் கண்டு திடுக்கிட்டான்! ஆமாம்; கொடியவர்கள் அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு, கப்பலுக்கும் தீ வைத்துவிட்டுச் சென்றுவிட்டார்கள், வேறு கப்பல் ஏதேனும் கண்களில் தென்படுகிறதா என்று தேடி!

கசபிளான்காவுக்குப் பயம் வந்துவிட்டது. இருந்தாலும் தந்தையின் "மகனே, வா!" என்ற அழைப்புக்காகக் காத்துக்கொண்டிருந்தான்.

தீ நாற்புறமும் பரவியது. கசபிளான்காவை நோக்கி வந்தது! அவன் அலறினன், "அப்பா! அப்பா!" என்று!

கசபிளான்காவைச் சுற்றிலும் தீ!

அவன் துடி துடித்தான்! "அப்பா! அப்பா! என்னைக் கூப்பிடுங்களேன்!" என்று கதறினன். ஆனல்...

"மகனே, வா!"—அந்த அழைப்பு கிடைக்கவே இல்லை!

தீ கசபிளான்காவின் உடலைத் தீண்டத் துவங்கிவிட்டது. பைத்தியக்காரன்; அந்த நேரத்திலாவது அந்த இடத்தைவிட்டு ஓடியிருந்தால், நீர்ரில் விழுந்தேனும் உயிர் பிழைத்துவிடமுடியும். ஆனல் அவன் அசையவில்லை. அவனை 'நகராதே!' என்று ஆணையிட்ட அந்த அழிவு சக்தி எது? தந்தை சொல்! ஆமாம்; ஆமாம்! அப்பாவின் அந்த அழைப்புக்காகத்தான் அந்த பரிதாபத்திற்குரியவன் சாவு முகட்டிலும்கூட காத்து நின்றான்.

ஆனல்...அந்தக் குரல்......அது எழும்பவே இல்லை! தந்தை இருந்தால் அல்லவோ அந்த அழைப்பு கிடைக்கும்! அவர் எங்கே? கொள்ளைக்காரர்களின் கொடுவாளுக்குப் பலியாகி—குருதி சிந்தி — கடல் நீரிலே அமிழ்ந்துவிட்ட சோகக் கதையை கசபிளான்காவுக்கு யார் சொல்ல இருக்கிறார்கள்? தந்தை மடிந்துவிட்டார் என்பதைத் தெரியாத அந்தத் தம்பி 'தந்தை சொல்லைத் தட்டாது' நின்றுகொண்டிருக்கிறனே; தீயுக்கு நடுவில்!... என்ன ஆகுமோ?...

என்ன ஆகும்?...

அப்பாவின் அழைப்புக்குக் காத்திருந்த அந்தத் தம்பி அவரிடமே போய்விட்டான்!

"மகனே, வா?" என்று அப்பா அழைத்தார் — அவனும் போனன் —ஆனல் எங்கே—சாவுருக்கு!

பார்த்தாயா? அந்தப் பையன் தந்தை சொல்லை மீறக்கூடாது என்றுதான் எண்ணினன்; ஆனல் ஆபத்துக் காலத்திலும் அறிவைப் பயன்படுத்தத் தவறினன்; அநியாயமாகச் செத்து மடிந்தான்!

●

ஆசிரியர் கதையைக் கூறிமுடித்தார். மற்ற மாணவர்கள் தங்களுக்கு ஒரு நல்ல கதை கிடைத்தது என்று எண்ணி மகிழ்ந்தார்கள்!

ஆனல்...அந்த மாணவன்......? அவன் உள்ளத்திலே பெரும் புயல்! அவன் எங்கேயோ திடீரென்று ஓட ஆரம்பித்தான்.

"எங்கே ஓடுகிறாய், நீ?" என்று இரைந்தார் ஆசிரியர்.

அவன் இப்படிச் சொல்லிக்கொண்டே ஓடினன்:

"அந்த விழுப்புரத்து விருந்தாளியைத் தேடிப் பிடிக்கத்தான்; அவரிடம் மன்னிப்புக் கேட்கத்தான்!"

—சொர்ணம்

பிறை வானம்

...பிள்ளைகள் பகுதி...

தந்தை சொல்

"அப்புறம்......?"

"விழுப்புரம்...!"

"என்ன கிண்டல் செய்கிறாயா?..."

"இல்லை...இல்லை! விழுப்புரத்திலிருந்து வந்தார் அந்த விருந்தாளி என்று சொல்கிறேன்..."

"விழுப்புரத்திலிருந்து வந்தால் என்ன; விண்ணிலேயிருந்து குதித்தால்தான் என்ன?...... அவருக்கு உன்மீது எவ்வளவு அன்பு இருந்திருக்கிறது...! அந்த ஆசையை விஷமென எண்ணிவிட்டாயே நீ! செய்யலாமா அப்படி?..."

"நான் என்ன செய்வேன்? என் அப்பாதானே சொன்னார்!..."

"அப்படியா? அப்பா சொன்னார் என்பதற்காக எதை வேண்டுமானாலும் செய்துவிடலாமா?"

"என்ன இப்படிப்பேசுகிறீர்கள்? தந்தை சொல் மிக்க மந்திரமில்லை—நீங்கள்தானே இப்படிச்சொல்லியிருக்கிறீர்கள்...... படித்துப் படித்துப் பலமுறை போதித்திருக்கிறீர்கள்!..."

"ஆமாம்......அதற்காக? உனக்குப் பிரியமில்லாததை—உளமார நீ விரும்பாததை '...ம்... நடத்திடு' என்று அப்பா ஆணையிட்டால், செய்துவிடுவாயா நீ?... யோசித்துப் பார்!... 'என் கண்ணே! நீ நேற்றுவரை பெரும் பாதகம் செய்துவிட்டாயே! தெரிந்தோ தெரியாமலோ மகத்தான குற்றம்புரிந்துவிட்டாயே! கையோடு கையிணைத்துப் பள்ளி செல்வாயே நீ, அந்த நண்பன் தீண்டத் தகாதவனுமே! அந்தக் கழுதையிருக்கும் திசை நோக்கி இனி திரும்பியும் பார்க்காதே!' என்று உன் தந்தை ஆணையிட்டால்—உன் உயிர் நண்பனை இழந்துவிடத் துணிவாயா நீ?...... உங்கள் இருவருக்குமிடையே பின்னிக் கிடக்கும் பாசமிருக்கிறதே; அதை ஒரே கணத்தில் வெட்டிவிடத் துணியுமா உன் உள்ளம்?"

"முடியாது!...முடியாது!..."

"ஏன்... அப்பாதான் சொல்லிவிட்டாரே?"

"ஆனாலும் நிச்சயம் முடியாது! ...ஊஹூம்......என்னால் முடியவே முடியாது!..."

"'காளிதேவி இரத்தபலி கேட்கிறாள், என் செல்வமே! ஆகவே, நீ அன்போடு வளர்த்து வருகிறாயே ஆட்டுக்குட்டி; அதை அம்மன் சன்னதியிலே பலி கொடுக்க வேண்டும்...தா!' என்று தந்தை கேட்டால், கண்ணின் கருமணிபோல் காத்து வருகிறாயே, அந்த அழகான ஆட்டுக் குட்டியின் கழுத்திலே வெட்டரிவாள் விழ—தலை துண்டாக—இரத்த வெள்ளத்திலே துடிதுடித்துச் சாக — அனுமதிப்பாயா நீ?"

"ஐயையோ!......முடியாது!...... முடியாது!..."

"ஏன், அப்பாதான் சொல்லிவிட்டாரே?"

"ஆனாலும் கட்டாயம் முடியாது!..."

"அதைத்தான் நான் இப்போது சொல்லுகிறேன்! தந்தை சொல்லிவிட்டார்; தாயாரும் உடன் நிற்கிறார் என்பதற்காக தகாதன செய்துவிடலாமா?........வீட்டுக்கு வந்தாரே அந்த விருந்தாளி; அவர் உன் தந்தையிடம் கடன் பட்டவர் என்பதற்காக இப்படிக் கொடுமை செய்யலாமா?"

"ஆமாம்......கொடுமைதான் செய்துவிட்டேன்; குமுறுகிறது என் நெஞ்சம்! அப்பா அவரைத் திட்டினார்; 'வந்த வேலை என்ன வகையற்றவனே!' என்று வசை பாடினார்; 'வாங்கிய கடனை வட்டியும் முதலுமாக வை! பின் உன்னை கால் வை!' என்று பாய்ந்தார்! நான் பயந்தேன். வெய்யிலிலே நடந்து வந்த களைப்போ—எத்தனை நாள் பட்டினியோ—தந்தையின் கொடுமையைத் தாங்க முடியாமல் சகித்துக்கொண்டு 'தண்ணீர்; தண்ணீர்!' என்றார் அந்தப் பெரியவர். அதுவும் என்னைப் பார்த்து. என்மேல்தான் அவருக்கு எப்போதும் குறையாத பிரியம்! உடனே ஓடினேன் சமையலறைக்கு. நீரெடுத்துவந்தேன். நீட்டினேன். தாவினார் அவர். குறுக்கே பாய்ந்தார் தந்தை! 'தராதே' என்றார்; நான் தரவில்லை!......'உள்ளே விடாதே!' என்றார்; நான் வழிமறித்தேன்!... 'கதவைத் தாளிடு!' என்றார்; படாரென்று இழுத்து அடைத்துவிட்டேன்!..."

"அடப்பாவி! செய்யலாமா அப்படி?"

"செய்துவிட்டேன், தந்தை சொல்லிவிட்டாரே என்பதற்காக! இப்போதுதான் வெட்கப்படுகிறேன்...தலை குனிகிறேன்!...

பள்ளி ஆசிரியரின் முன்னாலே தலை குனிந்து நின்றுகொண்டிருந்தான் அந்த மாணவத் தம்பி!

வீட்டிலே அன்றாடம் தான் செய்கிற நல்ல—அல்லது கெட்ட காரியத்தை தினம் தினம் ஆசிரியரிடம் ஒளிக்காமல் சொல்ல வேண்டும்—என்பது அந்த வகுப்பிலே மட்டும் ஒரு நல்ல வழக்கம். ஆசிரியர்—மாணவருக்கிடையே சுமுகமான நல்லுறவு பலப்படும் என்பதற்காக அந்த ஏற்பாடு!

அந்தத் தொடர்ச்சியில்தான் அன்று தான் அறியாது செய்துவிட்ட தவறொன்றைச் சொல்லித் தவித்து நிற்கிறான், அந்த மாணவன்!

"தந்தை சொல்வதைக் கேட்கத்தான் வேண்டும்! ஏனெனில் பெற்றவர்கள் நமக்குத் தீங்கா இழைத்து விடுவார்கள்? ஆனாலும் இப்படி சில சம்பவங்கள் நேர்ந்துவிடத்தான் செய்கின்றன. அதைத் தடுப்பதுதான் எப்படி? கொஞ்சம் யோசிக்க வேண்டும்; அவ்வளவுதான்!...அப்பா வழிகாட்டலாம்; ஆனாலும் கண்களை மூடிக்கொண்டு நடந்துவிடக் கூடாது; அறிவுக் கண்களைத் திறந்துகொள்ளத்தான் வேண்டும்!...அப்போதுதான் இத்தகைய எதிர்பாராத ஆபத்துக்களைத் தவிர்க்க முடியும்!..."

பையன் தலைகுனிந்தபடியே நின்றான்.

"கதை ஒன்று சொல்கிறேன்; கேள்...ஆங்கிலக் கவிதை ஒன்றின் தழுவல்..."

ஆசிரியர் அந்த மாணவனுக்கு மட்டுமல்ல; வகுப்பிலே இருந்த மற்ற முப்பத்து ஒன்பது தம்பிகளுக்குமாகச் சேர்த்துச் சொல்ல ஆரம்பித்தார்:

* * *

கசபிளான்கா என்பது அந்தச் சிறுவனின் பெயர் — புத்திசாலி! நன்றாகப் படிப்பான்; ஓடியாடி விளையாடுவான்! ஆனால் எல்லாமே அவனுடைய ஆசை அப்பாவிடமிருந்து 'ஆணை'யாகப் புறப்பட வேண்டும்!

"தந்தை சொல்" — அதுதான் அவனைக் கட்டிப்போடும் சக்தி பெற்ற 'மந்திரக் கயிறு'!

"நேராகப் பள்ளிசென்று நேராகத் திரும்பி வா கண்ணே!" என்பார்; சுருக்கச் செல்லலாமே என்று குறுக்கு வழியில்கூடப் போகமாட்டான்! நேர் வழி சென்று நேரே திரும்புவான்!

"அதல்லவோ குழந்தை!"—என்றனர் ஊரார்!

"எனக்குத்தான் வந்து வாய்த்திருக்கின்றன, குட்டிச் சாத்தான்கள்..." என்று தூற்றினர் அதிகக் குழந்தைகளைப் பெற்று அவதிப்பட்டவர்கள்!

"கசபிளான்கா தந்தை சொல் தட்டாத தம்பி!" —மொத்தத்தில் ஊர் இந்தப் பட்டத்தை அவனுக்குச் சூட்டிவிட்டது!

அவனுடைய தந்தை யார் என்று சொல்லவில்லையே; அவர் ஒரு மாலுமி! கப்பலோட்டி நாடு பல சுற்றுபவர். அவர் தன் மகனிடம் கதை கதையாகச் சொல்லுவார், கடல் பயணத்தைப்பற்றி! பாயைப் போல் சுருண்டுவிழும் அலையில்லா நடுக் கடல்... கண்களுக்கு எத்திசையும் புலப்படாத தனிமை... உடலோடு உயிரையும் சேர்த்து விழுங்கும் மாபெரும் திமிங்கிலங்கள் நீருக்குமேலே வந்து வந்து மறையும் பயங்கரமான — இருந்தாலும் பார்க்கத்தூண்டும் காட்சி ...இப்படி இன்னும் எவ்வளவோ...

அப்பா சொல்லிக்கொண்டேயிருப்பார். கசபிளான்காவும் கேட்டுக்கொண்டேயிருப்பான். அவன் கண்களில் வியப்பு வட்டமிட்டபடியே இருக்கும். அந்த வியப்பு... ஒரு நாள் ஆசையாக மாறிவிட்டது!

"நானும் ஒரு முறை கடல் பயணம் செய்து பார்த்தால் என்ன?" —இந்த ஆசையை உடனே அப்பாவிடம் வெளியிட்டான் அவன்.

வாயைத் திறந்து இப்படி ஒரு வேண்டுகோளை அதுவரை வெளியிட்டதேயில்லை அவன். அப்பாவுக்கு அது நன்றாகத் தெரியும். "போ" என்றால் போய், "வா" என்றால் வரும் அவன், "நானும் வருகிறேனப்பா" என்று ஆசையோடு கேட்கிறானென்றால் "வேண்டாம்!" என்று சொல்லிவிடுவாரா அவர்? "சரி, கசபிளான்கா! நாளைக்குப் புறப்படுகிறது கப்பல்! உன்னையும் நிச்சயம் அழைத்துக்கொண்டு செல்கிறேன்!" என்றார்.

அவன் துள்ளிக் குதித்தான் அவனுக்கு ஒரே குதூகலம்..... கொண்டாட்டம்!

* * *

மறுநாள் கப்பல் புறப்பட்டது. நீலத்திரைக் கடலில் நெடும் பயணம் துவங்கிவிட்ட அந்தக் கப்பலில், பூரிப்பால் மகிழ்ந்து கொண்டிருந்த கசபிளான்காவும் சென்று கொண்டிருந்தான்!

கப்பல் நீரைக் கிழித்துக் கொண்டு சென்றது. கரை கடந்தது. வீடு வாசல் மறைந்தது. பறவைகள் மறைந்தன. நகரமே மறைந்தது. அலை ஓய்ந்தது! ஆழம் காணமுடியாத நடுக்கடல்...கப்பல் சென்று கொண்டேயிருந்தது. கசபிளான்கா கப்பல் மேல் தளத்தில் இங்கும் அங்குமாக 'ராஜா' போல் நடை போட்டான். நுரை கிளம்பி கப்பல் செல்லும் வேகம்... துள்ளித் துள்ளி மறையும் சின்னஞ்சிறு மீன்கள்...எல்லாம் கசபிளான்காவைக் களிப்பின் எல்லைக்கே இழுத்துச் சென்றது.

கப்பல், பல மைல்களுக்கு அப்பால் வந்துவிட்டது.

நேரம் சென்று கொண்டிருந்தது; பகல் போய்க் கொண்டிருந்தது. வரப்போகும் பேராபத்தை முன்கூட்டியே உணர்த்துவது போல் இருள் கப்பிக் கொண்டு வந்தது!

கப்பலில் விளக்குகள் ஏற்றப்பட்டிருந்தன. கசபிளான்காவுக்கு அப்போதும் தூக்கம் வரவில்லை. அந்தக் கரிய இருட்டிலேயும் அவன் என்ன காட்சியைக் கண்டானோ; நின்றுகொண்டேயிருந்தான்.

திடீரென்று அவன் கூரிய கண்களில் தூரத்தில் ஏதோ தட்டுப்பட்டுவிட்டது. உடனே அவசர அவசரமாக அப்பாவிடம் ஓடினான். தான் கண்ட ஆச்சரியத்தை அவருக்கும் காட்டினான். ஆனால்... ஆனால்... அதைக் கண்டவுடன் அவரது முகம் ஏன் அப்படி விகாரமாகமாறவேண்டும்? 'அதிசயத்தைக் காட்டினேன்; ஆனால் ஆகாதன கண்டதுபோல் அப்பாவின் முகம் ஏன் இப்படி மாறுகிறது?' என்று புரியாது விழித்தான் கசபிளான்கா! இத்தனைக்கும் அபாயகரமானது எதையும் அவன் காட்டிவிடவில்லையே! மறுபடியும் அந்தத் திசையில் ஒரு முறை பார்த்தான்.

தூரத்தில் தீப ஒளி தெரிந்தது. பல விளக்குகள் ஒன்றாகச் சேர்ந்து எரிந்து கொண்டிருந்தன. அதுவும் ஒரு கப்பலாகக் கூட இருக்கலாமே; ஆனாலும் அப்பாவின் முகத்திலே ஏன் இந்த கலவரத்தின் சாயல்? "என்னப்பா? ஏன் என்னவோபோல் மாறிவிட்டீர்கள்? என்ன அது?..." என்று கேட்டுவிட்டான் துணிந்து!

"கடற் கொள்ளைக்காரர்கள்!..."

கசபிளான்காவுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

கடற் கொள்ளைக்காரர்கள்பற்றி அவன் அறிந்திருக்கிறான். நடுக்கடலில்— நள்ளிரவில் கப்பலிலே வந்து தன் வழியே சென்று கொண்டிருக்கும் கப்பல்களை வளைப்பார்கள்; வம்புக்கிழுப்பார்கள்; குறுக்கிட்டவர்களைக் கொன்று குவிப்பார்கள்! கொஞ்சமும் இரக்கமற்ற அந்த மிருகச் செயல்களைப்பற்றி அவன் எண்ணி எண்ணி வருந்தியதுண்டு. ஆனால்

[தொடர்ச்சி பக்கம்—10]

★ கற்பனை உரையாடல் ★

அறிவிலிகள் மாநாடு!

[இதுவரையில் எத்தனையோ மகாசபைகள் நடந்திருக்கின்றன. எத்தனையோ அறிவிலிகள் தங்களை அறிவாளிகளெனக் கூறிக்கொண்டு, மாபெரும் உரையாற்றியுள்ளனர். ஆனால் தங்களை அறிவிலிகளெனக் கூறிக்கொண்டு — உள்ளத்தைத் திறந்து காட்ட முன் வருவோர்கள் மிகக் குறைவு!

மேல் உலகில் இப்படிப்பட்ட அறிவிலிகள் மாநாடு ஒன்று நடைபெற்றதாம். தங்களது தலைவரைத் தேர்ந்தெடுக்க! களிமண்ணுக்கு உயிரூட்டும் வேலையில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானி திருவாளர் பிர்மா முதல், கங்கையைத் தலையில் தாங்கியவாறு களி நடனம் புரியும் சிவபெருமான் வரையில்— எல்லோரும் கலந்து கொண்டனராம்.]

அறிவிலி—1: தலைவர் அவர்களே!...

அறிவிலி-2: ஓய், அறிவிலி! தலைவரைத் தேர்ந்தெடுக்கத்தானே இங்கு கூடியுள்ளோம்! பிறகு என்ன 'தலைவர் அவர்களே' என ஆரம்பிக்கிறாய்?

அறிவிலி—1: மன்னிக்க வேண்டும்... அறிவிலி அன்பர்களே! ...நான் உங்களைவிட அறிவிலியாதலால் தவறிப் போய் விட்டேன்...

அறிவிலி—3: நாக்கை அடக்கிப் பேசு!...நாங்கள் தான் உன்னைவிட முழு அறிவிலிகள்!

அறிவிலி—1: நிறுத்துங்கள்! மாநாடு முதலிலேயே குழப்பத்தில் ஆரம்பமாக வேண்டாம்!......வடிகட்டிய அறிவிலிகளே! வணக்கம் பல! நீங்கள் என்னைவிடச் சிறந்த அறிவிலிகளாதலால் நான் கூறப்போவதை நீங்கள் புரிந்து கொள்வது சிறிது கஷ்டம்தான்! இருந்தபோதிலும் உங்களுக்குப் புரியும்படி விளக்கமாகக் கூற முயற்சிக்கிறேன்!

தோழர்களே! தேவர்கள் தோன்றிய காலத்திலிருந்து அறிவிலிகளின் இனமும் இந்த உலகிலே வாழ்ந்து வந்திருக்கிறது! உலகிலே எவ்வளவு அறிவாளிகள் இருக்கிறார்களோ அவ்வளவு அறிவிலிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள்! எண்ணிக்கையில் பார்க்கப்போனால் நாமும் அறிவாளிகளும் சமமானவர்களே! உலகில் முதன் முதல் தோன்றிய மனிதன்கூட அறிவிலியாகத்தான் தோன்றினான். எனவே அறிவிலிகள்தான், இந்த உலகத்திற்கும் பூவுலகத்திற்கும் மூதாதையர்கள்!

சூரியனைப்பற்றி சரியாகத் தெரியாத அறிவிலிகள், சூரியன் பலபல குதிரைகள் பூட்டிய தேரிலே ஏறி உலகை வலம் வருவதாகக் கதை புனைந்தார்கள்! கடற்கரையையே கண்டிராத ஓர் அறிவிலி பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு கடலில் ஒளிந்து கொண்டதாகப் புழுகிவைத்தான்! பூமியின் மேல் நிற்கும் அலைகள் நிரம்பிய நீர்த் தேக்கம் தான் கடலென்று அவனுக்கு ஒருவருமே கூறவில்லை போலும்! கடலென்றால் அது பெருவெளியில் தொங்கி நிற்கும் மாயப் பொருளாகக் கருதினான்! பூமி தட்டையாக இருப்பதாக அன்றைய மக்கள் யாவரும் நம்பினார்கள்! எனவேதான் தீபாவளி கதை நாட்டிலே தோன்றியது! ஆனால் இன்றைக்கும் சூரியனை விழுங்கும் இராகுவை வணங்கும் அறிவிலி பக்தர்களும், தீபாவளித் திருநாளைக் கொண்டாடும் படித்த அறிவிலிகளும், பூவுலகிலே இருப்பதைக் காணும்போது, களிமண்ணுக்கு உயிரூட்டலாமென முயற்சி செய்துவரும் நம் மேலுலக அறிவிலி விஞ்ஞானி, திருவாளர் பிர்ம்மாவின் நினைவுதான் வருகிறது! (கை தட்டல்) மூஞ்சூரைப் பிடித்து ராக்கெட்டாக ஆக்கலாமெனக் கூறும் நம் விநாயகர், நேற்று வான வீதிக்கு வந்த ருஷ்ய ஸ்பூட்னிக்கை ஆராய்ச்சி செய்து வருகிறார்! அமெரிக்க ஆல்பாவை ஏற்றி வந்த ராக்கெட்டைப் பார்த்துவிட்டுப் பொருமைப் பட்டுக் கொண்டிருக்கிறார், வள்ளி தெய்வானையுடன் மயிலேறி, உலகைச் சுற்றி வரும் எனது தோழர் மொட்டையாண்டி! (பலத்த ஆரவாரம்) இவ்வுலகிலே மயிலும் மூஞ்சூருவும் போட்டி போடுவதைப் போல், பூவுலகிலே ஆல்பாக்களும் ஸ்பூட்னிக்குகளும் போட்டிப் போடுகின்றன!

இதை எதற்காக நான் எடுத்துக் கூறுகிறேன் என்றால், முழு அறிவிலியாக இருந்த முருகபிரான் போன்ற தோழர்கள் பூவுலக அறிஞர்களைப் பார்த்துவிட்டு அறிவாளிகளாக மாறுவது நம் இனத்திற்கே அவமானமில்லையா? எனவே ஆராய்ச்சி செய்து மூளையைக் குழப்பிக் கொள்ளாது என்றுமே நிரந்தர அறிவிலியாக இருக்க முயற்சி செய்வீர்களாக! வணக்கம்!

அறிவிலி—2: எனது முழு அறிவிலி அன்பர்களே!...முக்காடிட்டு அமர்ந்திருக்கும் அரை அறிவிலி அன்பர்களே! மறைந்து நின்று என் பேச்சைக் கேட்கும் மதிப்புமிக்க மாற்றுக் கட்சி அறிவிலிகளே! எனக்கு முன்னால் பேசியவர், தேவர்களெல்லாம் பூவுலகைப் பார்த்து அறிவாளிகளாக மாறுவது 'அறிவிலி இனத்திற்கே ஆபத்து' என முழங்கினார்! பூவுலகிலே அறிவிலிகள் இனம் அடியோடு மறைந்து விடவில்லை. குறிப்பாக அறிவிலிகள் இனத்திற்கு இந்தியாவில் பெரும் ஆதரவு இருந்து கொண்டுதான் இருக்கிறது! கூறப்போனால் நம் இனத்தவர்கள் அங்கே பெரிய பெரிய பதவி வகிக்கிறார்களென்று நாரதர் அவர்கள் அண்மையில் தேவருலகப் பாராளுமன்றத்திலே கூறியதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்! திரு. கருணாநிதி என்பவர் பூவுலகிலே கூறிய கதையைக் கூட அவர் கூறினார். நம் இனத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்ற அந்தக் கதையை மீண்டும் உங்களுக்குக் கூற ஆசைப்படுகிறேன்:

கீழ்ப்பாக்கம் பைத்தியக்கார விடுதியிலே அன்று ஒரே பரபரப்பாக இருந்ததாம்! போலீஸ் புலிகள் நுழையக் கூடாத அந்த ஆஸ்பத்திரியிலே போலீசார்கூட புகுந்து தேடினார்களாம்! ஏன் தெரியுமா? ஒரு பைத்தியத்தைக் காணோமாம்! பைத்தியம் காணாமற் போனாலும் தொலையட்டும். போகும் பொழுது அந்தப் பைத்தியம் தன் மூளையை எடுத்துக் கொண்டாவது சென்றிருந்தால் பரவாயில்லை! டாக்டர் 'ஆபரேஷன்' செய்து, பைத்தியத்தின் மூளையை வெளியே எடுத்து வைத்து விட்டு, ஆறுவைக் கருவி ஒன்றை எடுக்க உள்ளே போனாராம்! திரும்பி வந்து பார்க்கும்பொழுது பைத்தியத்தைக் காணோமாம்! பாவம்......டாக்டர் என்ன செய்வார்? பைத்தியத்தின் மூளையை எடுத்து பக்குவமாக அமிலத்தில் போட்டு வைத்தாராம்!

அநேக ஆண்டுகள் வரைப் பைத்தியத்தைக் காணவே இல்லையாம்! அதன் மூளை மட்டும் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் பத்திரமாக இருந்ததாம்!

ஆண்டுகள் பல கழிந்தன! ஒரு நாள் ஒரு மந்திரி அவர்கள் பைத்தியக்கார விடுதியைப் பார்வையிட வந்தாராம்! பிரமாதமான ஆடம்பரத்துடன் மந்திரியை வரவேற்று, நாற்காலியில் உட்கார வைத்து 'விட்டு, டாக்டர் மந்திரியை "அபார மூளையுடையவரென்றும், சிறந்த அறிவாளி என்றும், அவருக்கு இணையான அறிஞர் இந்த உலகிலும் விண்ணுலகிலும் கிடைப்பது அரிதிலும் அரிது!" என்றும் பாராட்டினாராம்!

உடனே மந்திரி அவர்கள் திடீரென எழுந்திருந்து, "டாக்டர்!...டாக்டர்!.....இப்பொழுதுதான் நினைவுக்குவருகிறது! ...என்னுடைய மூளை தங்களிடம் பத்திரமாக இருக்கிதல்லவா?..." என்று கேட்டாராம்!...

"என்ன...? என்ன?......தங்களுடைய மூளை என்னிடத்திலே இருக்கிறதா?..." என்று வியப்போடு வினவினாராம் டாக்டர்!

"ஆமாம் டாக்டர்! தாங்கள் ஆபரேஷன் செய்து கொண்டிருக்கும் பொழுது எழுந்து வெளியிலே ஓடிவந்தேன்! அப்பொழுது தேர்தல் பிரச்சாரக் கூட்டம் "ஜே! ஜே!" போட்டுக் கொண்டு தெருவிலே போய்க் கொண்டிருந்தது!.........நான் எவ்வளவோ மறுத்தும் அவர்கள் எனக்கு காங்கிரஸ் டிக்கெட் ஒன்றைக் கொடுத்து நிற்க வைத்து, என்னை ஜெயிக்க வைத்து விட்டார்கள்! எம். எல். ஏ. ஆனவுடன் மந்திரி பதவியும் தானே நாடி ஓடிவந்து விட்டது!"...என்று கூறி எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினாராம், நம் இனத்தைச் சார்ந்த அந்த மந்திரி!

"அப்படியானால் சற்று ஆபரேஷன் அறைக்குள் வாருங்கள்! தங்கள் மூளையைத் திருப்பி தங்கள் தலையிலே வைத்துவிடுகிறேன்!" என்று டாக்டர் பணிவுடன் விண்ணப்பித்துக் கொண்டதற்கு, "சேச்சே!...அது என்ன அறிவிலித்தனம்! மூளையைத் திருப்பி வைத்துவிட்டால், என் மந்திரி பதவி—எம். எல். ஏ. பட்டம் — மக்களிடையே எனக்கிருக்கும் மதிப்பு—எல்லாம் போய்விடுமே! என் மூளை உங்களிடமே இருக்கட்டும்!...வெளி உலகிற்குப் போகும் வாய்ப்பு ஏற்பட்டால் வந்து வாங்கிக் கொள்

[தொடர்ச்சி பக்கம்—10]

திராவிட நாட்டுக்கு இந்தி அந்நிய மொழியே!

இந்தியாவின் முக்கிய மொழிகள் இந்துஸ்தானி (இந்தியும் உருதுவும்) வங்காளி, குஜராத்தி, மராட்டி, தமிழ், தெலுங்கு மலையாளம், கன்னடம், அஸ்ஸாமி, ஒரியா, சிந்தி, புஷ்டு, பஞ்சாபி என்பன. இந்த மொழிகளில் வட, மத்திய, மேற்கு இந்தியாவில் வழங்கும் இந்திய - ஆரிய மொழிகள் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புள்ளவை.

ஆனால், தெற்கே திராவிட நாட்டுக்கு மட்டும் இந்துஸ்தானி அந்நிய மொழி என்றே சொல்லலாம். ஆனால் அங்குள்ளவர்களும் அதைக் கற்றுக் கொள்ள முயன்று வருகிறார்.

—ஜவஹர்லால் நேரு.

(சுய சரிதை)

வெள்ளி 4-4-58 சென்னை

அண்ணாமலை நிகழ்ச்சிகள்!

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அண்மையில் நடைபெற்ற குழப்பமும்; அதில் போலீசார் நடந்து கொண்ட விதமும்; அதைத் தொடர்ந்து பல்கலைக் கழக நிர்வாகம் எடுத்திருக்கும் முடிவும் நாட்டிலுள்ள நல்லோர் அனைவரது கண்களையும் கலங்க வைப்பதாய் அமைந்திருக்கிறது.

பெண்கள் விடுதியில் நடைபெற்ற விழாவிலிருந்து இரவு நேரங் கழித்துத் திரும்பிய மாணவர்களிடம் அவர்களை அவமானப்படுத்தும் வகையில் வாயில் காப்பவர் நடந்து கொண்டதாகவும்; அதனால் உள்ளே செல்ல முடியாத மாணவர்கள் துணை வேந்தர் இல்லத்துக்குச் சென்றதாகவும் கூறப்படுகிறது. அந்த நேரம் நிதியமைச்சர் கனம் சுப்பிரமணியனாரும் அங்குதான் இருந்திருக்கிறார்.

துணைவேந்தர் மாணவர் பிரதிநிதிகளை மறுநாள் காலையில் தன்னிடம் அனுப்பி வைக்குமாறு சொல்லியிருக்கிறார்.

ஆனால் சட்ட மன்றத்தில் தி. மு. க. உறுப்பினர்கள் கொண்டு வந்த அவசரப் பிரேரணையின்போது பேசிய கனம் அமைச்சரோ மறுநாள் மாணவர் பிரதிநிதிகள் யாரும் துணை வேந்தரைச் சந்திக்க வில்லை— என்று கூறுகிறார்.

அதன் பிறகுதான் குழப்பங்கள் துவங்கி யிருக்கின்றன.

இந்தக் குழப்பங்களுக் கெல்லாம் வெளியார் தூண்டுதல்தான் காரணம் என்று யாரும் கூற முடியாது.

ஏனெனில், மாணவர் சமுதாயத்தில் எந்தக் காரணத்தாலோ குழப்பங்கள் நடப்பது இதுதான் முதல் தடவையல்ல.

பத்திரிகைகளில் அண்ணாமலைப் பல்கலைக் கழகக் குழப்பங்கள் பற்றிய செய்திகள் வந்து கொண்டிருக்கும் அதே நேரம் இன்னொரு செய்தியும் வந்திருக்கிறது.

மார்ச் **31**—ம் தேதியன்று, கல்கத்தாவிலே சரித்திரத் தேர்வு நடந்து கொண்டிருந்தபோது வினாத் தாள் கடுமையாக இருப்பதாகக் கூறி மாணவர்கள் வெளியேறி இருக்கின்றனர். வெளியேறியவர்கள் பின்னால் தேர்வுக் கூடத்தின் கண்ணாடி ஜன்னல்களை உடைத்து; வெளியில் வர மறுத்த மாணவர்களையும் தாக்கி; கலவரம் நடத்தியதாக ஏடுகள் அறிவித்திருக்கின்றன.

அமெரிக்காவிலும் இதுபோலவே—ஆனால் இன்னும் மோசமான நிகழ்ச்சிகள் பல நடைபெற்றிருக்கின்றன. காட்டுமிராண்டித்தனமாய் அமெரிக்க மாணவர்கள் மாணவிகளைக் கற்பழித்த சம்பவங்களும் அங்கே பன்முறை நிகழாமலில்லை.

—ஆனால் இந்தச் சூழ்நிலையில் பார்க்கும்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடந்த இந்த சம்பவங்களுக்குப் பொறுப்பாளிகள் 'மேலே இருப்பவர்களாகத்தான்' முடிவு கட்ட வேண்டியதாயிருக்கிறது.

கல்லூரி மாணவர்கள் என்கிறபோது அவர்கள் சமுதாயத்தில் வாலிப முடுக்கைக் குறிப்பவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

வாலிபத்தின் சாபக் கேடே அவசரமும், அதிகமான ஆர்வமும்—என்பதை வாலிபர்களாக இருப்பவர்களும், வாலிபராக இருந்தவர்களும் மறுக்க முடியாது.

நிலைமை இப்படியிருக்க—மாணவர் பிரதிநிதிகள் துணை வேந்தரைச் சந்திக்க வராதபோது அங்கிருந்த நிதியமைச்சர் என்ன செய்திருக்கிறார்?

மாணவ சமுதாயத்திடம் இயற்கையாக அமைந்துள்ள பலவீனத்தை உணர்ந்து; மாணவர் பிரதிநிதிகளைக் கூட்டி வரச் சொல்லி; ஒருமுறை காந்தியடிகளை நினைத்துக் கொண்டு; இரு தரப்பாரிடையேயும் சமரசம் செய்து வைத்தாரா?

இல்லை!

போதுத் தொண்டின்மீது பக்தியுள்ள உண்மையான காந்தி சீடராயிருந்தால் அவர் அப்படித்தான் செய்திருக்க வேண்டும்.

என்ன இருந்தாலும் அவர் அமைச்சரல்லவா? அதிகாரத்தை இப்போது உபயோகப்படுத்தாவிட்டால் வேறு எப்போதுதான் உபயோகப்படுத்துவது?

எனவேதான் பல்கலைக் கழக நிர்வாகத்தில் சிறிதும் சம்பந்தப்படாத கலெக்டரிடம், மாணவர்களைச் சந்தித்துக் காரணங்களை விசாரிக்கும்படிக் கூறியிருக்கிறார்.

அமைச்சரின் கூற்றுப்படி மாணவர்கள் கலெக்டரிடம் நடந்த சம்பவங்களுக்கான காரணங்களைக் கூற மறுத்துவிட்டார்களாம்! ஒரு வேளை கலெக்டருக்கும் பல்கலைக் கழகத்திற்கும் என்ன தொடர்பு என்று மாணவர்கள் நினைத்திருக்கக்கூடும்!

அதன் பிறகு அமைச்சர் என்ன செய்திருக்கிறார்?

பம்பாயிலே மராட்டிய மாநிலக் கிளர்ச்சி உச்ச நிலையில் இருந்தபோது காங்கிரஸ் பொதுக் கூட்டத்தில் மாபெரும் கலவரம் நடந்ததல்லவா? அப்போது மொரார்ஜி தேசாய் மறுமுறை தான் பேசுகிற கூட்டத்தில் அமைதி ஏற்படுகிறவரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்து ஒரு 'நாடக'மும் நடத்தினாரல்லவா?

அதை நினைத்துக்கொண்டு தேசாயாக மாறி; நமது நிதியமைச்சர் சுப்பிரமணியனாரும் செயலாற்றி யிருக்கிறார்.

"தவறை மாணவர்கள் உணரவில்லை என்ற காரணத்தால் நான் அன்று மாலை நடைபெற விருந்த தேநீர் விருந்தில் கலந்துகொள்ள முடியாது என்று திட்டவட்டமாகக் கூறினேன்!"

— இப்படி அமைந்திருக்கிறது, சுப்பிரமணியனாரது பேச்சு!

இதற்குப் பிறகுதான் நிலைமை அங்கே மோசமடைந்திருக்கிறது.

அன்று பொதுக் கூட்டத்தில் பேசிவிட்டுத் திரும்பிய அமைச்சரைச் சந்தித்துப் பேசுவதற்காகக் காத்திருந்த மாணவர்களோடும் அமைச்சர் பேச முயன்றதாகத் தெரியவில்லை!

அதன் பிறகு மாணவர்கள் கலைந்துபோகவில்லையாம்!

மேலும் நடந்த விஷயத்தை அமைச்சரே இப்படிக் கூறுகிறார்:

"தடியடிப் பிரயோகம் செய்யவேண்டாம் என்று போலீசாரைக் கேட்டுக்கொண்டேன். தடியடிபோல் பாவனை செய்யப்பட்டது."

தடியடிபோல் 'பாவனை' செய்யப்பட்டதாம்! ஆனால் அந்தப் பாவனைக்குப் பலியாகிக் காயம்பட்டவர்கள் எத்தனை பேர் தெரியுமா?

ஐவர்!

வெறும், 'பாவனைத் தடியடிப் பிரயோகத்திற்கே' ஐவர் காயம் பட்டு மருத்துவ மனைக்குச் செல்ல நேர்ந்ததென்றால்; உண்மையான தடியடிப் பிரயோகத்திற்கு எத்தனை பேர் சாகவேண்டியிருக்கும்?

அமைச்சரது பேச்சு இதுபோன்ற நியாயமான ஐயப்பாடுகளையெல்லாம் எழுப்புவதை நம்மால் சுட்டிக் காட்டாமலிருக்க முடியவில்லை!

ஆக; ஸ்தலத்தில் இருந்தும் பிரச்னையைத் தீர்த்து வைத்து; போலீசாரின் தலையீட்டைத் தடுத்து நிறுத்தாத கடுமையான குற்றச்சாட்டிற்கு அமைச்சர் ஆளாகியிருக்கிறார்!

பல்கலைக் கழக நிர்வாகிகள் நிலையும் அப்படித்தான் இருக்கிறது!

ஏதோ சில காரணங்களினால் அமைதியின்மை ஏற்பட்டிருக்கிறது. பிறகு போலீசார் பல திசைகளிலிருந்தும் வந்து குவிந்திருக்கின்றனர். நிலைமை மீண்டும் கட்டுக்கடங்கி யிருக்கிறது.

ஆனால், பல்கலைக் கழக நிர்வாகிகளோ ஏதோ கட்டுப்படுத்த முடியாத பிரெஞ்சுப் புரட்சியே நடைபெற்றுக் கொண்டிருப்பதாகக் கற்பனை செய்துகொண்டு பல்கலைக் கழகத்தையும்; உணவு விடுதியையும் காலவரையறையின்றி மூடியிருக்கிறார்கள்!

பெரும்பாலும் வெளியூர் மாணவர்கள் தங்கிப் படித்துவரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் நிர்வாகிகளின் இந்த முடிவு எவ்வளவு தொல்லைகளைக் கொடுக்கும் என்பதை நாம் விவரிக்கத் தேவையில்லை.

இந்த இரக்கமற்ற நடவடிக்கையை மொத்தமாக மாணவர்களை மட்டுமின்றி; அவர்களது பெற்றோர்களுக்கும் தண்டனை வழங்கும் கொடுமையான செய்கை என்றுதான் நாம் கருதவேண்டியிருக்கிறது.

விரைவிலே பல்கலைக் கழகத்தைத் திறந்து, இனிமேலாவது இதுபோன்ற விரும்பத் தகாத நிகழ்ச்சிகள் நேராத வண்ணம் துணை வேந்தரும்; நிர்வாகிகளும் வரு முன் காக்கும் விவேகிகளாகத் திகழ்வார்கள் என்றே நாம் எதிர்பார்க்கிறோம்; நாடும் எதிர்பார்க்கிறது!

ஃ

சாலையிலே தைக்கின்ற முற்கள்-நம் பாதையிலே குறுக்கிடும் எதிர்ப்புகள்!

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

வைத்திருக்கிறார்கள். அதைப் போலவேதான் ஒவ்வொரு மாவட்டங்களிலும்! எங்காவது தீ பிடித்துக்கொண்டால் அந்தப் படை அவசர அமைப்பின் பேரில் செல்லும்! அதுபோல் இங்கேயும் ஏக பாரதத்தில்—நாங்கள் துண்டாட விரும்புகின்ற வரையில்—ஒரு கவர்னரை வைத்துக்கொண்டால் போதாதா? வேண்டுமென்றால் இன்னொரு கவர்னரை வைத்துக் கொள்ளலாம் அவசர உதவிக்கு! அவர்கள் டெல்லியில் இருக்கட்டும். இப்படி ஏதாவது ஓர் இடத்தில் ஆபத்து ஏற்பட்டால், அங்கு அந்த கவர்னரை அனுப்பட்டுமே! அதை விட்டுவிட்டு பதின்மூன்று மாகாணங்களிலும் கவர்னர்களை வைத்துக் கொண்டு—பதின்மூன்று ஒன்பது லட்சம் ரூபாய்களை ஏன் செலவு செய்ய வேண்டும்?

இப்படியெல்லாம் கேட்கின்ற நம்மைப் பார்த்துத்தான் "இவர்கள் சட்ட மன்றத்தில் வந்து என்ன சாதித்துவிட்டார்கள்?" என்று கேட்கிறார்கள்! நாங்கள் என்ன சாதிக்கவில்லை? எந்த புள்ளி விவரங்களைப் பற்றிப் பேசவில்லை?

ஹரிஜனங்களின் முன்னேற்றத்தைபற்றி ஆசைத்தம்பி பேசவில்லையா? பெரம்பூர் தொகுதியிலே பாழான பகுதிகளைப் பற்றி சத்திய வாணிமுத்து எடுத்துக் காட்டவில்லையா? வட ஆற்காடு மாவட்டத்திலே இருக்கிற காங்கிரஸ்காரர்களின் ஊழல்களைப் பற்றியும், அங்கு இருக்கும் மக்களின் நிலையைப்பற்றியும் நமதருமை நண்பர் சண்முகம் அவர்கள் வாதாடியது கிடையாதா? களம்பூர் அண்ணாமலை சொன்னது கிடையாதா? குளித்தலைத் தொகுதியில் விவசாயிகளின் நிலைமையை நான் விளக்கியது கிடையாதா? இவர்களின் சட்டம் ஓட்டையானது; உடைசலானது; ஆகவே சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று சட்ட மன்றத்திலே முதன் முதலாக எடுத்துச் சொன்னது திராவிட முன்னேற்றக் கழகம்தானே!

"ஹரிஜனங்களுக்காக நாங்கள் எவ்வளவோ சாதித்துவிட்டோம்; ஹரிஜனங்களின் வீடுகளில் இன்றைய தினம் வெள்ளிப் பாத்திரங்கள் இருக்கிறது என்றால் அதற்கு காங்கிரஸ்தான் காரணம்!" என்று கக்கன் சொல்லுகிறார். ஹரிஜனங்கள் வீடுகளில் வெள்ளிப் பாத்திரம் இருக்கிறதாம்; அதை ஒப்புக்கொள்ள வேண்டுமாம்! வெள்ளிப் பாத்திரங்களா அங்கு இருக்கின்றன; தோழர்களே! அவர்கள் வாங்கிய தகரக் குவளைகள் வேண்டுமானால் இரண்டு நாட்களுக்கு அப்படி மின்னலாம்! அவர்கள் வாங்கிய புதிய மண் பாத்திரங்கள் காவி பூசி இருப்பதால், கக்கனுடைய வாசகப்படி அவை இரண்டு நாட்களுக்குத் தங்கமாகக் காட்சி அளிக்கலாம்!

அப்படி கக்கன் சொல்லிய சமயத்தில், தோழர் ஆசைத்தம்பி அவர்கள், "கக்கன் அவர்களே! நீங்கள் ஹரிஜன வகுப்பிலே பிறந்ததால் காங்கிரஸிலே மந்திரியாக வர முடிந்தது. அப்படி நீங்கள் கருதுகிறபடி மந்திரியாக வரமுடியுமே தவிர, சிதம்பரத்திலே கோவிலில் மணி ஆட்டுகிற பூசாரியாக வர முடியாது! அதை நினைவில் வையுங்கள்! ஆகவே அதற்குத் தேவையான சமுதாய சீர்திருத்தத்தைச் செய்யக்கூடிய கட்சி திராவிடர் இயக்கம் ஒன்றுதான்!" என்று குறிப்பிட்டார்.

சட்ட மன்றத்தில் வாய் கிழியப் பேசுகிறார்களே. இன்று இந்த 'வந்தேமாதிர வீரர்கள்'-அவர்கள்தான் என்ன செய்துவிட்டார்கள்? அண்ணா அவர்கள் அழகாக குறிப்பிட்டார்கள். "இவர்கள் கையில் கஜானா இருக்கிறது; இரும்புப் பெட்டிக்கு அருகில் அமர்ந்திருக்கிறார்கள்; ஆகையால் ஹரிஜனங்களுக்குக் கொஞ்சம் பணம் தர முடிகிறது! அந்த இடத்தில் யார் இருந்தாலும் அதைச் செய்ய முடியாதா?" என்று!

இன்றைய தினம், "நாங்களும் மனிதர்கள்தான்" என்ற சுதந்திர உணர்ச்சியோடு அந்தத் தாழ்த்தப்பட்டிருந்த இனத்தவர் தலை நிமிர்ந்து நடக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் சுயமரியாதை இயக்கமே தவிர, இந்த காங்கிரஸ்காரர்களா? கக்கனா? பண்டிதரா?

எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இந்த காங்கிரஸ்காரர்கள் ஹரிஜனங்களை எப்படி நடத்தினார்கள் என்பது! என்னுடைய தஞ்சை மாவட்டத்தில், நீடாமங்கலத்தில், காங்கிரஸ் மகாநாடு நடைபெற்றது. அதிலே 'சமபந்தி போஜனம்' என்ற ஏற்பாடு ஒன்று செய்யப்பட்டது. அதாவது செட்டியார், பிள்ளை, முதலியார், வன்னியர், கவுண்டர் என்ற வேறுபாடின்றி அந்த சமபந்தி போஜனத்தில் சாப்பிடலாம்! சமதர்மம் தழைக்க வாரீர்! வாரீர்—என்று அழைத்தார்கள். அதிலே ஐந்து ஹரிஜனத் தோழர்கள்—ஆதித் திராவிட மக்கள் கலந்து கொண்டார்கள்.

விருந்து நடைபெறுகின்ற நேரத்தில், அதைச் சில காங்கிரஸ்காரர்கள் பார்த்து விட்டார்கள். உடனே "அடே பறையா! பள்ளா! நீ வந்து இங்கே ஏனடா உட்கார்ந்தாய்?" என்று கேட்க—"நீங்கள் தானே சாமி சமபந்தி போஜனம் என்றீர்கள்! அதனால்தான் வந்துவிட்டோம்" என்று அவர்கள் சொல்ல—உடனே அந்த ஆதித்திராவிடத் தோழர்களைப் பிடித்து மரத்தில் கட்டி—அவர்கள் தலையை மொட்டை அடித்து—நையப் புடைத்துவிட்டார்கள்! அந்த அவலக் காட்சி—மொட்டையடிக்கப்பட்ட தோழர்களின் படங்கள் அப்பொழுது 'குடி அரசு' பத்திரிகையில்கூட வெளியிடப்பட்டிருக்கிறது!

இந்நாட்டில் ஆதித்திராவிடத் தோழர்களை ஆலயத்திற்குள் அழைத்துச் சென்ற பெருமையும்—அவர்களை அக்கிரகாரத்தில் நடமாடச் செய்த உரிமையும் திராவிடர் இயக்கம் தவிர வேறு எதற்கும் இல்லை என்பதை பெருமையோடு—சற்று ஆணவத்தோடும் சொல்ல விரும்புகிறோம்.

அந்தப் பெருமைக்குரிய நம்மைத்தான் பலப்பல வழிகளிலே இன்று எதிர்க்கின்றார்கள், ஆளவந்தவர்கள். இந்த எதிர்ப்பெல்லாம் சாலையிலே—பசும்புல் தரையிலே காணப்படுகின்ற நெறிஞ்சி முள் போன்றது! நடந்து போகின்ற நேரத்திலே காலிலே முள் குத்துகிறது; அதுவும் சாதாரண நெறிஞ்சி முள்; முள்ளை எடுக்கிறோம்; பார்க்கிறோம்; முள்ளை மட்டும் கிள்ளி வீசி எறிந்து விட்டுச் செல்லுகிறோம், அது பின்னால் வருகிற மற்றவர்களின் காலிலே குத்தக்கூடாதே என்பதற்காக! அதை விட்டு முள்ளை எடுத்து ஒரு கல்லிலே வைத்து, சுத்தியல் கொண்டு உடைத்து, நையப் புடைத்து, நசுக்கி, நீரிலே மிதக்க விட்டா போகிறோம்? கிடையாது!

இந்த மண்ணிலே பிறந்தவர்கள் நாம்; இந்த மண் நமக்குச் சொந்தம்; நம்முடைய வீரம் வட நாட்டிலே ஒலித்தது உண்டு; நம்முடைய நாட்டு முத்துக்களை எகிப்து நாட்டு கிளியோபாட்ரா புகழ்ந்தது உண்டு; நம்முடைய நாட்டு யானைத் தந்தங்கள் கிரேக்கப் புலவர்களால் பாடப்பட்டதுண்டு; நம்முடைய நாட்டு அகில், மிளகு போன்ற பெரிய பெரிய வியாபாரப் பொருட்கள் ரோமாபுரி கடற்கரையிலே சிதறிக் கிடந்ததுண்டு; ரோமானிய நாணயங்கள் தமிழ் நாட்டுத் தெருக்களிலே சிதறிக் கிடக்க—அவைகளை 'ஓட்டாஞ்சல்லி'கள் போல் எடுத்து நம்முடைய சிறார்கள் விளையாடியதுண்டு!

அத்தகைய வரலாற்றுக்குரியவன் தமிழன்! அவனுடைய புகழை உலகம் பரணி பாடிக் கொண்டிருந்தது! பாண்டிய மண்டலத்துத் தூதுவர்கள் ரோமானிய கொலு மண்டபத்திலே வீற்றிருந்தார்கள்; ரோமானியத் தூதுவர்கள் பாண்டியன் அவையிலே இருந்தார்கள். அத்தகைய பெருமைக்குரிய சரித்திரம் நம்முடையது!

அந்தப் பெருமைக்குரிய நாம் இன்றைய தினம் வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் காலடியில் நசுக்குண்டு கிடக்கிறோம்! அதிலிருந்து விடுதலை பெற்றிட நாம் தொடுத்திருக்கின்ற அறப்போர் வெற்றி பெற உங்கள் அனைவரையும் அழைக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம்! ஃ

வென்றவன் வீழ்ந்தான்; வீழ்ந்தபின் விழித்தான்!

"தமிழன் வரலாறு வேறு—வட நாட்டான் வரலாறு வேறு! 'தமிழன் சென்றான்—வென்றான்' என்றுதானிருக்குமே தவிர, 'தமிழ் நாட்டிற்கு அந்நிய நாட்டான் வந்தான்—தமிழன் தோற்றான்' என்று வரலாறு கிடையாது. ஆனால், வட நாடு அப்படியல்ல; வட நாட்டில் அலெக்சாண்டர் முதல் ஆங்கிலேயன்வரை அத்தனை பேரும் வந்தான்—வென்றான்' என்றுதானிருக்குமே தவிர, 'வந்தவனை வட நாட்டார் தோற்கடித்தனர்' என்று இருக்காது!

"வட நாட்டவர், எவரையும் தோற்கடித்ததில்லை; தமிழன், யாரிடமாவது தோற்றான் என்றும் காட்ட முடியாது.

"தமிழன் சென்றான், வென்றான்—இதுதான் வரலாறு தரும் செய்தி! சேரன் செங்குட்டுவன், பாண்டியன் நெடுஞ்செழியன், கரிகாற் பெருவளத்தான், குலோத்துங்கன், இராசராசன், இராசேந்திரன்—இவர்களெல்லாம் வெளி நாடு சென்றார்கள்—வென்றார்கள்!

"ஆனால் இன்று தோற்றவர்களிடத்திலே வென்றவர்கள் ஏன் அடிமைப்பட்டிருக்க வேண்டும்?

"இந்தக் கேள்விக்கு விடை கண்டு, விடுதலையும் காணத்தான் இன்று எந்த நேரத்திலும் இலட்சியத்திற்காகச் சாக இலட்சக் கணக்கான பேர் தயாராக இருக்கின்றனர்! ஆட்சியாளரின் அடக்குமுறைக்குப் பலியாகும், தியாக புருடர்கள் பட்டியல் வளர்ந்துவருகிறது!

"ஆளுவோரிடத்திலே தடியும், துப்பாக்கியும், பட்டாளமும் இருக்கின்றன. எங்களிடத்திலே இலட்சிய வீரர்கள் இருக்கிறார்கள்!

"அந்த இலட்சியவெறிக்கும் ஆதிக்க வெறிக்குமிடையே போராட்டம் நடைபெறலால்... ஆதிக்கப் பித்து வெற்றி பெற்றது என்பதற்கு உலக சரித்திரத்திலே ஆதாரமே கிடையாது! இலட்சியம் வாகை சூடிற்று என்ற உண்மை ஏராளமாகக் காணக் கிடக்கின்றது!"

—அறிஞர் அண்ணா

வெள்ளையன் பெற்ற பிள்ளை யார்? வரலாறு சொல்லும் உண்மை பாரீர்!

★ மு. கருணாநிதி ★

[31—3—58 அன்று, சென்னை, கோடம்பாக்கம் (35-வது வட்டம்) தி. மு. கழக ஆருவது ஆண்டு விழாவில், தோழர் மு. க. ஆற்றிய உரையின் சுருக்கம் இங்கே தரப்படுகிறது.]

எனக்கு முன்னால் பேசிய நண்பர் சண்முகம் அவர்களும், மற்றவர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சீரிய நற்தொண்டுகளைப் பற்றியும், திராவிட நாடு ஏன் வேண்டுமென்பதற்கான ஆதாரங்களையும் எடுத்து விளக்கினார்கள். அதோடு இன்றைய தினம் நமக்கு இருக்கின்ற எதிர்ப்பையும் உங்களிடையே சொன்னார்கள்.

ஆனால் நாமோ, தாக்குபவர் தாக்கட்டும் என்ற அளவில், அவர்கள் எத்தகைய ஏசல் மொழிகளை நம்மீது தொடுத்தாலும், அவை எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற தரு தழைப்பதற்கான எருவாகத்தான் பயன்படுமே தவிர, வெட்டித் தள்ளுகின்ற கோடாரிகளாக மாறிவிடாது என்பதை உறுதியாக நம்ப வேண்டும்.

ஆளவந்தவர்கள், அடிக்கடி சட்ட மன்றத்திலே கூறுகிறார்கள், 'நாங்கள் ஆளும் கட்சியில் இருக்கின்றோம்' என்ற அகம்பாவத்தோடு! அவர்களது பேச்சில் பொதிந்துள்ள உண்மையை நாம் மறந்து விடக்கூடாது. அவர்கள் ஆளும் கட்சி என்றால் நாமெல்லாம் யார்? ஆளப்படுகின்றவர்களின் கட்சி! ஆளப்படுகின்றவர்களுடைய கட்சிக்கு இருக்கின்ற மதிப்பையும், ஆளும் கட்சிக்கு இருக்க வேண்டிய ஜாக்கிரதைத் தன்மையையும் அவர்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆளும் கட்சியினர்தான் அவர்கள்—ஒப்புக் கொள்ளுகிறோம்—ஆனால் ஆணவம் இருக்கலாமா—என்றும் கேட்கிறோம்.

அமைச்சர் சுப்ரமணியம் இதே ஊரில், இதே பகுதியில் பேசினாராம். "15 பேர்கள் தானே இப்போது வந்திருக்கிறார்கள்? அடுத்த தடவை அதில் உள்ள '1' அழிந்துவிடும்; 5 பேர்தான் வருவார்கள்" என்று. அந்த '1' அழிகிறதா; அல்லது அவர்களுடைய 150-க்குப் பக்கத்திலிருக்கின்ற '0' உருண்டு வந்து இந்த 15-துடன் சேர்ந்து கொள்ளுகிறதா என்பது 5 வருடங்களுக்குப் பிறகு மக்கள் அளிக்க வேண்டிய தீர்ப்பைப் பொருத்தது. சுப்ரமணியம் சட்ட மன்றத்தில் தனக்குக் கடைசியாக பேச இருக்கிற வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தாருக்கு பதில் சொல்லிவிட்டோம் என்று கற்பனை செய்துகொள்கிறார். 'அண்ணாத்துரையின் வாலை அறுத்துவிட்டோம்—ஆசைத்தம்பி இனிமேல் தலை தூக்க முடியாது—சண்முகமா; நடக்காது—கருணாநிதியா; அன்பழகனா; அவர்களெல்லாம் இனிமேல் எத்தகைய கர்ஜனைகளையும் இங்கே புரிய முடியாது—என்று சுப்பிரமணியம் பேசுகிறார். அப்படி அவர் என்னதான் பேசுகிறார்?

பட்ஜெட் விவாத பதிலுரையில் அவர் பேசுவதற்கு எடுத்துக்கொண்ட நேரம் ஏறத்தாழ 120 நிமிடங்கள்! அந்த 120 நிமிடங்களில் நம்மைப் பற்றி பேச எடுத்துக் கொண்ட நேரம் 100 நிமிடங்கள்! "இந்த திராவிட முன்னேற்றக் கழகம் என்ற கட்சி இருக்கிறதே—அவர்களுடைய மூலக் கொள்கையான திராவிட நாடு இருக்கிறதே—அதற்கு 'விதை' எது தெரியுமா? அந்த விதையை நான் இப்போது ஆராய்ச்சி செய்யப் போகிறேன். அது முளைக்காத விதை—அழுகிப்போன விதை! 1924-ம் ஆண்டு செங்கற்பட்டிலே நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில்—பெரியாரோடு சேர்ந்திருந்தபோது ஒரு தீர்மானம்போட்டார்கள். அது 'சைமன் கமிஷனை' ஆதரிக்கும் தீர்மானம்! ஆங்கிலேயர்களுக்குக் குலாம்களாக இருக்கின்ற தீர்மானம்! பிரிட்டிஷ்காரர்களின் காலைக் கழுவுகின்ற தீர்மானம்! அப்படிப்பட்ட தீர்மானத்தைப் போட்டவர்கள் இவர்கள்! பரிதாபம், பரிதாபம்" என்றார். அதோடு விடவில்லை. பிறகு "சேலத்திலே நடைபெற்ற தென்னிந்திய நல உரிமைச் சங்க மாநாட்டில் ஜஸ்டிஸ் கட்சியை—நீதிக் கட்சியை திராவிடர் கழகமாக மாற்றுகின்ற தீர்மானம் வந்தது. அந்தத் தீர்மானத்திற்குப் பெயர் 'அண்ணாதுரை தீர்மானம்' இந்த அண்ணாத்துரை தீர்மானத்தைப் படிக்கிறேன்; கேளுங்கள். 'நாம் வெள்ளைக்காரனுக்கு இதுவரையில் விசுவாசமாக நடந்துகொண்டும் கூட அவன் நம்மை மதிக்காத காரணத்தால்'...பார்த்தீர்களா? விசுவாசமாக நடந்துகொண்டார்களாம் இவர்கள்! அய்யோ, பரிதாபம்! "என்று சுப்பிரமணியம் சொல்ல, உடனே காங்கிரஸ்காரர்களெல்லாம், "சபாஷ், சபாஷ்! வெட்கம், வெட்கம்!" என்று கத்தினார்கள்!

1924—ல் சுயமரியாதை கட்சி மாநாட்டைப்பற்றி குறிப்பிட்ட சுப்பிரமணியம், அந்த சுயமரியாதைக் கட்சியை ஆரம்பித்தவர் யார் என்பதை குறப்பிடவில்லை. ஆரம்பித்த பெரியார் ராமசாமி முன்பு எங்கே இருந்தவர்? அவர் காந்தியாரால் 'வைக்கம் வீரர்' என்ற பட்டம் பெற்று காங்கிரசிலே இருந்தவர்! சுப்பிரமணியமே யோசியுங்கள்; எங்களுடைய பூர்வோத்திரம்—சரித்திரம் உம்முடைய காங்கிரசிலேயிருந்து ஆரம்பமானதுதான்! முளைக்காத விதை — அழுகிப் போன விதை—பழுதான விதை—பயன்படாத விதை—என்றெல்லாம் பரிகாசக் குரல் எழுப்பி விட்டால் போதாது! எங்களுடைய பாரம்பரியம் காங்கிரசிலேயிருந்துதான் தோன்றுகிறது என்பதை மறந்துவிடக் கூடாது.

அதே நேரத்தில், உங்களுடைய சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தீரா?

இன்னும் சொல்லப் போனால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு விதை ஊன்றியவர்கள்—திராவிட இயக்கத்தினுடைய செடியை உற்பத்தி செய்வதற்குக் காரணமாக இருந்தவர்கள் யாரும் வெள்ளைக்காரர்கள் அல்ல. திராவிட நாட்டிலே பிறந்த பனகல் அரசர், தியாகராய செட்டியார், டாக்டர் நாயர், பெரியார் ராமசாமி திராவிட நாட்டிற்குரிய அறிஞர் அண்ணா — ஆகியவர்கள்! —ஆனால் காங்கிரஸ் விடுதலை இயக்கத்துக்குக் காரணகர்த்தா யார்?

நீர் பெருமையடித்துக் கொள்ளுகிற அளவிற்கு ஓர் இந்தியனா? இந்திய துணைக் கண்டத்தைச் சேர்ந்தவனா? நாங்களல்ல சுப்பிரமணியமே, ஆங்கிலேயர்களுக்குப் பிறந்தவர்கள்! 1885—ம் ஆண்டு அந்த காங்கிரஸ் மகாசபையை உற்பத்தி செய்தவன் ஒரு ஆங்கிலேயன்—'ஹ்யூம்' என்பவன்! சமுதாய நலன்களுக்காகத் தோற்றுவித்த அந்தக் கட்சியை சிலநாள் கழித்து டப்ரின் பிரபு என்பவன் அரசியல் கட்சியாக மாற்றினான். நன்கு உணர்ந்து கொள்வீர்; இப்படி ஆங்கிலேயனுக்குப் பிறந்த குழந்தைதான் நீர் போற்றிப் பாராட்டுகின்ற காங்கிரஸ் மகாசபை!

1924 செங்கல்பட்டு மகாநாட்டைப்பற்றிக் குறிப்பிடுகிறீரே—1914-ல் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டை நீர் மறந்துவிட்டீரா? அந்த மாநாட்டில் பொறி பறக்கும் தீர்மானங்களெல்லாம் நிறைவேற்றப்படுமென்று மகா ஜனங்கள் கூடியிருக்கிறார்கள். மிஸ்டர் பாட்ரோ என்பவர் இந்திய ராணுவத்தைக் காரசாரமாகக் கண்டித்துப் பேசிக் கொண்டிருக்கிறார். அவர் பேசிக் கொண்டிருக்கின்ற நேரத்தில் சென்னை மாகாணத்தின் கவர்னர் வேகமாக உள்ளே வருகிறார்! யார் அந்த கவர்னர்? இங்கே இருந்து போனாரே; பிரகாசாவா? இருந்து இறந்து போனாரே; ஜானா? அல்லது

[தொடர்ச்சி பக்கம்—8]

கர்னாடக

தி. மு. கழக 2-வது மாநாடு

1958 ஏப்ரல் 26, 27-ம் நாட்களில்

பெங்களூர் சிட்டி, சுபாஷ் நகர்,

கோலார் தங்கவயல் சின்னராசன் திடலில்

கலைவாணர் என். எஸ். கே. அரங்கில்

நடைபெறும்.

★

தலைவர்: டாக்டர் சத்தியவாணி முத்து எம். எல். ஏ.

திறப்பாளர்: நடிகமணி டி. வி. நாராயணசாமி

★

அறிஞர் அண்ணா

பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன்

மற்றும் கழக முன்னணி வீரர்கள் கலந்துகொள்வர்.

★

இசைமுரசு நாகூர் அனிபா

குழுவினரின் கலைநிகழ்ச்சி உண்டு.

—வரவேற்புக் குழு

10

சென்ற இதழில்...

கரகமாடி கண்ணனது கட்டுடலிலும், கவரும் வனப்பிலும் தன் மனதைப் பறிகொடுத்திருந்த கற்பூரம், திட்டம் ஒன்று தீட்டுகிறாள்......

பேய் பிடித்துவிட்டதாக கதை கிளப்பப்பட்ட தன் அண்ணன் தீச்சட்டி சிங்காரத்தின் பேயை விரட்ட கண்ணனை அழைக்கலாம் என்ற ஊராரின் யோசனையை கற்பூரம் மகிழ்ச்சியோடு ஏற்கிறாள். கண்ணனது வீடு நோக்கிச் செல்கிறாள்......

பகை மறந்து. தன் வீடு தேடிவந்த கற்பூரத்தின் வாயிலாக, சிங்காரம் பூஞ்சோலையம்மாள் வீட்டில் இருப்பதை அறிந்த கண்ணன் எங்கே பொன்மணியைச் சந்திக்கலாம் என்ற கருத்தில் அவளுடன் புறப்படுகிறான்.

சிங்காரத்தைப் பிடித்திருப்பது பயங்கரமான பேய் என்று சொல்லி, பேய் விரட்டுகிற பாணியில் அவனைப் பிரம்பு கொண்டு தாக்கி தன் ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்கிறான்......

மேலும், வீட்டில் பொன்மணி தன் கண்களிலேயே தென்படாதது கண்டு ஏமாற்றமுற்ற கண்ணன், பூஜை முடிந்ததும், நேராக 'அவுட் போஸ்ட்' போலீஸ் ஸ்டேஷன் சென்று சிங்காரத்தின் மறைவிடத்தைத் தெரிவித்துவிடுகிறான்......

எவ்வளவோ காலமாக ஒருவர் முகத்தில் ஒருவர் விழிப்பது கூட பாவம் என்று கூறி, பகையை வளர்த்து வந்த இரண்டு குடும்பங்களும் இந்தச் சம்பவத்தின் மூலமாகவாவது உறவு கொண்டாடிவிட்டது என்று மகிழ்ச்சி யடைந்தாள் பூஞ்சோலையம்மாள். ஆனால், அவளுக்கு சிங்காரம் படுகின்ற வேதனையைத் தாங்கிக் கொள்ள முடியவிலலை. அவளையறியாமல் கண்கள் கலங்கிவிட்டன. கணவன் பொன்னையா வேறு இதையெல்லாம் விலைக்கு வாங்கப் பட்ட வம்பாகக் கருதி முகத்தை சிடுசிடு என்று வைத்துக் கொண்டிருப்பது அவளுக்குப் பெரிய சங்கடமாகிவிட்டது.

கற்பூரம், கன்னத்தில் கை வைத்தவாறு ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிவிட்டாள். தானே உண்டாக்கிக் கொண்ட சிக்கலான பிரச்னையிலிருந்து தன்னை எப்படி விடுவித்துக் கொள்வது என்பதே அவளது தீராத கவலையாகிவிட்டது.

பொன்னையா, 'லொக், லொக்' என இருமிக்கொண்டே சங்கடத்தையும் மன எரிச்சலையும் எதிரொலிக்கும் பெரு மூச்சுக்களை இடையே விட்டுக்கொண்டிருந்தார்.

சிங்காரமோ, ஆத்திரமும் உடல் வலியும் பொறுக்கமாட்டாமல் உறுமியவாறு படுத்திருந்தான்.

கண்ணனின் பேயோட்டும் பூஜை நடைபெறும் வரையில் அடுக்களைப் பக்கம் ஒளிந்திருந்த பொன்மணி. பிறகு மெதுவாக வெளியே தலை நீட்டினாள். கற்பூரம் அவளையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

பூஞ்சோலை, கற்பூரத்தைப் பார்த்து "ஏண்டியம்மா கவலை புடிச்சிப் போயி உட்கார்ந்திருக்கே! அந்தப் புள்ளையாண்டான் உடம்பெல்லாம் புளியம் பழம் மாதிரி தடிச்சுக் கிடக்கு... கொஞ்சம் உள்ளே போயி மஞ்சப்பத்து அறைச்சுகிட்டு வாயேன். வீக்கத்திலே போடலாம்!" என்று கூறவும் கற்பூரம் எழுந்து எதிரே வந்த பொன்மணியையும் துணைக்கு அழைத்துக் கொண்டு அடுக்களைக்குள் பிரவேசித்தாள்.

பொன்மணியே மஞ்சளைப் பொறுக்கி யெடுத்து அறைக்க ஆரம்பித்தாள். அவளருகே கற்பூரம் உட்கார்ந்து கொண்டு பேச்சுக் கொடுக்க நேரத்தை எதிர்பார்த்திருந்தாள். பொன்மணி, மஞ்சளை அறைத்து முடித்துவிட்டு அதை அம்மியிலிருந்து வழிப்பதற்காகக் குழவிக் கல்லைத் தூக்கும்போது அது அவள் கையிலே விழுந்து சிறு காயத்தை உண்டாக்கி விட்டது. அவசர அவசரமாக அவள் கையைப் பிடித்துவிட்டு தண்ணீர் கொட்டி சிகிச்சை செய்து, "அய்யோ பாவம் — எங்களாலே உனக்கெல்லாம் எவ்வளவு கஷ்டம்!" என்று நொந்து கொண்டாள் கற்பூரம்.

"இதிலென்ன பெரிய கஷ்டம்! ஒருத்தருக்கு ஒருத்தர் உதவி செய்றது உலக சகஜந்தானே!" என்று புன்னகை புரிந்தாள் பொன்மணி.

"அதிருக்கட்டும் — அந்தக் கண்ணன் உள்ளே வந்ததும் நீ எங்கேயோ பதுங்கிக் கிட்டியே; ஏன் பொன்மணி?" என்று ஆவலோடு ஒரு கேள்வியைப் போட்டாள் கற்பூரம். அதற்குப் பொன்மணி பதில் கூறவில்லை.

பதிலை வரவழைப்பதற்குக் கற்பூரமே முயன்றாள். "வெட்கமா?" எனக் கேட்டாள். பதில் இல்லை.

"ஏதாவது கோபமா?" என்று வினவினாள். பதில் இல்லை.

"ஓகோ, ஒரு சமயம் கல்யாணப் பேச்சு கீச்சு அடிபடுகிறதோ?" என்று கேட்டதும், "இந்தா! அதெல்லாம் பேசாதே! வேற ஏதாவது பேசு!" என்று வெடுக்கென்று பதிலுரைத்து, மஞ்சளை அடுப்பில் சூடு காட்டக் கிளம்பினாள் பொன்மணி.

"அடாடாடா! எங்க அண்ணனுக்கு வேலை செய்றதிலே எனக்குக்கூட இவ்வளவு பதட்டமில்லை; உனக்கில்லே ஒரே துடிப்பா இருக்குது!" எனக் கிண்டலாகக் கற்பூரம் கூறி, பொன்மணியின் முகக் குறிப்பை அவசர அவசரமாகக் கவனித்தாள்.

"என்ன இது; இப்படியெல்லாம் பேசுறே—நம்ப விஷயத்துக்கு ஆம்பளைங்க பேரையெல்லாம் இழுக்கிறியே; ஏன்?" என்று கடிந்து கொண்டாள் பொன்மணி.

"நல்லா இருக்கு போ! ஆம்பளையில்லாம பொம்பளை வாழ்ந்துட முடியுமா? ஏதோ நல்லதோ கெட்டதோ; ஆம்பளைக்கு ஒரு பொம்பளை; பொம்பளைக்கு ஒரு ஆம்பளைன்னு அன்னைக்கே ஆண்டவன் தலையிலே எழுதித்தானே அனுப்புறான்!" — இப்படி வேதாந்த விசாரணையில இறங்கினாள் கற்பூரம.

பொன்மணி, அதற்குப் பதில் கூறாமல், மஞ்சள் சூடாகிறதா என்பதை கவனித்துக் கொண்டிருந்தாள்.

"என்ன பொன்மணி; நான் பேசுறது உனக்குப் பிடிக்கலியா? ஒரே யடியா மௌனம் சாதிக்கிறியே! கல்யாண விஷயம், ஒரு பாட்டியும் ஒரு வயசுப் பெண்ணும் பேசும்போதுதான் வயசுப் பெண்ணுக்குப் பிடிக்காதது மாதிரி பேச்சு அமையும். நம்ப ரெண்டு பேருமே வயசுப் பெண்கள்; மனம் விட்டுப் பேசலாமே..." என்றாள் கற்பூரம்.

"மனம் விட்டுப் பேசறது அப்பறம் இருக்கட்டும்; முதலல மஞ்சப்பத்தைத் தயார் பண்ணலாம்!"—பொன்மணி அலட்சியமாக விடையளித்துக் காரியத்தை கவனித்தாள்.

"ம்...புரியுது; புரியுது! புரியுதும்மா புரியுது! கண்ணாலயும் வாயாலயும் பதில் சொல்லமாட்டேன்; காரியத்திலே காட்டுறேன் பார்; என் மனசை! அப்படிங்கிறுப்பல இருக்கு உன் செய்கை!" என்று கூறி கேலியாகச் சிரித்த கற்பூரத்தின் உள்ளத்தை சரிவரப் புரிந்து கொள்ள முடியாமல், "இப்ப என்ன சொல்றே? கொஞ்சம் புரியும்படியா சொல்லு!" என்று முகத்தைக் கோணிக் கொண்டாள் பொன்மணி.

"சொல்லுவானேன்? போகப் போகத் தெரியுது!" என்றாள் கற்பூரம்.

"கிடக்கட்டும்! யார் அவள் தூக்குமாட்டிக் கொண்டவள்? அவள் என்னமோ உங்க அண்ணன் மேல பழியைப் போட்டிருக்காளே; என்ன சமாச்சாரம்? விபரமாச் சொல்லேன்!" என்று பொன்மணி கேட்டதும், கற்பூரம், "உம்...! அப்படிக் கேளு என் ராஜாத்தி; அப்படிக் கேளு! நீ கேட்பாய்ன்னு எனக்கு முன்னமே தெரியும். எப்படிடா கேக்கிறதுன்னு இத்தனை நாழி வெட்கப்பட்டுக்கிட்டு இருந்தே; இப்ப கேட்டுவிட்டே! பரவாயில்லை! அதைப்பத்திக் கவலைப் படாதே! எப்படியோ சனியன் ஒழிஞ்சுது!" என்று சற்று கடுக்கத்தோடு கூறினாள். பொன்மணியிடமிருந்து எதிர்பார்ப்பதற்கு மாறாக ஏதாவது பதில் சூடாக வந்து விடுமோ என்ற அச்சம் வேறு அவளுக்கு.

'சுருளிமலை'யில் வருகின்ற நிகழ்ச்சியொன்றை இவ்விதழ் முகப்பு சித்தரிக்கிறது.

"நான் கேக்கிற கேள்விக்கும் நீ சொல்ற பதிலுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கா?" என்று பொன்மணி எழுந்தாள்.

"இரு, இரு" என அவள் கையைப் பிடித்து உட்கார வைத்து, கற்பூரம், "சம்பந்தம் நிறைய இருக்கு! அதாவது உனக்கு ஏற்பட இருந்த போட்டி ஒழிந்து விட்டது!" என்றாள்.

"போட்டியா? எனக்கா?" —பொன்மணி ஆச்சரியப்பட்டாள்.

"ஆமாம்; தூக்கு மாட்டிக் கொண்டவள், என் அண்ணனைக் கல்யாணம் செய்துகொள்ளத் துடியாய்த் துடித்தாளாம்! அண்ணன் அவளைப் பார்த்து 'என்னை மறந்துடு! எனக்காக வேறொரு இடத்திலே பெண் பிறந்திருக்குது' என்றாராம்!"

"என்னது? இப்பதான் பெண் பிறந்திருக்குதா? அப்ப உங்க அண்ணனுக்கு எத்தனை வயசிலே கல்யாணம்?"

"ஓகோ...குறும்பு வேறயா உனக்கு? பெண் பிறந்து ரொம்ப நாள் ஆகுது! மூக்கும் முழியும் கடைஞ்சு வச்ச சிலை மாதிரி! எங்க அண்ணனுக்கு ஏத்த அழகு-குணம்-குடும்பம் எல்லாமே ஏகப் பொருத்தமா அமைஞ்சிருக்கு!"

"அப்படியா? அப்பேற்பட்ட இடம் எது?"

"பயப்படாதே! உனக்குப் போட்டியா ஒருத்தியும் வர மாட்டாள். சாட்சாத் நீயே தான்!"

இந்த வார்த்தைகள் காதில் விழுந்ததும், பொன்மணி சடக்கென்று அதை விட்டு எழுந்தாள். கையிலிருந்த மஞ்சளைக் கொண்டுபோய் தாயாரிடம் கொடுத்து, "இந்தாம்மா! இதைப் போடு!" என்று கூறிவிட்டு வேறு பக்கம் போய் விட்டாள்.

அடுக்களையிலிருந்து வந்த கற்பூரம், கூடத்தில் பொன்மணியைக் காணாமல் சிறிது கலவரமடைந்து அண்ணனிடம் வந்து சேர்ந்தாள். அவனுடைய விக்கங்களுக்கு அவளும் பூஞ்சோலையுமாகச் சேர்ந்து மஞ்சள் பத்து போடத் தொடங்கினார்கள். உடலில் கை படுவதையும் சிங்காரத்தால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஒருவாறு பத்து போட்டு முடித்துவிட்டு பூஞ்சோலையம்மாள் பெருமூச்சு விட்டாள். கற்பூரம் தன் கைகளை நன்றாகக் கழுவிக் கொண்டு, சுற்று முற்றும் விழியோட்டி, பொன்மணியைத் தேடிப் பார்த்தாள். அவள் கிடைக்கவில்லை.

பிறகு, அவள் பூஞ்சோலையிடம் விடை பெற்றுக் கொண்டு வீட்டுக்குப் போய் ஆடுமாடுகளுக்குத் தீனியைக் கவனித்துவிட்டு வருவதாகப் புறப்பட்டாள். அவள் உள்ளத்திலே பெருங் குழப்பம்! தான் எண்ணியபடி ஏதாவது நடக்குமா? அல்லது எல்லாம் தலைகீழாக மாறிவிடுமா? இப்படி மனப் போராட்டம்! எவ்வளவு பெரிய சுமையை அவளாகத் தூக்கித் தலையிலே வைத்துக் கொண்டாள்; பாபம்!

கண்ணன், பொன்மணியை மறக்கவேண்டும்; பொன்மணி தன் அண்ணனை மணக்கவேண்டும்; இந்த விளைவால் தனக்குக் கண்ணன் கிடைக்க வேண்டும்—இப்படிச் சிக்கலான ஏற்பாடு ஒன்றிற்காக அவள் தன் தலையை உடைத்துக்கொண்டாள். அவளையறியாமல் அவளுக்கு ஒரு நம்பிக்கை மட்டும் உதித்தது. அந்த நம்பிக்கையால் ஏற்பட்ட அற்பத் துணிவோடு அவள் வீடு நோக்கி நடை போட்டாள். எதிர்காலக் கனவுகளில் ஆழ்ந்திருந்த அவள், தன்னைக் கண்ணன் கவனித்துக்கொண்டு பூவரசு மரத்தடியில் நிற்பதைப் பார்க்கவில்லை.

அவள் பார்க்காதவரைக்கும் நல்லது என எண்ணி, அவளைப் பின் தொடர்ந்து நடந்தான் அவன். கற்பூரம் வீட்டுக்குள் நுழையும்போது தற்செயலாகத் தெருப் பக்கம் திரும்ப, கண்ணன் நிற்பதைப் பார்த்துவிட்டு ஆச்சரியத்தால் மெய் மறந்தாள். தேடியலைந்த செல்வம், வாசல் தேடி வந்து விட்டதாகத் தீர்மானித்துப் பூரிப்பு கொண்டாள். அவளால் பேச முடியவில்லை. கன்னம் சிவந்து விட்டது. தலை, தானே கீழே குனிந்து கொண்டது. தட்டுத் தடுமாறி "வாருங்கள்!" என அழைத்து உள்ளே சென்றாள்.

அவனும் வீட்டுக்குள் சென்றான். பரபரப்போடு பட்டுப் பாயை எடுத்துக் கூடத்தில் விரித்தாள். கையும் ஓடாமல் காலும் ஓடாமல் அங்கு மிங்கும் தேடி வெற்றிலைத் தட்டை எடுத்து எதிரே வைத்தாள்.

"என்ன கற்பூரம், இப்ப எப்படியிருக்கிறது, சிங்காரத்துக்கு?" என்று பேச்சைத் தொடங்கினான் கண்ணன்.

"நீங்க பார்த்த பிறகு சௌகரியம் ஆகாம இருக்குமா?" —தழுதழுத்த குரலில் பதில் தந்தாள் அவள்.

"அது என்ன பேயி, அதிசயமான பேய்! எங்கேருந்து பிடிச்சுது அது...வேடிக்கையான பேய!"

"உங்களுக்குத் தெரியாதா என்ன? எப்படியோ நீங்கதான் அண்ணனைப் பூரணமா குணப்படுத்தனும். நான் உங்களைத்தான் நம்பிக்கிட்டு இருக்கேன்!"

"அப்படியா? நானும்கூட உன்னைத்தான் நம்பிக்கிட்டு இருக்கேன் கற்பூரம்!"

"நம்பினவளை நீங்கள் நட்டாற்றில் விடாமல் இருந்தால் போதும்!"—இதைச் சொல்லும் போது கற்பூரத்தின் குரல் கம்பியது.

"நான் யாருக்கும் நம்பிக்கைத் துரோகம் செய்யமாட்டேன்!"

"நீங்கள் மகா உத்தம புருஷர்! இல்லாவிட்டால் அவ்வளவு பெரிய பகையை மறந்துவிட்டு நான் அழைத்தவுடன் ஓடி வருவீர்களா?"

"கற்பூரம்! நான் ஏன் ஓடி வந்தேன்? எதற்காகப் பகையை மறந்தேன்? அதை நீ புரிந்து கொண்டிருக்க முடியாது!"

"ஓரளவுக்குப் புரியாமல் இல்லை. உங்கள் மனசில் இப்படி ஒரு நினைப்பு இருப்பது எனக்கு இத்தனை நாளும் தெரியாமல் போச்சேயென்றுதான் கவலைப்படுகிறேன்!"

"கற்பூரம்!"

"நெருப்பில்லாமல் கற்பூரம் எரியுங்களா?..."

கற்பூரம் அதன் பிறகு பேசவில்லை. அசைவற்று இருந்தாள். அவளையே விழுங்கி விடுவதுபோல் பார்த்தான் கண்ணன். பிறகு அவனே சென்று கதவைத் தாளிட்டான்.

கதவைத் தாளிட்டு அவன் திரும்பியதும் திடீரென்று அவன் காலடியில் விழுந்து, "என்னை மறந்துவிடாதீர்கள்! என் உயிர், உடமை எல்லாம் உங்களுக்கே அடைக்கலம்" என்று கெஞ்சி யழுதாள் கற்பூரம். அவளைத் தூக்கித் தோள் மீது சாய்த்துக்கொண்டு ஆறுதல் கூறினான். அவளது அழகிய கன்னங்களில் உருண்டு வரும் கண்ணீர் முத்துக்களைத் தன் சூடான உதடுகளால் ஒத்தி எடுத்தான்.

கற்பூரம், தன்னை அவனிடம் ஒப்படைத்துவிட்டாள். அவள் உள்ளத்திலே பொங்கி யெழுந்த இன்ப வெள்ளத்தை வர்ணிக்க இயலாது. "கனவுபலித்தது கடவுளே!" என்று கடவுளை வாழ்த்தினாள். சிரமத்திற் கிடையே தான் வகுத்த திட்டம் இவ்வளவு விரைவில்—இத்துணை வெற்றிகரமாக முடியுமென்று அவள் எதிர்பார்க்கவில்லைதான்.

நெடு நேரம் இன்ப வாரிதியில் திளைத்திருந்த அவர்கள் மௌனத்தில் தனி உற்சாகம் கண்டனர். நீண்ட பொழுதிற்குப் பின் உலகம் ஒன்றிருப்பதை உணர்ந்தனர். "என்னை மறக்க மாட்டீங்களே?" என்று இதழசைத்தாள் அவள்.

"நிச்சயமா மறக்க மாட்டேன். ஆனா ஒண்ணு! எனக்காக நீ ஒரு உதவி செய்யனும் கற்பூரம்!" என்றான் கண்ணன்.

"என்ன உதவி? சொல்லுங்க...என் உயிரையே உங்களுக்காகக் கொடுக்கிறேன்!" என்றாள்.

"சத்தியமா?" என்று கேட்டான், அவளைத் தழுவிக் கொண்டு. "உங்கள்மேல் ஆணையாக!" என்றாள்.

"எப்படியாவது, அந்தப் பூஞ்சோலை மகள் பொன்மணியை எனக்கு சம்மதிக்க வைக்க வேண்டும்—அது உன்னால்தான் முடியும்!" என்று கண்ணன் அவள் கூந்தலைக் கோதிக் கொண்டே கூறினான்.

"ஆ!"

கற்பூரம் அலறினாள்! அவள் திடீரென உணர்ச்சி வசப்பட்டால் என்ன ஆகும்?

முரசொலி

சந்தா விபரம்

உள் நாடு

ஆண்டு சந்தா	8—00
ஆறு மாதம்	4—50

வெளி நாடு

ஆண்டு சந்தா	9—00
ஆறு மாதம்	5—00

[சந்தாத்தொகையை மணியார்டர் மூலமோ, கிராஸ் செய்த இந்தியன் போஸ்டல் ஆர்டர் மூலமோ அனுப்பலாம். இலங்கை, மலேயா போன்ற இடத்திலிருந்து கிராஸ் செய்த பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவேண்டும்.

சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்போது தவறாது சந்தா எண்ணைக் குறிப்பிட வேண்டும்.]

வெள்ளையன் மட்டுமல்ல; வடநாட்டானும் அன்னியனே!

"இன்று வட நாட்டானை எப்படி அன்னியன் என்று சொல்லமுடியும்? எல்லோரும் இந்தியர்கள்தான்— என்று காங்கிரஸ்காரர்கள் சொல்லுகிறார்கள்.

"அன்னியன் என்றால் யார் என்பதை நாம் பார்க்க வேண்டும். யாருடைய பாஷை நமக்குப் புரியாதோ, அவன் நமக்கு அன்னியன்தான்! ஆங்கில பாஷை நமக்குப் புரியாது—ஆங்கிலேயன் அன்னியன்! அதேபோல, இந்தி நமக்குப் புரியாது—வட நாட்டானும் அன்னியன்தான்! உடையிலும், உணவு முறையிலும் நமக்கு ஆங்கிலேயன் எபபடி அன்னியனோ, அதேபோல்தான் வட நாட்டானும் அன்னியன். அன்னியன் என்பதற்கு இலக்கணம், உணவு, உடை, மொழி இவைகளில் வேறுபாடுகள் காணப்படுவதுதான்.

"'அதெல்லாமிருக்கட்டும்; மத விஷயத்தில் வட நாட்டினரும் இந்துக்கள்; நாமும் இந்துக்கள் இல்லையா?'—என்று கேட்கிறார்கள். அவர்களுக்கு நான் சொல்லுவேன்—ஜெர்மானியரும் கிறிஸ்தவர்கள் தான்; பிரான்சு நாட்டிலிருப்பவர்களும் கிறிஸ்தவர்கள்தான்; இரு நாட்டினரும் ஒரே ஏசுபிரானைத் தான் வணங்குகிறார்கள்; பின் அவர்களுக்குள்ளே ஏன் யுத்தம்?

"பாகிஸ்தானும், ஆப்பிரிக்க நாடுகளும் ஒரே முஸ்லிம் மதத்தைத் தழுவியவைதான். கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் எங்கெங்கு இருக்கிறார்களோ அங்கேயெல்லாம் ஒரே கடவுளை, ஒரே நேரத்தில், ஒரே மாதிரியாகத்தான் தொழுகிறார்கள். அவர்களுக்குள்ளே ஏன் நாட்டுக்கு நாடு வேற்றுமை—பகை உணர்ச்சி—எல்லாம்?

—அறிஞர் அண்ணா

பேசித் தோற்றவர்கள் - எனவே ★ ஏசித் தீர்க்கிறார்கள்! ★

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

இருந்து திரும்பிப் போகவேண்டுமென்று நாம் விரும்புகிறோமே; அந்த மேதியா? அல்ல; அல்ல; வெள்ளைக்கார கவர்னர்! ஆங்கிலேய வெறியர்! அவர் சென்னையின் கவர்னர்; நடைபெறுவது காங்கிரஸ் மகாநாடு; அவர் உள்ளே நுழைகிறார்! மக்கள் என்ன கருதி இருப்பார்கள்? அல்லது நீங்கள்தான் என்ன கருதுகிறீர்கள்? அப்படிப்பட்ட ஒரு விடுதலை இயக்கின் வரலாற்றை ஆட்டிப்படைகின்ற வெள்ளைக்காரர் உள்ளே நுழைந்தால் என்ன பாடுபட்டிருப்பார்? லியாகத் அலிகானைக் கொன்றானே; அவனைக் குத்தி எறிந்தது போலல்லவா ஆக்கி இருப்பார்கள் என்று கருதுவீர்கள். நடந்தது அதுவல்ல; காங்கிரஸ் கனதனவான்கள் அத்தனை பேரும் எழுந்து 'வாழ்க, கவர்னர் பெருமான்!' என்று வாழ்த்தி—மேடையிலே அமர்த்தி—மாலையிட்டார்கள். சுரேந்திரநாத் பானர்ஜி என்ற காங்கிரஸ் பேச்சாளர் மேடைக்கு வந்து பேச ஆரம்பித்தார். என்ன பேசினார் அவர்? "வெள்ளையனே வெளியேறு!" என்கின்ற தீர்மானத்தைப் படித்திருப்பார் என்று கருதுகிறீர்கள்? அல்ல, அல்ல; "இந்த காங்கிரஸ் மகாசபை என்றென்றும் பிரிட்டிஷ் மக்களுக்கு — பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு விஸ்வாச பூர்வமாக நடந்து கொள்ளும் என்கின்ற தீர்மானத்தை இங்கே படிக்கிறேன்" என்றார். தீர்மானமும் ஏகமனதாக நிறைவேறிவிட்டது.

இப்படிப் பட்டவர்கள்தான் 'வெள்ளைக்காரனுக்கு விஸ்வாசமாக நடந்து கொள்ளுகிறோம்' என்று 1914-ம் ஆண்டு தீர்மானம் போட்டவர்கள்தான் இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் விதையை ஆராய்ச்சி செய்து, திராவிட நாடு திராவிடருக்கே என்கின்ற இந்த விதை முளைக்காது என்று முடிவு கட்டுகிறார்கள். நான் கேட்கிறேன், முளைக்காத விதையைப்பற்றி சுப்ரமணியம் 100 நிமிடம் பேசுவானேன்? ஒரே வார்த்தையில் 'அழுகிப்போன விதை; ஆகவே யாரும் பயிரிடாதீர்கள்' என்று கூறி விடலாமே!

இது முளைக்காத விதையா? இது முளைக்காது என்றால் 15 வழுதுகளைச் சட்ட சபையில் எபபடி விட்டிருக்கிறது? 19 லட்சம் இலைகள் எப்படி இந்த தருவிற்குக் கிடைத்திருக்கிறது?

"திராவிட முன்னேற்றக் கழகம் சட்ட மன்றத்திற்கு வந்து என்ன சாதித்தது? ஏதோ அடுக்கு சொல்லிலே பேசுகிறார்கள்—அழகான தமிழிலே பேசுகிறார்கள்—வடக்கு தெற்கு என்று உளறுகிறார்கள்" என்று இன்றைய தினம் பேசுகிறார்கள்.

நாங்கள் அழகான தமிழில் பேசுகிறோம் என்றால் — அடுக்குச்சொலலில் பேசுகிறோம் என்றால்—அதற்காக பள்ளிக்கூடம் வைத்தா நாங்கள் கற்றுக் கொள்கிறோம்? அவர்களும் தான் பேசிப் பார்க்கிறார்கள். பக்தவத்சலம் கூட பேசுகிறார். "ஆசைத்தம்பி ஆசையோடு பேசினார்" என்று! ஏன் அவர்களுக்கு வரவில்லை? உண்மை இல்லை. அடித்தளத்திலிருந்து கருத்து வெளி வர வழியில்லை.

நாங்கள் பேசுகிறோம் என்றால், தனியாக வானத்திலிருந்து குதித்தா பேசுகிறோம்! உங்களுடைய உள்ளத்தை—ஆயிரம் ஆயிரமாக வீற்றிருக்கின்ற உங்கள் இருதயத்தை இங்கே எதிரொலிக்கிறோம்! பேச முடியாமல் வீற்றிருக்கிற நீங்கள், எங்களைப் பேச வைக்கிறீர்கள்! நாங்கள் நிலைக் கண்ணாடி—அதிலே உங்களுடைய திரு முகங்களைக் காட்டுகிறீர்கள்!

அந்தக் கண்ணாடியை நாங்கள் அரசினருக்குக் காட்டுகிறோம், 'இந்த முகங்களைப் பார்' என்று. இது ரசம் பூசப்பட்ட கண்ணாடி—அதனால் உங்களுடைய முகம் தெளிவாகத் தெரிகிறது: 'அழகான தமிழ்' என்று அதற்குப் பெயர் தருகிறார்கள்! அங்கு இருப்பவர்கள் ரசம் பூசப்படாத கண்ணாடிகள்—ஆகவே அவைகளை வைத்து வர்ணித்து வெளிநாட்டுக்காரர்களிடம் 'தொட்டுப் பார்; வழவழப்பாக இருக்கிறது!' என்று கூறுகிறார்களே தவிர, உங்களுடைய கண்களிலே இருந்து வருகின்ற கண்ணீரைத் தொட்டு, அதனுடைய ஈரத்தை உணர முடியவில்லை. உங்களுடைய உடம்பிலே ஏற்பட்டிருக்கின்ற கொதிப்பை உணர முடியவில்லை.

நீங்கள் அத்தனை பேரும் சூரியன்கள் — நாங்கள் சந்திரன். உங்களுடைய ஒளியை இரவல் வாங்கி மறுபடியும் உலகத்திற்குத் தருகிறோம்!

நாங்கள் தடாகம்—அதிலே உங்களுடைய நிழல் தெரிகிறது. நாங்கள் அதை விவரித்துக் காட்டுகிறோம்.

நீங்களே நாங்கள்! நாங்களே நீங்கள்! "நமக்கு நாமே" என்று ஒரு பெரிய இயக்கம்—'ஷின்பேன்' என்ற இயக்கம் அயர்லாந்திலே இருந்தது போல நமக்கு நாமே பேசிக் கொள்கிறோம்! நம்முடைய கொடுமைகளை ஒருவர் மூலம் எடுத்துச் சொல்லுகிறோம்! அந்த மொழிகளிலே ஏமாந்து விடாதீர்கள் என்று கூறுவதிலே என்ன அர்த்தம் இருக்க முடியும்? நாங்கள் சட்ட சபையில் பேசுவது காங்கிரஸ்காரர்களின் உள்ளத்திலும் ஊடுருவிப்பாய்ந்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது. நான் சென்ற ஆண்டு சட்டசபை நடவடிக்கைப் புத்தகத்தைப் பார்த்தேன். அபபடி பார்க்கின்ற நேரத்தில் ஒரு செய்தியை அதிலே கண்டேன். நான் சென்ற ஆண்டு நீர்ப்பாசன திட்டத்தின்மீது பேசினேன். "இரண்டாவது 5-ஆண்டுத் திட்டத்தில் நீர்ப்பாசன திட்டங்களால் புதிய பயனைப் பெறப் போகின்ற ஏக்கராக்கள் பஞ்சாப் மாநிலத்தில் 17 லட்சம் ஏக்கரா! பம்பாய் மாநிலத்தில் 10 லட்சம் ஏக்கரா! பீகாரிலே 20 லட்சம் ஏக்கரா! இப்படி வட நாட்டிலே இருக்கிற மாகாணங்கள் அதிக அளவில் பயன் பெறுகின்றன. ஆனால் நமமுடைய சென்னை மாகாணத்திலே இந்த நீர்ப்பாசன திட்டங்களால பயன் பெறுவது 1.40 000 ஏக்கராதான்!" என்று குறிப்பிட்டேன். மறு நாள் நான் பொதுக்கூட்டநிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ள சென்றுவிட்ட நேரத்திலே, கரூர் தொகுதி எம். எல்.ஏ. நல்லசாமி என்பவர் பேசி இருக்கிறார். "நேற்றைய தினம் கருணாநிதி வட நாட்டிலே இருக்கின்ற நீர்ப்பாசன திட்டங்களை-தென்னாட்டில் உள்ள நீர்ப்பாசன திட்டங்களைப் பற்றிப் பேசினார்; அந்த ஏற்றத்தாழ்வை காணும்போது தமிழ் நாடு புறக்கணிக்கப்படுகிறது நன்கு புலனாகிறது. ஆகவே அதற்கு அமைச்சர் அவர்கள் சரியான பதில் சொல்லவேண்டும்" என்று. அவர் பேசிய பிறகு அமைச்சர் சுப்பிரமணியம் எழுந்து, "ஆமாம்; நானும் கேட்டேன்; கருணாநிதி 1,40,000 என்று சொல்வது தவறு. 2 இலட்சம் ஏக்கரா இங்கு பலன் அடைகிறது" என்று குறுப்பிட்டாராம், "இல்லையே! உங்களுடைய 5 ஆண்டு திட்ட புத்தகத்திலே 1,40,000 ஏக்கரா என்று தானே இருக்கிறது?" என்று சொல்ல—"முதலில் அப்படிப் போட்டோம். பிறகு 60,000 ஏக்கரா அதிகமாக சேர்த்திருக்கிறோம்!" என்றுதான் குறிப்பிட முடிந்ததே தவிர, அந்த 17 லட்சம் ஏக்கராவோடு போட்டி போட முடியுமா இந்த சென்னையின் இரண்டு லட்சம்?

இப்படிக் கேட்டால் புள்ளி விபரம் இல்லாமல் பேசுகிறார்கள்; வடக்கு வாழ்கிறது—தெற்கு தேய்கிறது என்ற வசீகரச் சொல்லை மாத்திரம் வைத்துக் கொண்டு வம்பளக்கிறார்கள் என்று கூறி விடுகிறார்கள். எத்தனையோ புள்ளி விபரங்களைத்தான் நாம் எடுத்துக் காட்டினோம், ஆதாரப் பூர்வமாக, ஆயிரக்கணக்கான தடவைகள்! பக்ரா நங்கல் அணைக்கட்டுத்திட்டத்திற்கும், தாமோதர் திட்டத்திற்கும், ஹிராகுட் அணைகட்டுத் திட்டத்திற்கும் பல கோடி ரூபாய்களை செலவழிக்கிறார்களே; இங்கு என்ன வாழ்கிறது? 'இங்கே திட்டங்கள் நிறைவேற்றுவதற்கு பணம் இருக்கிறது; ஆனால் இடம் இல்லை; இயற்கை வசதி இல்லை' என்று கூறுகிறார்கள். இடமா இல்லை? 1920—ஆம் ஆண்டு, வெள்ளைக்காரன் காலததிலே திட்டமிடப்பட்டு, இதுவரையிலே சுதந்திர ஆட்சியிலே கூட நிறைவேற்றபபடாமல் இருக்கிறது, பெயர் பெற்ற சேது சமுத்திரக் கால்வாய் திட்டம்! இலங்கையின் மேற்குக் கரையிலிருந்து இந்தியத் துணைக் கண்டத்தின் தென் கோடி கிழக்குக் கரைவரையில் 100 மைல் நீளத்திற்கு இருக்கின்ற பெரிய பெரிய பாறைகள் அகற்றப்பட்டால், அங்கே 100 மைல் நீளத்திற்கு தென்னகத்தினுடைய ஓரத்தில், தூத்துக்குடி வரையிலே பலப்பல துறைமுகங்கள் உண்டாக முடியுமென்றார்கள். அதற்கு ஆகின் செலவு 10 கோடி ரூபாய்தான் எனறும் தீர்மானிக்கப்பட்டது. அதை விசாரிக்க சர். ஏ. ராமசாமி (முதலியார்) தலைமையில் ஒரு குழு உருவாகி, 1955—ம் ஆண்டு நேரிலே நிலைமைகளைப் பார்வையிட்டு, அந்தத் திட்டங்களைப்பற்றி விவரங்களை ஆராய்ந்து, அது பற்றிய மனுவை மத்திய சர்க்காருக்கு அனுப்பி வைத்தது. முதல் 5 ஆண்டுத் திட்டத்தில் இந்தத் திட்டம் சேர்க்கப்படவில்லை; இரண்டாவது 5 ஆண்டுத் திட்டத்திலும் கிடையாது; க்கன் இப்போது யூகிக்கிறார், ஒருவேளை மூன்றாவது 5 ஆண்டுத் திட்டத்தில் வரலாமோ என்று! அப்பொழுது, இவர்கள் இருப்பார்களோ என்னவோ தெரியாது!

10 கோடி ரூபாய் மட்டும் செலவழித்தால், இப்பொழுது இருக்கின்ற தூத்துக்குடி துறைமுகம் ஒரு ஆழ்கடல்

விற்பனையாகின்றன!

- அழகு தமிழ்ப் பூக்காடு!
- அரசியல் விளக்க ஏடு!
- உரிமை முரசு கொட்டும் உன்னத நாடகம்!

மு. கருணாநிதியின்

உதய சூரியன்

விலை ரூ. 1—50

- உணர்ச்சி மிக்க காவியம்!
- உன்னதமான ஓவியம்!
- தென்னக மேடைக்கோர் புதிய படைப்பு!

பி சி. கணேசன் எழுதிய

எழுத்தாளன் காதலி (நாடகம்)

விலை ரூ. 1—25

முத்துவேல் பதிப்பகம்,
77, மதுரை சாலை, திருச்சி-8.

[தனிப் பிரதி வேண்டுவோர், புத்தக விலையுடன் 25 புதுக் காசு சேர்த்து அனுப்புக.]

ஒட்டும் உறவும் இனி வேண்டாம்; வீறுகொண்டு விடுதலை பெறுவோம்!

துறைமுகமாக மாறும்! அப்படி தூத்துக்குடி பெரிய துறைமுகமாக மாறிவிட்டால், பம்பாய்த் துறைமுகத்தோடு போட்டி போடும். பிறகு வடநாட்டிற்கு இருக்கிற புகழ் குறையும். ஆகவேதான் இந்தத் திட்டத்தை அவர்கள் நிறைவேற்ற மறுக்கிறார்கள்! இன்றைய தினம் சூயஸ் கால்வாய் வழியாக கீழ்த் திசைக்கு வருகின்ற கப்பல்களெல்லாம், 'இந்தியாவினுடைய வாசல்' எனப்படுகிற பம்பாய்த் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டு, அங்கே நிலக்கரியை வாங்கி, பம்பாயிலே வாணிபத்தை விருத்தி செய்துவிட்டு, அங்கிருந்து புறப்பட்டு, இந்தியாவைச் சுற்றிக்கொண்டு, தூத்துக்குடித் துறைமுகம்வராமல், கொழும்புத் துறைமுகத்திற்குப் போகிறது. கொழும்புத் துறைமுகத்தில் அவை நிற்கிற காரணத்தால், கப்பலுக்கு வேண்டிய நிலக்கரியை இலங்கை சர்க்கார் தருகிறது. அதனால் பயன் பெறுவது—லாபம் பெறுவது இலங்கை சர்க்கார்! அந்த இலங்கைக்கு நிலக்கரி எங்கே இருந்து கிடைக்கிறது தெரியுமா? கல்கத்தாவிலிருந்து! இலங்கைக்குச் சேரும் அந்த லாபம் ஏன் தென்னாட்டிற்கு வரக்கூடாது? பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு பயம், சேது சமுத்திரக் கால்வாய் திட்டத்திற்கு இணங்கிவிட்டால், இதுவரையில் லாபம் பெற்று வந்த இலங்கை சர்க்காருக்குத் தன்மீது கோபம் வரும், என்று! அதற்குப் பயந்து, தென்னாட்டு மக்களை அவர் பலியிடுகிறார்! எனினும் அந்தத் திட்டத்திற்குத் தேவையான 10 கோடி ரூபாயை சும்மாவா கேட்கிறோம்? மற்ற மற்ற வரிகள் தனியாக இருக்க, துறைமுக வரியாக மட்டும் தென்னாடு கொடுக்கின்ற 35 கோடி ரூபாயைக் கொடுத்துவிட்டுக் கேட்கிறோம்! தர மறுக்கிறார்கள்!

சர் ஏ. ராமசாமி முதலியாருடைய 'ரிப்போர்ட்'டில் அந்த திட்டம் எடுத்துக்கொள்ளப்படுமேயானால் 7 வருட காலத்திற்கு 35 000 தொழிலாளர்களுக்கு அங்கே வேலை கிடைக்கும்; திட்டம் நிறைவேறிய பிறகு நிரந்தரமாக 6,000 தொழிலாளர்களுக்கு, வேலையுமுண்டு—என்று காணப்படுகிறது. இது ஏன் புறக்கணிக்கப்படவேண்டும்? அதோடுமட்டுமல்ல; வடநாட்டிலே ஒரு புதிய துறைமுகத்தையும் உண்டாக்குகிறார்கள், கன்ட்லா என்ற இடத்தில்! முதல் 5 ஆண்டுத் திட்டத்திலே மட்டும் அதற்குச் செலவழித்திருக்கின்ற பணம் 9 கோடி ரூபாய்! இன்னும் நிறைய செலவழிக்கப்படவேண்டும். இயற்கையான துறைமுகத்தை ஆழ் கடல் துறைமுகமாக ஆக்க மறுத்துவிட்டு, வட நாட்டில் புதிய துறைமுகங்களை காணுகிறார்களே; இதற்கு என்ன பொருள்?

அது மாத்திரமல்ல நண்பர்களே! புது டில்லியிலே ஒரு ஹோட்டல் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. 'அசோக் ஹோட்டல்' என்று! வெளி நாட்டுக்காரர்கள் தங்குவதற்காக — விருந்து, கேளிக்கைகளை அனுபவிப்பதற்காகக் கட்டப்பட்டிருக்கின்ற அந்த ஹோட்டலுக்கான செலவு, ஏழை இந்தியாவில் 9 கோடி ரூபாய்!

அங்கே செக்கோஸ்லேவேகியாவிலிருந்து வந்திருக்கின்ற சமையல்காரனின் சம்பளம் எவ்வளவு தெரியுமா? மாதம் ஒன்றிற்கு 4,500 ரூபாய்—மூன்று காமராசரின் சம்பளம்! இப்படி கோடிக் கணக்கிலே செலவு செய்யும் சர்க்கார் தென்னகத்தின் அவசியமான திட்டம் ஒன்றை நிறைவேற்ற மறுக்கிறது. அந்த சர்க்காருடன் நாம் ஒட்டிக்கொண்டிருக்க வேண்டுமாம்; குனிந்து கொடுக்கவேண்டுமாம்; கொஞ்ச வேண்டுமாம்; குழைய வேண்டுமாம்! இங்கே இருக்கிறவர்கள் பேசுகின்றார்கள் வட நாட்டின் நிரந்தர கங்காணிகளாக ஆகிவிட்ட காரணத்தால்!

திராவிட முன்னேற்றக் கழகம் எது கேட்டாலும் 'பணம் இல்லை, பணம் இலலை' என்று கூறுகிறார்களே; மந்திரிமார்கள் அவர்களது கராச்சி தீர்மானத்தின்படி தங்களது சம்பளத்தில 1000 ரூபாய் வெட்டிக் கொணடால் என்ன? அப்படி 8 மந்திரிகளும் குறைத்துக் கொண்டால், ஒரு வருடத்தில் ஏறத்தாழ ஒரு லட்ச ரூபாய் மிச்சமாகும்! கவர்னருடைய சம்பளத்திலே ஒன்பது லட்சம் மிச்சம். அந்தப் பதவியை எடுத்துவிட்டால்—ஆக பத்து லட்ச ரூபாய் ஏறத்தாழ மிச்சமாகாதா? அந்தப் பணத்தை வேறு நல்ல வழிகளில் செலவழிக்கக் கூடாதா?

அதை வெறுக்கின்ற மந்திரிகள் இந்த நாட்டின் பாட்டாளியைப் பற்றி சிந்தித்ததுண்டா? இந்த நாட்டிலே கஷ்டப்படுகின்ற ஏழை ஹரிஜனச் சகோதரர்களைப் பற்றி யோசித்ததுண்டா? சேரிகள் என்று சொல்லப்படுகின்ற ஓட்டைக் குடிசைகளில், சூரிய ஒளியும், சந்திர ஒளியும் போட்டி போட்டுக் கொண்டு, 'நான் முந்தி, நீ முந்தி' என்று புகுந்திட—சின்னஞ் சிறிய பாய்களில் கிழிந்த உடைகளுடன், அங்கமெல்லாம் தெரிய—தங்கம் நிகர் குழந்தைகள் எல்லாம் 'பசி, பசி' எனக் கதறுகின்ற காட்சியைப் பார்த்ததுண்டா? ஒரு பக்கத்து ஈரச் சேலையை தன்னுடைய இடுப்பிலே சுற்றிக் கொண்டு, மறு பக்கத்தை கையிலே பிடித்து வெயிலிலே காய வைதது—பிறகு காய்ந்த பக்கத்தை சுற்றிக்கொண்டு, ஈரப் பக்கத்தைக் காய வைத்துக் கட்டிக் கொள்ளுகிற ஆதித் திராவிட பெண்கள் இந்த நாட்டிலே உலவுகின்ற கோரத்தைக் கண்டது கிடையாதா?

என். ஜி. ஓ. வினரின் சோக அலறல்—ஆரம்ப ஆசிரியர்களது கூக்குரல்—அவர்களது உள்ளங்களைத் தொட்டது கிடையாதா? 50 ரூபாய் சம்பளத்தில் குடித்தனம் நடத்துகின்ற ஏழை போலீஸ்காரர்களின் அவலக் குரல் அவர்களுடைய காதுகளில் உள்ள கர்ண பேரிகையைக் கிழித்தது கிடையாதா? அதைப் பற்றி என்ன பேசி இருக்கிறார்கள்? என்ன கேட்டிருக்கிறார்கள்?

இந்த நாட்டில் ரயில்வே தொழிலாளியின் குறைந்த பட்ச சம்பளம் 30 ரூபாய்! ஆண்டு ஒன்றுக்கு அதிகமாகத் தரப்படுகிற சம்பளம் அரை ரூபாய்! அடிக்கடி மந்திரி சபை மாறுகின்ற பாகிஸ்தானில் குறைந்த பட்ச சம்பளம் வாங்குகின்ற தொழிலாளிக்கு தரப்படுகின்ற அதிகச் சம்பளம் ஆண்டு ஒன்றுக்கு ஒரு ரூபாய்! ஆனால் இந்த நாட்டில் மட்டும் ஏன் இந்த நிலை?

அதனால்தான் நாங்கள் சொல்லுகிறோம், கவர்னருக்குக் கொடுப்பது போன்ற அதிகச் சம்பளம் அநாவசியமானது என்று! அவருக்கு 9 லட்சம் எதற்காகச் செலவிடப்பட வேண்டும்?

ஆனால் மந்திரிகள் சொல்லுகிறார்கள், கவர்னருக்குத் தரப்படுகின்ற பணம் நியாயமானது என்று! அவரது ஆடம்பரச் செலவு நியாயமானதாம்! பங்களாவிற்காகத் தரப்படுகின்ற சம்பளம நியாயமானதாம்! பரிவாரங்களுக்காகக் கொடுக்கப்படுகின்ற பணம் நியாயமானதாம்! அவர்கள் சொல்லுகிறபடி கவர்னர் நியமிக்கப்பட்ட பிறகு நியமித்துவிட்டோமே என்பதற்காகவாவது கொடுக்கலாம்—அது நியாயமாக இருக்கலாம்; நாங்கள் அடிப்படையையே மறுக்கிறோம். அவர் நியமிக்கப்படவே தேவையில்லை என்று கூறுகிறோம்.

சுப்பிரமணியம் சொல்லுகிறார், "கவர்னர் வேண்டாமென்கிறார்களே; திடீரென நாட்டிலே ஒரு ஆபத்து ஏற்பட்டுவிட்டால்—மந்திரி சபை கவிழ்ந்து விட்டால் — நாட்டை பரிபாலிப்பதற்கு ஒரு ஆள் வேண்டாமா? நம்முடைய ஜனநாயகத்தின்படி கவர்னருடைய ஆட்சிதானே வரவேண்டும்!... தீ அணைக்கும் படை இருக்கிறதே; அதற்கு நாள்தோறும் வேலை கிடையாது. திடீரென்று எங்காவது தீப்பிடித்துக் கொண்டால், உடனே தீயணைக்கும் படை சென்று அணைக்கிறது—உதவி செய்கிறது. அது போலத்தான் கவர்னர் பதவியும், ஒரு தீ அணைக்கும் படை! என்றாவது ஒருநாள் மந்திரி சபையில் குழப்பம் ஏற்படலாம்; நேரிடை ஆட்சி நடைபெறக்கூடிய நிலை — கவர்னர் ஆட்சி உருவாகக்கூடிய நிலை ஏற்படலாம்! அப்போது யாரைப் போய் தேடிக் கொண்டிருக்க முடியும்? ஆகவே அவர்கள் வேலை அவசியம் தேவை!" என்கிறார்.

நான் உதாரணத்தை உதாரணத்தால் மறுக்க விரும்பவில்லை. உண்மையால் மறுக்க விரும்புகிறேன். கவர்னர் ஜான் இருந்தார்; இறந்துவிட்டார். நாட்டிலே எந்தவிதமான குந்தகமும் ஏற்பட்டு விடவில்லை. அப்படி ஏற்பட்டால் பாதுகாக்கவேண்டிய — ஆட்சி பீடத்தை ஏற்கக்கூடிய கவர்னரே போய்விட்டார்; என்ன செய்தார்கள் இவர்கள்? உடனே உயர் நீதி மன்ற தலைமை நீதிபதி ராஜமன்னார் அந்த இடத்திற்குச் செல்லவில்லையா? அதைப்போல் மந்திரி சபை கவிழ்ந்து விடக்கூடிய நிலை ஏற்படுமானால்—ராஜிநாமா செய்துவிடுமானால் நாட்டை நிருவகிக்கக் கூடிய் பொறுப்பை ஏன் அந்த உயர் நீதிபதிக்குத் தரக்கூடாது? அதற்காக 9 லட்சம் ரூபாய் செலவில் ஒரு தீ அணைக்கும் படை தேவைதானா?

தீ அணைக்கும் படை என்று சொல்லுகிறார்களே; ஒவ்வொரு ஊருக்குமா அது இருக்கிறது? தஞ்சாவூரை எடுத்துக் கொள்ளுங்கள்; அங்கே ஒரு தீயணைக்கும் படை இருக்கும். அதைச் சுற்றி அநேக கிராமங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திலுமா ஒரு தீ அணைக்கும் படை இருக்கிறது? தஞ்சாவூரில் மட்டும் ஒரு தீ அணைக்கும் படையை

[தொடர்ச்சி பக்கம்—4]

தஞ்சை அரண்மனை எஸ். பி. ஜி. ஸ்கூல்
திறந்தவெளி அரங்கில்

★

12-4-58 சனி இரவு 10 மணிக்கு
மு. கருணாநிதி தலைமையிலும்

★

13-4-58 ஞாயிறு இரவு 10 மணிக்கு
அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலும்

சிவாஜி நாடக மன்றத்தாரின்

வீரபாண்டிய
கட்டபொம்மன்

நாடகம் நடைபெறும்.

கட்டணம்:— ரூ. 5, 3, 2, 1.

மு. கருணாநிதி

தஞ்சை மாவட்ட சுற்றுப் பயணம்

12: தஞ்சை
13: அறந்தாங்கி
14: துறையூர் (பேராவூரணிப் பகுதி)
15: கந்தர்வகோட்டை
16: சக்கராப்பள்ளி —அய்யம்பேட்டை
17: பழையகூடலூர்
18: மதகுசாலை
19: ஓய்வு
20: குடந்தை
21: ஒரத்தநாடு
22: சேத்தூர் (மாலை 5 மணி) திருமலைராசன்பட்டினம் (இரவு 8 மணி)
23: எடமணல்
24: துறையுண்டார்கோட்டை
25: கீரமங்கலம்

குறிப்பு: தஞ்சை மாவட்டச் சுற்றுப்பயணத்திற்கான இந்த ஊர்கள், தஞ்சை மாவட்ட மாநாட்டிற்காகக் குறிப்பிட்ட நிதித் தொகை ரூ. 100 பொருளாளர் தோழர் மு. கருணாநிதி அவர்களுக்கு அனுப்பப் பெற்றது. அந்த ஊர்களுக்கு மேற்கண்டவாறு தேதி குறிப்பிடப் பெற்று 12-ந் தேதி சுற்றுப் பயணம் துவங்குகிறது.

மேலும் நிதியளித்து தேதி விரும்புவோர், 12-ந் தேதி முதல் தோழர் மு. கருணாநிதி அவர்களை திருவாரூரில் சந்தித்து நேரில் விவரம் அறியவும்.

அறிவில்கள்...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

கிறேன்!" என்று கூறினாராம்! நாரதர் கூறிய இந்தச் செய்தியை நம்ப முடியாவிட்டாலும், அறிவலிகளுக்கு இந்தியாவிலேயே எவ்வளவு மதிப்பிருக்கிறதென்பது இதிலிருந்து நன்கு விளங்கும்!...

நான் எதற்காக இந்தக் கதையை இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டு கூறுகிறேனென்றால் ... மூளையில்லாத பைத்தியத்திற்கு இந்தியாவில் மந்திரி பதவி கிடைத்தது போல...

அறிவலி—3: தங்களுக்கு தலைவர் பதவி இங்கு நிச்சயம்! நம் தலைவர் இரண்டாவது அறிவலி அவர்கள் நீடூழி வாழ்க!...

அறிவிலி—4: நாம் இவ்வளவு விரைவில் நமது தலைவரைத் தேர்ந்தெடுத்து விட்டது குறித்து மிகவும் மகிழ்கிறோம். இனி நமது அறிவலிகளின் ஏகச் சக்ராதிபதி நம் சமுதாயத்தின் நல்வாழ்வுக்காக முட்டாள்தனமான செயல்கள் பல செய்து நம்மைக் காப்பாராக!

எல்லா அறிவிலிகளும்: நீடூழி வாழ்க! ... வாழ்க அறிவிலிகள்! வாழ்க அறிவிலி இனம்! வாழிய வாழியவே! எங்கள் அறிவிலி இனம் என்றென்றும் வாழியவே!

—"இன்பபுரியான்"

பிறைவானம்...

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

அதை ஏனோ மறந்துவிட்டார் பரமசிவம். தன் மகள் பிள்ளையாரின் முன் கரம் கூப்பி நிற்கும் காட்சியும்—

"கனக்குஞ் செல்வம், நூறு வயது
இவையும் தரநீ கடவாயே!"

—என்ற பாரதியாரின் பாடலை நீட்டி மடக்கி, குறைத்துக் குறுக்கி தன் மழலை வாயால் பாடும் பாட்டும்—அவர் உள்ளத்தில் பேருவகையைத் தந்தது. அவர் ஏன் மற்றவற்றைப் பற்றி யோசிக்கப் போகிறார்?...

அறைக்குள்ளிருந்து அவரது மனைவியின் குரல் மீண்டும் எழும்பியது. குரலா அது? அலறல்...!

"ஐயோ! உங்களைத் தானே! குழந்தை அழுறாளே!...கோயிலுக்குக் கூட்டிக்கிட்டுப் போங்களேன்!...கணேசமூர்த்தி காத்துக்கொண்டிருப்பாரே தேங்காயுக்காக!..." என்று உரக்கக் கத்தினாள்.

பரமசிவத்தால் வேதனையைத் தாங்க முடியவில்லை. வேதனை கோபமாக மாறியது. மீண்டும் எழுந்து சன்னலருகே ஓடினார். "ஏ சனியனே! சும்மா இருந்து தொலையேன்! ஏன் என் பிராணனை வாங்குகிறாய்!" என்று கத்தினார்.

மறுகணம் அறைக்குள்ளிருந்து அழுகுரல் எழும்பியது. "கண்ணே...கண்ணம்மா! பாத்தியாடி...உன் அப்பா உன்னையும் என்னையும் திட்டுறார்!..." என்று அந்தத் தாயார் தன் கையிலிருந்த குழவிக் கல்லைக் கட்டிக்கொண்டு விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தாள். மனைவியின் நிலை மறந்து அவளைத் திட்டி விட்டோமே என்று வருந்தினார் பரமசிவம். அறைக்குள் காணப்பட்ட அந்தக் காட்சியை அவரால் பார்க்கச் சகிக்கவில்லை. அங்கே கண நேரமும் நிற்கப் பிடிக்கவில்லை. வாசலுக்கு ஓடி வந்தார். தெருவில் போவோர் வருவோரை வெறிக்கப் பார்த்துக் கொண்டு நின்றார்.

அங்கே மட்டும் அவரை விட்டு விடுமா என்ன; நிரந்தரமாக அவரைப் பிடித்துக்கொண்டு விட்ட கவலை! தெருவிலே சிரித்துக் களித்து, ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்த குழந்தைச் செல்வங்களைக் கண்டார்; பெற்றவர்கள் புடைசூழ காற்று வாங்கப் புறப்பட்ட தங்கச் சிறார்களைக் கண்டார். அவர் மனம் வெதும்பியது. கண்களில் நீர் ததும்பியது.

சிலைபோல் நின்றுகொண்டிருந்த அவர் திடீரென்று வாசலைவிட்டு தடதடவென்று கீழே இறங்கினார். எதிர்த்த வீட்டுத் திண்ணையை நோக்கி ஓடினார். அங்கே பொம்மைகள் வைத்து விளையாடிக் கொண்டிருந்தது அந்த வீட்டுக் குழந்தை! பரமசிவம் அந்த பொம்மைகளுக்கு மத்தியிலே இருந்த ஒரு யானைப் பொம்மையை எடுத்தார்; வீசி அடித்தார்; பொம்மை சுக்கல் சுக்கலாகச் சிதறியது. குழந்தை அழ ஆரம்பித்துவிட்டது. பரமசிவமோ போன வேகத்தோடு திரும்பி வந்துவிட்டார்.

அவர் ஏன் அந்த பொம்மையை உடைக்க வேண்டும்? அவரது உள்ளத்து மகிழ்ச்சியை உடைத்து நொறுக்கி ஓடையிலே வீசி எறிந்து விட்ட அந்தச் சம்பவம் நினைவுக்கு வந்துவிட்டதா? மறக்க முடியுமா, அவரது மடமை தந்துவிட்ட அந்த மாறாதத் தழும்பை?

கோயில் யானைக்குத் தேங்காய் தரப் பழகிய கண்மணி கண்ணம்மா, ஆண்டவனுக்குப் பணிவிடை செய்வதாக அவர் கருதிப் பூரித்தார் ஆனால் என்ன ஆயிற்று? யானைப் பொம்மையை அவர் வீசி எறிந்து உடைத்ததைப்போல, அவரது அருமந்த குழந்தையை வீசி எறிந்துவிட்டதே, அந்தக் கோயில் யானை...!

வழக்கம்போல அன்றும் பிள்ளையார் கோவிலுக்குச் சென்று திரும்பிக்கொண்டிருந்தார் பரமசிவம், மனைவியுடனும் குழந்தையுடனும்! கோவில் வாசலில் நின்று கையேந்திக்கொண்டிருந்த பிச்சைக்காரச் சிறுமி ஒருத்தியைக் கண்டது கண்ணம்மா. என்ன நினைத்ததோ, என்னவோ தன் கையிலிருந்த தேங்காய், பழம்—எல்லாவற்றையும் அந்தச் சிறுமியின் கையில் போட்டது.

"ஐயையோ!...என்னம்மா இது? யானைக்கு வேண்டாமா?" என்று கேட்டாள் அம்மா.

"யானைதான் தினம் திங்குதே! நாளைக்கு ரெண்டு தேங்கா குடுக்கலாம்!..." என்று 'பொருளாதாரம்' பேசிற்று கண்ணம்மா.

பின் எல்லோரும் வழக்கம் போல் யானையிடம் சென்றார்கள். யானை கண்ணம்மாவைக் கண்டதும் வழக்கம்போல் தும்பிக் கையை வேகமாக நீட்டியது. ஆனால், அவள் கையில் தினம் தவறாது இருக்கின்ற தேங்காயைக் காணோமே!...அதோடு மட்டுமல்ல; தன்னை நோக்கி வந்த தும்பிக் கையை விளையாட்டுக்காகத் தட்டி விட்டது கண்ணம்மா! யானைக்குப் பெரிய ஏமாற்றம்!...அதன் விளைவு?......யாரும் கொஞ்சமும் எதிர்பார்க்காத வண்ணம் கண்ணம்மாவைத் தன் தும்பிக்கையால் வெடுக்கென்று சுற்றித் தூக்கியது!

"ஐயோ!" என்று அலறிக் கொண்டு ஓடினார்கள் சுற்றியிருந்தவர்கள்!

"ஐயோ, கணேச மூர்த்தி!... என் குழந்தையைக் காப்பாற்று!" என்று அலறினார், பரமசிவம்!

குழந்தையைக் காப்பாற்றினாரா, அந்தக் கருணாமூர்த்தி?

கண்ணம்மாவைத் தூக்கிய யானை, 'தான் ஒரு காட்டு விலங்கு; தன் நெஞ்சம் கல்லினும் கொடியது' என்பதை உணர்த்துவதைப் போல, அதை ஆகாயத்திலே ஒரு சுழற்று சுழற்றி—பூமியிலே 'படார்' என்று அடித்தது!

"ஐயோ!" என்று அலறிய கண்ணம்மாவின் தாய் கண்கள் இரண்டையும் பொத்திக்கொண்டாள். மறுகணம் 'தடார்' என்று கீழே சாய்ந்தாள்.

கறுப்புக்கொடி

வழக்குநிதி சிறப்புக் கூட்டம்

★

13—4—58 காலை 9-மணிக்கு செயின்ட்மேரீஸ் மண்டபத்தில் தலைவர் என். எஸ். மூர்த்தி

அறிஞர் அண்ணா,
க. அன்பழகன்
எம். ஏ., எம். எல். ஏ.

ஆகியோர் பேசுவர்.

பொருள்:

"அரசியல் கட்சிகள்"

நன்கொடை: ரூ. 2, 1

மஜீத் படிப்பகம், சென்னை—2.

மறுபடி அவள் கண் விழித்த போது, தான் வீட்டிலே இருப்பதை உணர்ந்தாள். "எங்கே என் கண்மணி?......எங்கே என் கண்ணம்மா?" என்று அலறினாள். யாரும் பதில் பேசவில்லை! குழுமி நின்ற அனைவரது குனிந்த தலைகளுக்கும் என்ன பொருள்?

குழந்தை கண்ணம்மா கண் காணாத இடத்திற்குப் போய்விட்டது! பூமிக்கு அடியிலே புதைந்துவிட்டது, ஆழ்ந்த நித்திரையில்!

தாய் அலறினாள்!

அப்போதுமட்டுமல்ல; இப்போதும்தான்—இனி எப்போதும் தான்!

"ஆராரோ ...... ஆரிரரோ! ...... கண்ணே தூங்கம்மா!......நாளைக்குக் கோயிலுக்குப் போகலாம்!..." என்று அறையின் உளளிருந்து அழுகை கலந்த ஆறுதல் தரப்பட்டது, கல்லுக்கு!

பரமசிவம் உள்ளே நுழைந்தார். பாரதியாரின் படம் எதுரே சிரித்த முகத்தோடு தோன்றியது. அவர் ஏன் சிரிக்கிறார்...என்று யோசிப்பதைப்போல பரமசிவம் மீண்டும் கவனித்தார்.

"கணபதியின் மேல் கணக்கின்றி பாடல்கள் இயற்றினேன்...ஆனால், பழகிய யானை ஒன்றே என்னைக் கீழே உருட்டிவிட்ட சம்பவம் உனக்குத் தெரியாதா, பரமசிவம்? அதிலிருந்துதானே என் ஆயுளின் இறுதிக் கட்டமே துவங்கிற்று? என் வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் படித்துணர்ந்த பரமசிவமே! ஆண்டவன் பெயரைச் சொல்லி உன் அருமை மகவை யானையிடம் பழக விட்டாயே; அந்தப் பைத்தியக்காரத் தனத்தை நினைத்தேன்; சிரித்தேன்!"

—பாரதியார் இப்படித் தன்னைக் கிண்டல் செய்வதாக உணர்ந்தார் பரமசிவம்!

"ஆராரோ...ஆரிரரோ...
ஆரடிச்சா நீ அழுவே?..."

—அறைக்குள்ளிருந்துதாலாட்டு உரத்த குரலில் எழும்பியது!

"ஏ, பைத்தியமே! சும்மா இருக்க மாட்டாயா?......"—பரமசிவம் வேதனை தாங்கமாட்டாது கத்தினார். படுக்கையில் சாய்ந்து விட்டார்.

அந்தத் தாயார்—'பெற்ற பாச'த்தின் வலுவுக்கு எடுத்துக் காட்டாக மாறிவிட்ட அந்த அம்மா—அறைக் கதவைப் படபடவென்று தட்டினாள். பின் மௌனம்...... நீண்ட நேர மௌனம்!...

ஊர் அடங்கிவிட்டது!

நள்ளிரவு—அமைதி தவழ்ந்து கிடந்த அந்த நேரத்தில்...... "ஆராரோ...ஆரிரரோ..." என்ற தாலாட்டு அறைக் குள்ளிருந்து எழும்பியது!

ஏன்?...கண்ணம்மா தூங்கவில்லையா? ஆமாம்; அந்தக் கல்லைத் தூங்கவைக்கும் கடினமான பணியில் ஈடுபட்டிருந்தாள், அந்த சித்தம் கலங்கிவிட்ட அன்னை!

—சொர்ணம்

விழிப்படைய—களிப்படைய—உணர்வடைய
எழுச்சியடைய—சிந்தை குளிர்ந்து—நல்லின்பம் பெற
அனைவரும் விரும்பும் இனிமை நிறைந்த
நாதன் கனிச் சுவை நீரை
அருந்தி மகிழ்ச்சியடையுங்கள்!
நாதன் சோடா தொழிற்சாலை,
100—2, சாலை ரோடு,
உறையூர், திருச்சி-3.

பிறை வானம்

...பிள்ளைகள் பகுதி...

"ஆராரோ...ஆரிரரோ..!"

" ஆராரோ...ஆரிரரோ...
ஆரடிச்சா நீ அழுவ?..."

தாலாட்டு எழும்பியது! பூட்டப்பட்டிருந்த அந்த அறைக்குள்ளிருந்து உரக்கக் கேட்டது.

அறைக்கு வெளியே தலையில் கையை வைத்துக்கொண்டு இங்குமங்கும் நடந்து கொண்டிருந்தார் பரமசிவம். அவர் முகத்திலே துயரத்தின் சாயல்—கலக்கத்தின் நிழல்கள்! ஏதோ சகிக்க முடியாத ஒன்றை சமாளிப்பது போன்ற முகக்குறி தென்பட்டது. அலைந்து அலைந்து அலுத்துவிட்டவர்போல் 'தொப்' பென்று நாற்காலியில் சாய்ந்தார், அவர்.

"ஆராரோ...ஆரிரரோ!...ஐயோ... குழந்தை அழுருளே!...கோயிலுக்கு எடுத்துக்கிட்டுப் போங்களேன்...!

அறைக்குள்ளிருந்து மீண்டும் குரல்....

பரமசிவம் தவித்துக் கொண்டிருந்தார். அவரது கண்களில் நீர் திரையிட்டிருந்தது. ஏன்? அவருக்கு உற்ற கவலை என்ன? அந்தத் தாலாட்டு தடுமாற வைக்கிறதா? அல்லது அதற்குக் காரணமான அந்தக் 'குழந்தை'தான் தத்தளிக்க வைக்கிறதா? பரமசிவத்தின் உள்ளத்தைக் குடைந்து கொண்டிருந்த சோகம் வார்த்தைகளாக வடிவமெடுத்தது! "ஐயோ... தெய்வமே! ... என்னை ஏன் இப்படி வதைக்கிறாய்?..." என்று அலறிவிட்டார்!

உள்ளே தாலாட்டு சப்தம் ஓயவேயில்லை.

பரமசிவம் திடீரென்று நாற்காலியைவிட்டு எழுந்தார். வேகமாக அறையின் சன்னலருகே ஓடினார். உள்ளே எட்டிப் பார்த்தார். அங்கே ஒரு தொட்டில்...அதைப் பிடித்து ஆட்டிக்கொண்டிருக்கும் அவரது மனைவி...ஆனால்...தொட்டிலுக்குள்...?

பரமசிவம் முகத்தைத் தன் இரு கைகளாலும் மூடிக்கொண்டார். சோகத்தை அவ்வளவு எளிதில் மறைத்துவிட முடியுமா, என்ன? அவரது கண்களிலிருந்து வழிந்தோடிய கண்ணீர் இமை சொட்டு சொட்டாக விழுந்து கொண்டிருந்தது. அவர் மீண்டும் அறைக்குள் பார்த்தார். நீர் திரையிட்டிருந்த அவரது கண்களுக்கு அவரது மனைவி தென்பட்டாள், தலைவிரிகோலத்தில்! அவரது மனைவிக்கு என்ன நேர்ந்தது? கருணை ததும்பும் அந்த அம்மாவின் முகம் ஏன் அப்படித் தோன்றுகிறது?

"வாங்க....வாங்க....குழந்தை கோயில் யானைக்குத் தேங்காய் கொடுக்க வேணடாமா?...நேரமாயிற்றே!...சீக்கிரம் தூக்கிட்டுப் போங்க!...ம்... இந்தாங்க!"

—என்று சொல்லிக் கொண்டே அந்தத் தாய் தொட்டிலுக்குள், கையை விட்டாள், 'குழந்தை'யை எடுக்க!

பரமசிவம் அப்போது இரண்டாவது முறையாக அலறினார். அவர் ஏன் அழுகிறார்? குலம் தழைக்க வந்த குழந்தை அவரைக் குமுறச் செய்வானேன்? அவரது சோகம் கப்பிய நிலைக்கும், தொண்டை கிழிய எழுப்புகின்ற கதறலுக்கும் என்ன காரணம்?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை—தொட்டிலிலிருந்து வெளி வந்த அந்த அம்மாவின் கைகளிலே இருந்தது...

குழந்தையல்ல; குழவிக்கல்!

பரமசிவத்தால் அதற்குமேல் அங்கு நிற்க முடியவில்லை. உடல் வெட வெடத்தது; கால்கள் நடுங்கின; கண்கள் இருண்டன; ஓடினார்; நாற்காலியில் மறுபடியும் சாய்ந்து விட்டார்! அவர் தான் மிகவும் பலனைமாகி விட்டதாக உணர்ந்தார். விம்மி விம்மி அழ ஆரம்பித்து விட்டார்.

தொட்டிலிலே குழந்தைக்குப் பதிலாக குழவிக்கல்! அது எங்கிருந்து வந்தது; கல்லைப் பெற்றெடுத்தாள் ஒரு தாய் என்று உலகத்தில் எங்கும் கேள்விப்பட்டதில்லையே என்கிறீர்களா? அந்தத் தாய் பெற்றெடுத்த தென்னவோ தங்கச் சிலை போன்ற அழகுக் குழந்தைதான்! தாயின் வயிற்றில் பிறந்து—மடியில் வளர்ந்து—பூமியில் தவழ்ந்து — பின் தத்தித் தடுமாறி நடந்து—மழலையால் மகிழ்வித்து — பெற்றவர்களைப் பேரின்பம் அடையச் செய்த ஒரே குழந்தை — கண்ணம்மாவைத்தான் பெற்றெடுத்தாள்!

அப்படியானால் அந்தக் கண்ணம்மா இப்போது எங்கே?

பரமசிவத்தின் கண்கள் நிலைகுத்தி நின்றன. எதிரே சுவற்றில் மாட்டப்பட்டிருந்த பாரதியாரின் படத்தை அவர் பார்த்துக் கொண்டே இருந்தார். அதே சமயத்தில்...அவர் காதுகளில் அந்தப் பாடல்...பாரதியார் பாடிய பிள்ளையார் தோத்திரப் பாடல்...எங்கிருந்தோ .... எத்திசையிலிருந்தோ ஒலித்தது.

"எனக்கு வேண்டும் வரங்களை
இசைப்பேன் கேளாய் கணபதி!

கனக்குஞ் செல்வமும், நூறு வயது
இவையும் தரநீ கடவாயே!..."

இந்தப் பாடலை ராகத்தோடு பரமசிவம் எத்தனையோ முறை பாடியிருக்கிறார் பிள்ளையார் கோவில் சன்னதியில்! அவர் மட்டுமா? அவரது அன்புக் குழந்தை கண்ணம்மாவையும் தினம் தவறாது தூக்கிச் செல்வாரே!...மழலை பேசுகின்ற அந்தக் குழந்தை இந்தப் பாடலின் சொற்களை எத்தனை சிதைவுகளோடு சொல்லிச் சொல்லிப் பூரித்திருக்கிறது! பிஞ்சு விரல்களை ஒரு சேரக் குவித்து "பிள்ளையாரய்யா...உனக்குத் தேங்கா தர்றேன்...சாப்பிடு...என்னைக் காப்பாத்து!..." என்று எத்தனை முறை வேண்டிக்கொண்டிருந்திருக்கிறது!...

ஆனால் அந்தக் குழந்தை இப்போது எங்கே?...

பரவசிவத்தின் மனக் கண்முன்னால் அந்தப் பழைய சம்பவங்கள்... நெஞ்சிலே பாறுங் கல்லைத் தூக்கி வீசிவிட்ட அந்த நிகழ்ச்சிகள்... ஒன்றன்பின் ஒன்றாகக் காட்சியளித்தன.......

செல்வம் இருந்தது; செழிப்பான நிலம் இருந்தது—மாளிகை இருந்தது; மணம் வீசும் தோட்டம் இருந்தது— எல்லாம் பரமசிவத்திடம்தான்! ஆனால்......இத்தனையும் இருந்தென்ன? எள்ளத்தனை மகிழ்ச்சிகூட அவருக்குக் கிடையாது......காரணம்? குழந்தைச் செல்வம் இல்லாத பெரும் குறை அவரது வாழ்வில் நிரந்தரமான சோகத்தை உண்டாக்கி விட்டது.

பூஜை நடத்தினார்; பிரார்த்தனை புரிந்தார்; புத்திரப் பேறுக்காக ஸ்தலங்கள் பல சுற்றினார்.

அவர் மட்டுமல்ல; அவரது மனைவியும் கால் கடுக்கச் சுற்றினாள். 'க்ஷேத்திரங்கள்' சென்று வந்ததை மட்டும் சொல்லவில்லை; ஊர்க் கோடியிலிருந்த அரச மரத்துப் பிள்ளையாரைப் பல ஆயிரம் முறை சுற்றியிருப்பாள். குழந்தை பிறந்தால் பிள்ளையாருக்குப் புதிய கோவில் கட்டி 'பிரதிஷ்டை' செய்வதாகவும்கூட வேண்டிக் கொண்டாள்.

கடைசியில்தான் கண்ணம்மா பிறந்தது! அது பிள்ளையார் பிரார்த்தனையின் பலனோ என்னவோ; நிச்சயமில்லை. ஆனால் பிள்ளையாருக்கு மட்டும் நிச்சயம் பலன் கிடைத்து விட்டது! அவர் பணக்காரராகி விட்டார்! அந்த அரச மரத்துவாசி, பரமசிவத்தின் 'உபய'த்தால் ஒரு கோவிலுக்கும், ஒரு கோவில் யானைக்கும் சொந்தக்காரராகி விட்டார்!

பெற்றோர் மகிழ்ச்சியால் திளைத்தனர். பிள்ளையாரின் 'அனுக்கிரகம்' தந்த செல்வமான காரணத்தால், குழந்தைக்கு கணபதி 'ஸ்தோத்திரம்' தவழும் பருவத்திலேயே போதிக்கப்பட்டு விட்டது!

பரமசிவத்திற்கு பாரதியாரின் பாடல்கள் என்றால் ஐம்பது சதவிதம் பிடிக்கும். அதாவது அவர் பாடிய முன்னேற்றக் கருத்துள்ள பாடல்களைக் கேட்டால் காதைப் பொத்திக் கொள்வார். ஆனால் கடவுள் வணக்கப் பாடல்களை மட்டும் ரசிப்பார்; பாடுவார். அதனால்தான் தன் பெண் மகவுக்குக்கூட கண்ணம்மா என்று பெயர் வைத்தார். அது பாரதியாருக்கு மிகவும் பிடித்தமான பெயரல்லவா?

பரமசிவத்தின் கண்கள் மீண்டுமொரு முறை பாரதியாரின் படத்தில் பதிந்தன. ஆனால் அதே நேரத்தில் அறைக்குள்ளிருந்து எழும்பிய தாலாட்டு அவர் நெஞ்சில மீண்டும் தணலைக் கொட்டி விட்டது!

"கண்ணம்மா..." என்று வாய்விட்டு அழ வேண்டும் போலிருந்தது அவருக்கு!

கண்ணம்மாவின் குறும்பு தவழும் முகமும், அங்கு மிங்கும் ஓடி அலைந்து கொண்டிருக்கும் கண்களும், துரு துருத்த கரங்களும் அவர் கண்முன் திடீரென்று தோன்றின.

பிள்ளையார் கோவிலுக்குச் செல்வதில்தான் அதற்கு எத்தனை ஆசை! அப்பா, அம்மா இருவர் கைகளையும் பிடித்துக் கொண்டு கோயில் பிரகாரத்தைச் சுற்றிச் சுற்றி வருவதில்தான் அதற்கு எவ்வளவு மகிழ்ச்சி! அப்படி தினம் தவறாது சென்று கொண்டிருந்த சமயத்தில்தான் ஒருநாள்...

கையிலே தேங்காய், பழம், பூ ஏந்தி கோவிலிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தனர் பரமசிவமும், அவரது மனைவியும். இடையில் கண்ணம்மாவும் வந்துகொண்டிருந்தது. கோவில் வாசலில் கோவிலுக்குச் சொந்தமான பெரிய யானை நின்று கொண்டிருந்தது. அதைச் சுற்றி அநேகர் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். குழந்தையும் பார்க்கட்டுமே என்று அருகில் அழைத்துச் சென்றார் பரமசிவம். ஆனால் அந்த யானை என்ன நினைத்ததோ, தன்னையே வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்த கண்ணம்மாவின் பக்கம் தும்பிக்கையை நீட்டியது. கண்ணம்மா ஏனோ பயப்படவில்லை; பக்கத்திலேயே அப்பா, அம்மா நிற்கும் போது என்ன அச்சம்? உடனே கண்ணம்மா "அப்பா!...அப்பா!... அந்தத் தேங்காயை எங்கிட்டக் குடு!..." என்று கேட்டது. பரமசிவம் அதன் கையில் கொடுத்தார். கண்ணம்மா தேங்காயை வாங்கியது. யானையின் பக்கம் நீட்டியது. யானை தும்பிக்கையால் அதை வாங்கிக்கொண்டது. தின்ன ஆரம்பித்துவிட்டது. அதைக் கண்ட மற்றவர்கள் ஆச்சரியப்பட்டனர். கண்ணம்மா கைகொட்டிச் சிரித்தது.

ஆனால், அதனுடைய அம்மாவோ..."அடி, என் கண்ணே! ஆண்டவன் உன் உணவுக்கு ஆசைப்பட்டு விட்டாரடி! ...அதனால்தான் கையை நீட்டி வாங்கிக் கொண்டார்!......கணேசமூர்த்தி! உன் கருணையே கருணை!" என்று யானையைப் பார்த்து கன்னத்தில் போட்டுக்கொண்டார்!

அன்று முதல் தினந்தோறும் அந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டு வந்தது. கையில் தேங்காயுடன் தவறாது எதிரே நிற்கும் கண்ணம்மா; யானையும் தவறாது வாங்கிக் கொள்ளும்...இந்த நிலையும் தவறாது நடந்திருந்தால் பரவாயில்லையே!...

பாரதியார் வாழ்க்கை முழுவதும் பலமுறை பாடித்திருப்பார் பரமசிவம். அவரது வாழ்க்கையின் இறுதிக்கட்டம் எப்படி ஏற்பட்டது?...

[தொடர்ச்சி பக்கம்—16]

விழிமூடிய மொழி வெறியர்களுக்கு கிருஷ்ண மேனன் தரும் விளக்கம்!

இந்தியத் துணைக் கண்டத்தில் இந்தி ஆட்சி மொழியாவதை எதிர்ப்பவர்கள் தெற்கே இருப்பவர்கள் மட்டுமேதான்; அங்கும் மிகமிகச் சிறுபான்மையினர்தான் — என்று அலட்சியப்படுத்தும் பண்பில் வடக்கேயிருந்து அப்போதைக்கப்போது பேசப்பட்டு வருகிறது.

அந்த விருப்பமின்மைக்கும் காங்கிரஸ் எதிர்ப்பு'தான் காரணம்—ஆளும் கட்சியைப் பிடிக்காத எதிர்க் கட்சியினர்தான் இந்தி நுழைவை வெறுக்கிறார்கள் — என்றும் காரணம் கற்பித்தார்கள், வட நாட்டிலே தினந்தோறும் தோன்றிக் கொண்டிருக்கும் இந்தி வெறியர்களின் தலைவர்கள்!

கட்சி அடிப்படையில் எழுந்ததல்ல இந்த எதிர்ப்பு—நாட்டிலே குழப்பமும், பிற மொழியின்மீது ஆதிக்கமும் கூடாது என்று விரும்புகின்ற நல்ல நெஞ்சு படைத்தவர்கள் எடுத்துக் காட்டும் உண்மை அதுவாகும்—என்று அங்கிங்கெனாதபடி எங்கும் வியாபித்துவிட்ட அந்த எதிர்ப்பு இன்று பறைசாற்றுகிறது!

அதை மெய்ப்பிக்கும் வண்ணம்தான் காங்கிரஸ் கோட்டைக்குள்ளேயிருந்தே, கோணல வழி செல்லுகின்ற மொழி வெறியர்களுக்கு அறிவுரை தரப்படுகிறது, இன்று!

மேற்குவங்க முதல்வர்—காங்கிரஸின் தூண்களில் ஒருவர் —இந்தித் திணிப்பு அபாயகரமானது என எச்சரிக்கை விடுத்தார்; சட்ட மன்றத்திலே தீர்மானமும் போட்டு மேற்கு வங்கத்திலே இந்திக்குச் சாவு மணி அடித்து—சவக் குழி தோண்டப் போர்க் கோலம் பூண்டு நிற்கிறார்!

மொழி வெறியர்களுக்கே இந்தச் சம்பவம் சஞ்சலத்தைத் தோற்றுவித்திருக்கிறது!

வடக்கு — தெற்கு என்ற வேறுபாடின்றி இந்திய உபகண்டத்தின் ஒவ்வொரு மூலையிலும் கிளை விட்டுக் கிளம்புகின்ற இந்த எதிர்ப்பு திகிலையும் உண்டுபண்ணியிருக்கிறது!

இருந்தாலும் மக்களது வாயைக் கட்டிப்போட அவர்கள் இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தை அடிக்கடி துணைக்கு இழுத்துக் கொண்டு வருகிறார்கள்!

"பாரத நாட்டில் இந்தி ஒரே தேசிய மொழியாகத்தான் வேண்டும்—

"ஆங்கிலத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டு வந்து ஒழித்தே விட வேண்டும்—"

—என்று நாங்கள் சொல்லவில்லை; இந்திய அரசியல் நிர்ணயச் சட்டம் கூறுகிறது! என்ன செய்வது? அதிலே பொறிக்கப்பட்டு விட்டதே, அப்படி!

இப்படி நீலிக் கண்ணீர் சிந்தி —மக்களை அவர்கள் அறியா வண்ணம் சட்டத்தால் கட்டிப் போடக் கருதுகிறது ஆட்சி பீடம்!

அதன் விளைவாகத்தான் "மக்களுக்காகச் சட்டமா? சட்டத்திற்காக மக்களா?" என்ற வினாக் குறி இன்றைய தினம் எழும்பியிருக்கிறது!

அதற்குப் பதில் சொல்லும் விதத்தில்தான், காங்கிரஸ் கூடாரத்திலிருந்து இன்று மற்றுமொரு குரல் கேட்கிறது!

"பார்லிமெண்ட் சட்டத்தை கவுரவிக்க வேண்டியதுதான். ஆனால் அதே சட்டத்தை சட்டப் பூர்வமாகவும் பார்லிமெண்ட் மூலமாகவும் மாற்றவும் உரிமை உண்டு..."

அரசியல் நிர்ணய சட்டத்தின் மேல் பழிபோட்டு — மற்றவர்களது விழிகளில் மண் தூவி —இந்திக் குழிக்குள் தள்ள நினைப்பவர்களுக்குப் பதிலாகத்தான் இந்தக் கணீரென்ற குரல் எழும்புகிறது!

அதுவும் கூலிக்குக் குரல் விற்றுத் திரியும் சாதாரண கதர்க் குல்லாய் அல்ல, இப்படிச் சொல்லியிருப்பது!

உலகத்தின் எத்திசையிலும் எழும்புகின்ற குரல் — ஐக்கிய நாட்டுச் சபையிலே மணிக் கணக்கில் பேசுகின்ற குரல்— இந்தியாவின் சார்பிலே உலக வல்லரசுகளோடு வாதிடுகின்ற மத்திய மந்திரி ஒருவரின் குரல் அது...!

'இந்தியாவின் பறவை' திரு வி. கே. கிருஷ்ண மேனன்தான் இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்!

ஆங்கிலம் உலகத்தோடு ஒன்றிவிட்ட மொழி — இந்திய மண்ணிலே ஊறிப்போன மொழி—அதை விரட்டிவிட்டு அந்த இடத்திலே இந்தியை உட்காரவைப்பது அவ்வளவு சுலபமல்ல; விவேகமுமல்ல— என்ற பொருளில் அவர் மேலும் குறிப்பிடுகிறார்:

"ஆங்கிலம் ஆங்கிலேயர்களுக்கு மாத்திரமே சொந்தம் என்று கருதிவிடக் கூடாது. அது சர்வ தேச மொழி என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். விஞ்ஞானம், ராஜீய விவகாரங்களில் அம்மொழி முக்கிய பங்கு வகிக்கிறது. உலகில் விஞ்ஞானத்திலும் தொழில் நுணுக்கத்திலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைப் பார்க்காமல் நாம் கண்களை மூடிக்கொள்வது விவேகமல்ல. ஆகவே அரசியல் நோக்கத்துடன் ஆங்கிலமே ஆட்சி மொழியாக நீடித்திருக்க நான் புத்திமதி கூறுகிறேன்!"

—என்று ஆமதாபாத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் பேசியிருக்கிறார். சிறப்பேதுமற்ற இந்தியின் கையிலே செங்கோலைத் தந்து விடாதீர்கள் என்று 'புத்திமதி' சொல்லியிருக்கிறார்!

அப்படித்தான் செய்ய வேண்டும் என்று அரசியல் நிர்ணயச் சட்டம் ஆணையிட்டால், அதற்காக நாம் விழிகளை மூடிக் கொள்ள வேண்டாம்; விவேகமிழக்க வேண்டாம்; சட்டத்தையே மாற்றிவிடலாம் என்று நல்ல யோசனையும் தருகிறார், அதைத் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தி வரும் ஆட்சி பீடத்திலிருப்போரைப் பார்த்து!

அப்போது அவர் மேலும் குறிப்பிட்டார், "இந்தியில் எனக்கு ஒரு வார்த்தைகூடச் சரியாகத் தெரியாது" என்று!

பண்டிதரின் அமைச்சர் கொலுவிலே பிரதான அங்கம் வகிப்பவர்—இந்தியாவின் பெருமையை உலகெங்கும் பறைசாற்றுகின்ற 'ஒலி பெருக்கி'— அவர்தான் குறிப்பிடுகிறார், இந்தியாவின் ஒரே தேசிய மொழியில்—ஒரே ஒரு வார்த்தைகூட தனக்குச் சரியாகத் தெரியாது என்று!

அவருக்கு நன்றாகத் தெரியும், தேம்ஸ் நதி தீரத்திலே இந்தி மொழிக்கு மதிப்பு கிடையாது! ஐசனோவருடன் உரையாடும் நேரத்திலே இந்தி பயன்படாது! அகிலத்தின் எந்த மூலைக்குச் சென்றாலும் ஆங்கிலம் மட்டும் இருந்தால் தப்பிவிடலாம்— என்ற உண்மை!

ஆகவேதான், தன் அருகிலேயே அமர்ந்திருக்கும் மொழி வெறியர்களுக்கு மறைமுகமாக அறிவுறுத்தும் விதத்திலே பேசியிருக்கிறார், "ஆங்கிலமே நீடிக்க வேண்டும் ஆட்சி மொழியாக!...அதற்கு தடை போட்டால், மாற்றி அமைப்போம் அந்த அரசியல் நிர்ணயச் சட்டத்தை!" என்று!

கண்களை மூடிக்கொண்டு காட்டு வழியில் ஓடுகின்ற மொழி வெறியர்களின் விழி திறக்க இந்த சொறகள் உதவட்டும்—என்பதே நல்லோர் விருப்பம்!

சத்தான கருத்துக்கள்—
வித்தகர் பேருரைகள் நிறைந்த
இலக்கியப் பேரிதழ்...
திசை எட்டும் புகழ் பரப்பும்
தீந்தமிழ்க் கருவூலம்!

முத்தாரம்

புலவர் குழந்தை
பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை
கே. ஏ. மதியழகன்
நாஞ்சில் கி. மனோகரன்
கவிஞர் வாணிதாசன்
ஆகியோரின் எழுத்தோவியங்கள்!

முத்துக் குளித்தல்

கடல் மாதாவின் மடியிலே புதைந்து கிடக்கும் திராவிடத்து முத்து, நீருக்குள்ளிருந்து பாருக்குப் பயன்படும் விதத்தினை விளக்கும் அறிவியல் கட்டுரை!

பிரிவு

விதேசிப் போரில் தங்களது தலைகளை விலையாகத் தந்து விட்ட இரு ஜப்பானியச் செம்மல்களின் பிரிவு தாங்காது தவிக்கும் ஒரு பெண்ணின் வாழ்க்கை—இது ஒரு சீனக் கதை!

இத்தனையும் உண்டு — சத்தனைய இன்னும் பல உண்டு!

ஆசிரியர் மு. க. வின்
எழுத்தோவியத்தோடு
ஏப்ரல் 10-ம் தேதி கிடைக்கும்.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு தமிழ்நாடு, சென்னை-6